படங்களுடனான

முஹம்மத் ﷺ கையேடு

தமிழ்

WORLDWIDE BEST-SELLER

# இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் ﷺ

இஸ்லாமிய நாகரீகத்தின் ஒழுக்க
நெறிமுறைகளை உள்ளடக்கிய
வாழ்க்கை வரலாறு மற்றும்
படங்களுடனான கையேடு.

# முஹம்மத்

Osoul Center
www.osoulcenter.com

GUIDE TO ISLAM
GuideToIslam.com

முதல் தமிழ் பதிப்பு

"(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை."

திருக்குர்ஆன், 21:107

## இஸ்லாத்தின் இறைத்தூதர்

# முஹம்மது ﷺ

# MUHAMMAD ﷺ

இஸ்லாமிய நாகரீகத்தின் ஒழுக்க நெறிமுறைகளை உள்ளடக்கிய வாழ்க்கை வரலாறு மற்றும் படங்களுடனான கையேடு.

முதல் தமிழ் பதிப்பு

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

MUHAMMAD POCKET GUIDE

வெளியீடு
உஸூல் குளோபல் சென்டர் (Osoul Global Center)

பதிப்புரிமை © உஸூல் குளோபல் சென்டர், 2017
(Copyright © Osoul Center, 2019)

இந்த புத்தகம் உஸூல் குளோபல் சென்டரால் (Osoul Global Center) தயாரிக்கப்பட்டது. இதனுள் உரிமைகள் பெற்ற மற்றும் பொது மூலங்களில் இருந்து எடுக்கப்பட்ட வடிவமைப்புகள் மற்றும் புகைப்படங்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.

உஸூல் குளோபல் சென்டரிடம் முறையான தகவல் அளித்த பின்னர் மூல ஆதாரங்களைக் குறிப்பிட்டு, உரையில் மாற்றம் செய்யாமல், நிறுவனத்தால் நிர்ணயிக்கப்பட்ட அச்சு தரநிலைப்படி இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட அனைத்து இஸ்லாமியர்களுக்கும் உஸூல் குளோபல் சென்டர் அனுமதி அளிக்கின்றது.

குவைத் (Kuwait) நாட்டிலுள்ள கே.ஹெச்.டி. (KHT) அச்சகத்தால் அச்சிடப்பட்டு பிணைக்கப்பட்டது.
புத்தகம் மற்றும் உறை வடிவமைப்பு - டெய்லர் & டோக்ளாவ் (Taylor & Toglaw)

பின்னூட்டம் மற்றும் தகவல்களுக்கு கீழுள்ள மின்முகவரிகளில் அணுகவும்

nasirudeen2001@gmail.com
muhammadpocketguide@gmail.com
www.guidetoislam.com
asiffhusseim@gmail.com

முதல் தமிழ் பதிப்பு, 2019
(First Tamil Print, 2019)

GUIDE TO ISLAM
GuideToIslam.com

www.guidetoislam.com

Tamil translation of the book titled

The Prophet of Islam

# MUHAMMAD ﷺ

A Biography and Pictorial Guide, Featuring His Teachings that Set the Moral Bases of the Islamic Civilization

by Dr. Sam Deeb
Osoul Center

Translated by
Meer Nasirudeen

# முக்கிய குறிப்புகள்

முஹம்மது அவர்களின் பெயர் உச்சரிக்கப்படும் பொழுது "ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று இஸ்லாமியர்கள் கூறுதல் வேண்டும். அரபி மொழியில் அது பின்வருமாறு எழுதப்படுகின்றது ﷺ.

இஸ்லாமியர்கள், இந்த பிரபஞ்சம் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள அனைத்தையும் படைத்த, "அல்லாஹ்" எனும் ஓரிறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த கையேட்டில் "இறைவன்" அல்லது "கடவுள்" என்று குறிப்பிடப்பட்டு இருந்தால் அது மிகவும் உயர்ந்தவரும் மகிமைப்படுத்தப்பட்டவருமான அல்லாஹ்வையே குறிக்கும்.

இக்கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் ஆசிரியரின் திறனுக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது. வாசகர்கள் கீழுள்ள மின்னஞ்சல் முகவரியில் அவரை தொடர்பு கொள்ளலாம்.

muhammadpocketguide@gmail.com

"எனக்கும் எனக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களுக்கும் உள்ள ஒற்றுமை யாதெனில், ஓர் அழகிய இல்லத்தைக் கட்டி, அதில் ஒரேயொரு செங்கலுக்கான இடத்தை மட்டும் காலியாக விட்ட ஒரு மனிதரைப் போன்றாகும். அவ்வீட்டைக் காண்பவர்கள், அதன் அழகில் பிரமிப்படைந்து "அந்த ஒரு செங்கல்லையும் கட்டி இருந்தால் எவ்வளவு அற்புதமாக இருக்கும்" என்று கூறுவர். நானே அந்த ஒற்றைச் செங்கல், மேலும் நானே இறைத்தூதர்களில் இறுதியானவன் ஆவேன்"

இறைத்தூதர் முஹம்மது (அவர் மீது சமாதானம் உண்டாவதாக)

(புகாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது 4 - 734,735)

# அறிமுகம்

புகழ் அனைத்தும் இந்த பிரபஞ்சத்தையும் அதில் உள்ளடங்கியவற்றையும் படைத்த அல்லாஹ்வுக்கே. அவனே மனிதனைப் படைத்து அம்மனிதனுக்கு செவித்திறன், பார்வைத்திறன் மற்றும் சிந்தனைத்திறனை அளித்தான். அவனே அம்மனிதனை இவ்வுலகில் இறக்கி குழப்பங்கள் உண்டாக்காமல் அதனை கட்டமைக்கும் பொறுப்பையும் அளித்தான். இவ்வுலகில் இறைவனையே வணங்கி அவனது மார்க்கத்தை நிறுவவேண்டும். மிகத் தெளிவான கட்டளைகளை உள்ளடக்கியுள்ள இறைவனது மார்க்கத்தில் மக்களை நற்செயல்கள் செய்யவும் தீய்மையானதும் அருவருக்கத்தக்கதுமான செயல்களை விட்டுவிலகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நியாத்தீர்ப்பு நாளை முன்னோக்கியுள்ளதும் மரணத்திற்கு பின்னரான நித்திய வாழ்விற்கான பாலமாகவும் உள்ள இவ்வுலக வாழ்வானது குறுகியதாகவும் தாற்காலிகமானதுமாக நமது படைப்பாளன் படைத்துள்ளான். அந்நாளில் நன்மை செய்தவர்களுக்கு வெகுமதியும் தீமை செய்தவர்களுக்கு தண்டனையும் இறைவன் அளிப்பான்.

வரலாற்றுப்படி, படைப்பாளனை நோக்கி வழிநடத்தவும் தங்களது படைப்பிற்கான காரணத்தை அறிந்துக்கொள்ளவும் நூஹ் (Noah) (அலை), இப்றாஹீம் (Ibrahim) (அலை), மூஸா (Moosa) (அலை), ஈஸா (Eesa) (அலை) மற்றும் முஹம்மது (Muhammad) ﷺ போன்ற பல தூதர்களை மக்களிடத்தில் இறைவன் அனுப்பியுள்ளான்.

இருப்பினும், இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் தனித்துவமான பண்புகளுடன் அறியப்பட்டார். மனிதயினத்திற்கான இறைவனின் இறுதி வெளிப்பாடான தனது திருக்குர்ஆனில் பாதுகாத்துள்ள தனது இறுதிச் செய்தியை மக்களிடத்தில் போதிக்க முஹம்மது ﷺ அவர்களைத் தேர்ந்தெடுத்தான். மேலும், நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை, இறைவனின் கட்டளைகளைப் பின்பற்றுவதற்கு ஒரு நடைமுறை எடுத்துக்காட்டாகவும்

இருந்தது. மேலும், நபி அவர்களது போதனைகளானது, இறைவனின் கட்டளைகளைத் தீர்க்கமாக பின்பற்றினால், மனித இனத்திற்கு நன்மை பயக்கக்கூடியதும் அமைதியை நிலைநாட்டுவதுமாய் இருக்குமென்பதை எடுத்துக்காட்டும் விதமாய் இருந்தது. இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் கட்டமைத்த நாகரீகமானது மனித இனத்தின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த அடித்தளமாக அமைந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

இன்றைய காலகட்டத்தில், சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் காரணங்களால் ஏற்படுகின்ற இக்கட்டுகளினாலும் இயற்கை சீற்றங்களால் ஏற்படுகின்ற பேரழிவுகளாலும் பாதிக்கப்படும் மக்கள் தாங்கள் பாதுகாப்பான முறையில் வாழ்ந்திட வழிவகைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

லட்சோபலட்சம் மக்களின் இதயங்களில் ஒளியேற்ற, ஒசுல் சர்வதேச நிலையம் (Osoul Global Center) இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் போதனைகளையும் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது. முஹம்மது (ஸல்) அவர்களின் சகாக்களும் அவர் காட்டிய வழியில் நடந்தவர்களும் உலகை வென்று நீதியை நிலைநாட்டி, ஈகைக் குணத்தையும் கருணையையும் நிலைநாட்டினர்.

வன்முறை மற்றும் தீவிரவாதங்களால் நிறைந்துள்ள தற்போதைய சூழலானது, முஹம்மது ﷺ அவர்களையும் அவரது போதனைகளையும் தவறாக சித்தரிக்கின்றது. அங்கீகரிக்கப்பட்ட சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தினை வாசிக்கும் இஸ்லாமியர் அல்லாத வாசகர்கள், முஹம்மது ﷺ அவர்களது உண்மையான போதனைகளைப் புரிந்து நடுநிலையோடு நடக்குமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

இப்புத்தகத்தைக் கவனமாக படித்து முஹம்மது ﷺ அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பிரதிபலித்தால், நீதமான முடிவுக்கு வர இயலும். "(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை" என அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். (திருக்குர்ஆன் 21:107)

நேர்வழியிலும் உண்மையின் பாலும் நம்மை வழிநடத்துமாறு இந்த பிரபஞ்சத்தையும் அதில் உள்ளடங்கியவற்றையும் படைத்த எல்லாம் வல்ல இறைவைனைப் பிரார்திக்கின்றோம்.

உஸூல் சர்வதேச நிலையம் (Osoul Center)

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

Special thanks and gratitude to the following organizations for their kind support and cooperation on the English Edition:

Al Madinah Research and Studies Center, Saudi Arabia

Ministry of Awqaf (Endowments) and Islamic Affairs, Kuwait

Islamic Affairs and Charitable Activities Department
Dubai - UAE

Ministry of Awqaf, and Islamic Affairs, Jordan

Islamic Religious Council of Singapore

Department of Islamic Development, JAKIM, Malaysia

Ahmed Al-Fateh Islamic Center, Bahrain

Ministry of Religious Affairs Indonesia

# பொருளடக்கம்


1. நற்சான்றுப் பதிவுகள் 14
2. முஹம்மது(ஸல்) அவர்களின் பண்புகள் 20
3. வாழ்க்கை வரலாறு 26
4. நபியவர்களும் நபித்துவமும் 64
   - இறைவெளிப்பாடு
   - இறைச்செய்தி
   
   இஸ்லாத்தைப் பற்றி சுருக்கமாக
   - ஓரிறை, ஓர் செய்தி
   
   இப்ராஹீம், மூஸா, ஈஸா மற்றும் மற்ற நபிமார்களுடனான முஹம்மது அவர்களின் தொடர்பு
   
   இஸ்லாமிய பல்கலைக்கழகம் (செய்தி)
5. இஸ்லாமிய நாகரிகம், மதிப்பு மற்றும் ஒழுக்கம் 106

   அன்பு, அமைதி, சமாதானம், அறிவுத்திறன், விளையாட்டு, சுய பராமரிப்பு மற்றும் மேம்பாடு, ஊழலை அகற்றுதல், அண்டை வீட்டார் மற்றும் மாற்று மதநம்பிக்கையாளர்களை மதித்தல் போன்ற செயல்களால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரித்தல்.
6. பெண்கள் 136
   - பெண்களின் உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் அவர்களை நடத்தும் வழிமுறைகள்
   - பலதார மணம் பற்றி இறைவனின் கட்டளைகள்.

7. மனித உரிமைகள் 152
- சுதந்திரம் மற்றும் சமத்துவம்
- நீதியின் வரையறைகள் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
- மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல்

8. சுற்றுச்சூழல் 166
- பசுமையான சுற்றுச்சூழலை வலியுறுத்தல்
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்
- விலங்குகளை நடத்தும் நெறிமுறைகள் மற்றும் ஹலால் உணவு

9. அற்புதங்கள் 176
- திருக்குர்ஆன் - ஓர் இறை அற்புதம்
- திருக்குர்ஆனில் உள்ள அறிவியல் உண்மைகள்

10. முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகள் 190
பல்வேறு பிரச்சனைகள் குறித்து முஹம்மது ﷺ அவர்களின் போதனைகள்

11. முடிவுரை 204

12. இஸ்லாமிய கலை, சித்திரமொழி மற்றும் கட்டிடக்கலை 216
- இஸ்லாமிய கலை மற்றும் சித்திரமொழி
- உலகளவில் உள்ள இஸ்லாமிய கட்டிடக்கலை மற்றும் சுற்றுலா தளங்கள்

குறிப்புகள் 224















அரபி மொழியில் "முஹம்மது" எனும் வார்த்தைக் குவிமாடத்தினை இடையில் கொண்ட பள்ளிவாசலின் மேற்கூரையைப் போன்று தோற்றமளிக்கக் கூடியதாக கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. "முஹம்மது" எனும் வார்த்தையிலுள்ள "ஹ" எனும் எழுத்தினையே இந்த குவிமாடம் குறிக்கின்றது. "இறைத்தூதர்" எனப் பொருள்படும் "ரசூலுல்லாஹ்" எனும் வார்த்தை கீழ்ப்பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"முஹம்மது" எனும் வார்த்தை அரபி மொழியில் ஆறு முறை சித்திரமொழியில் எழுதப்பட்டு அறுங்கோணம் அமைக்கப்பட்டுள்ளது.

உருவாக்கம்: ஃபாரித் அல்-அலி

*அரபி மொழியில் "முஹம்மது" எனும் வார்த்தை, தனது நற்செயல்களுக்காக மிகவும் பாராட்டப்படக்கூடிய ஒரு நபரைக் குறிக்கும். எனவே அவர் மிகவும் போற்றுதலுக்குரிய நபராவார்.*

அத்தியாயம்

1

# நற்சான்றுப் பதிவுகள்





## ஜோன் அடைர்
## (John Adair)

"The Leadership of Muhammad (முஹம்மதுவின் தலைமைத்துவம்)" எனும் நூலின் ஆசிரியர். (தலைவர், தலைமைத்துவ கற்கைகள் பிரிவு, ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்கள் தலைமைத்துவ கல்லூரி, தூரின்)

"தலைமைத்துவத்தின் இயல்பு மற்றும் நடைமுறைப் பற்றி உலகளாவிய உண்மையென நாம் அறிந்துள்ள தலைமைத்துவம், முஹம்மது ﷺ நபியவர்களின் வாழ்வின் பல்வேறு இடங்களில் அப்படியே காணக்கிடைக்கின்றது. தலைமைத்துவத்தின் இத்தகைய சீரிய உதாரணமாக முஹம்மது ﷺ அவர்கள் திகழ்கிறார்கள் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளமுடியும்"



## வில்லியம் மோன்ட்கோமெரி வாட்
## (William Montgomery Watt)

(1909-2006) ஸ்கொட்டிஷ் வரலாற்றாசிரியர் மற்றும் எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் அரபி மற்றும் இஸ்லாமிய கற்கைகள் எடின்பேஜ் பேராசிரியர். "மக்காவில் முஹம்மது" எனும் நூலின் ஆசிரியர், Oxford, 1953, p. 52

"தனது மார்க்கத்திற்காக இன்னல்களைச் சந்திக்க அவரிடமிருந்த தயார் நிலையும், அவரைத் தலைவராக ஏற்ற மக்களின் உயரிய தார்மீகத் தன்மையும் அவரது சாதனையைப் பறைசாட்டுகின்றது. மேற்கத்திய நாடுகளில் வரலாற்றின் மிகப்பெரிய நபர்கள் யாரும் முஹம்மதுவைப் போல் மதிக்கப்பட்டதில்லை."



## மகாத்மா காந்தி (Mahatma Gandhi)

(1869 - 1948) இந்திய விடுதலை இயக்கத்தின் அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைவர்

“கோடானகோடி மக்களின் மனதிலுள்ள மறுக்கமுடியாத செல்வாக்கு நிறைந்த மனிதர் யாரென்று தெரிந்துக்கொள்ள விரும்பினேன். அந்நாட்களில் மக்களின் வாழ்வில் இஸ்லாம் பரவியதற்கு காரணம் வாள் அல்ல, முஹம்மது நபியின் எளிமை, பெருந்தன்மை, தனது உறுதிமொழிகளை அவர் திடமாக காப்பாற்றியது, தனது நண்பர்கள் மற்றும் தனது சகாக்களிடம் அவர் காட்டிய கனிவு, கடவுளிடமிருந்த திடமான நம்பிக்கையே காரணம் என்பதை நான் மனதார நம்புகிறேன். அவரது சுயசரிதையின் இரண்டாவது பாகத்தை நான் படித்து முடித்த பொழுது, அந்த மாமனிதரின் வாழ்க்கையைப் பற்றி மேலும் படிக்க என்னிடம் ஏதும் இல்லையே என மிகவும் வருந்தினேன்.”



## அல்ஃபோன்ஸ் டி லமார்டின் (Alphonse de Lamartine)

(1790 - 1869) ஃபிரான்ஸ் நாட்டின் கவிஞர், எழுத்தாளர் மற்றும் அரசியல்வாதி. Historie De La Turquie (ஹிஸ்டரி டி லா டர்கி), பாரிஸ், 1854, பாகம் II, பக்கம் 276-277

“தத்துவஞானி, பேச்சாளர், தூதுவர், நாடாளுனர், போர்வீரர், கருத்துக்களின் களஞ்சியம், மூடநம்பிக்கைகளின் களையெடுப்பாளர், உருவங்கள் இல்லாத வழிப்பாட்டு முறையாளர், 20 நிலப்பிரபுத்துவ பேரரசுகள் மற்றும் ஓர் ஆன்மீக பேரரசின் நிறுவனர், இவை அனைத்து சிறப்புகளையும் கொண்டவர்தான் முஹம்மது. ஒரு மனிதனின் மேன்மையை நிர்ணயிக்கும் நமக்குத் தெரிந்த அனைத்தையும் கொண்டு அளந்தாலும், அவரை விட மேன்மைப் பொருந்திய மனிதர் உண்டோ என நாம் வினவலாம்”



## வில்லியம் டுரான்ட்
(William Durant)

(1885-1981) அமெரிக்க வரலாற்றாசிரியர், தத்துவஞானி மற்றும் "The Story of Civilisation" (நாகரீகத்தின் கதை) எனும் நூலின் ஆசிரியர், பகுதி-4, பாகம்-4, பக்கம் 25

"அவரது பெயரின் அர்த்தம், "மிகவும் பாராட்டப்படுபவர்", என்பதே அவரது வருகையைக் கணித்த சில விவிலியப் பத்திகளை மெய்ப்படுத்துகிறது. முஹம்மது சுயமாக எதையும் எழுதியது கிடையாது. அவரின் வெளிப்படையான கல்வியறிவின்மை அவர் அரபு மொழியில் மிகவும் பிரபலமான சொல்திறமிக்க புத்தகத்தை எழுதுவதற்கோ மெத்தப்படித்த கல்வியாளர்களிடமே அரிதாக இருக்கும் மக்களை ஆளும் ஆளுமைத் திறனைப் பெறுவதற்கோ ஒரு தடையாக இருந்ததில்லை.



## ஜோகன் வொல்ஃப்காங்க் ஃபோன் கோதே
Johann Wolfgang Von Goethe

(1749-1832) ஐரோப்பாவின் மாபெரும் கவிஞர். Noten und Abgandlungen zum Weststlichen Dvan (நோடன் உண்ட் அப்ஹான்ட்லுங்கென் ஜும் வெஸ்ட்லிஷென் ட்வான்) பாகம்-1, பக்கம் 7,32

"அவர் ஓர் இறைத்தூதர், ஒரு கவிஞர் அல்ல. எனவே குர்ஆனை ஓர் இறைச் சட்டமாகவே காண வேண்டும். கல்விக்காகவோ, பொழுதுபோக்கிற்காகவோ மனிதனால் எழுதப்பட்டதாக அதைக் கருதக்கூடாது"



## தோமஸ் கார்லிலே(Thomas Carlyle)

(1795 - 1881) ஸ்கொட்லாந்தின் வரலாற்றாசிரியர், தத்துவஞானி மற்றும் "Heroes and Hero Worship and the Heroic in History" (ஹீரோஸ் மற்றும் ஹீரோ வொர்ஷிப் மற்றும் தி ஹீரோயிக் இன் ஹிஸ்டிரீ) எனும் நூலின் ஆசிரியர்.

“இருபதே ஆண்டுகளில் எவ்வாறு ஒருவரால் தனிமனிதனாக, போரிடும் பழங்குடியினரையும் அலைந்து திரியும் கிராம வாசிகளையும் ஒரு சக்திவாய்ந்த மற்றும் பண்பட்ட மக்களாக சீர்படுத்த இயலும்!” குறிப்பு: தாமஸ் கார்லிலே, வரலாற்று ரீதியாக மக்களை ஒருங்கிணைப்புகளாக கொண்டு மனித அறிவின் பரிணாம வளர்ச்சியை வரைபடமாக வரைய முற்பட்டு, “ஹீரோ அஸ் எ ப்ராஃபெட் (Hero as a Prophet)” எனும் அத்தயாயத்தில் முஹம்மது நபிக்கு சிறப்பு அந்தஸ்தை வழங்கியுள்ளார். அதில் முஹம்மது நபி ﷺ அவர்களை மூடநம்பிக்கைகளைச் சீர்திருத்தும் முகவராக தான் ரசித்ததை வெளிப்படுத்தியுள்ளார்.



## ரெவரென்ட் ரெஜிநால்ட் போஸ்வொர்த் ஸ்மித் Reverend Reginald Bosworth Smith

(1839-1908) Mohammad and Mohammedanism ((முஹம்மது மற்றும் முகம்மதனிஸம்) எனும் நூலின் ஆசிரியர். லண்டன், 1874, பக்கம்:92

"தேசம் மற்றும் தேவாலயத்தின் தலைவர், அவரே சீசர் மற்றும் போப் இரண்டுமாவார். ஆனால் அவர் போப்பின் கூற்றுகள் இல்லாத ஒரு போப், சீசரின் படைகள், இராணுவங்கள், பாதுகாவலர்கள், அரண்மனைகள், நிரந்தர வருமானமில்லாத ஒரு சீசர். ஒருவருக்கு “தெய்வீக சக்தியின் துணையோடு நான் ஆட்சி செய்தேன்” எனக் கூற உரிமை இருக்குமேயானால் அது முஹம்மது மட்டுமே. அவரிடம் எந்த ஆயுதமோ அதன் துணையோ இல்லாமல் அனைத்து சக்திகளும் இருந்தன. அவர் பதவிக்காக என்றும் ஆசைப்படாதவர். அவர் தனது தனிப்பட்ட வாழ்வு மற்றும் பொது வாழ்வு இரண்டிலும் மிகவும் எளிமையானவர்."



## லியோ டால்ஸ்டாய் Leo Tolstoy

(1828 - 1910) ரஷ்ய நாட்டின் பிரசித்திப்பெற்ற எழுத்தாளர் மற்றும் நாவலாசிரியர். “War and Peace (வார் அண்டு பீஸ்)” எனும் நூலின் ஆசிரியர்.

"இறைத்தூதர் முஹம்மது, சமூக கட்டமைப்பிற்காக தீர்க்கமாக சேவைச் செய்த ஒரு தலைச்சிறந்த சீர்த்திருத்தவாதி என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதுவே அவர் ஒட்டுமொத்த நாட்டையும் அமைதியை நிலைநாட்டி சத்தியத்தின்பால் நேர்வழிப்படுத்தவும், இரத்தம் சிந்துதலையும் மனிதர்களின் உயிர் பலியையும் தடுக்கவும் போதுமானதாக இருந்தது. தனது நாட்டின் வளர்ச்சி மற்றும் சீர்த்திருத்தங்களுக்காக உழைத்தார். ஒரு சக்திவாய்ந்த மனிதரால் மட்டுமே இதைச் செய்ய இயலும், மேலும், அம்மனிதரே மிகுந்த மரியாதைக்குரியவராவார்."



## மொரிஸ் புகைல்லே (Maurice Bucaille)

(1920-1998) பிரான்ஸ் நாட்டின் மருத்துவர் மற்றும் இரைப்பை நிபுணர். எகிப்திய பிரெஞ்சு சமூகத்தின் (French Society of Egyptology) உறுப்பினர். “The Bible, The Quran and Science" (தி பைபிள், தி குர்ஆன் அண்டு சைன்ஸ்) எனும் நூலின் ஆசிரியர்

"இறைவன் மனிதர்களுக்கு சிந்திக்கும் திறனை வழங்கியுள்ளான் என இஸ்லாம் கற்றுக்கொடுக்கின்றது. எனவே, அது மனிதர்களைப் பாரபட்சமற்று முறையாக சிந்திக்க வலியுறுத்துகிறது. முஹம்மதுவின் காலகட்டத்திலிருந்த அறிவின் நிலையில், குர்ஆன் ஒரு மனிதனின் வேலைப்பாடாக இருக்க இயலாது. இக்காலத்தின் அறிவுத்திறனைக் கொண்டு பாரபட்சமில்லாமல் முழுமையாக ஆராய்ந்தால் குர்ஆன் மற்றும் அறிவியலின் ஒற்றுமைகள் விளங்கும்."

அத்தியாயம்
2

# அவரது பண்புகள்



முஹம்மது ﷺ அவர்களது பண்புகளின் ஓவியம் :
*அவரது சகாக்கள் கண்ட அவரது குணங்கள் மற்றும் பண்புகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.*
*ஸ்பானிஷ் சித்திரமொழியாளர் நூரியா கார்சியா மாசிப் அவர்களால் இயற்றப்பட்டது*

# முஹம்மது ﷺ அவர்களின் பண்புகள்



இஸ்லாமியர்களிடம் முஹம்மது ﷺ நபியவர்களுடைய அல்லது அவர்களுக்கு முந்தைய நபிமார்களுடைய எந்த ஓர் உருவ ஓவியமோ அல்லது படமோ இல்லை. இருப்பினும், அவர்களுக்கு முந்தைய இன்னபிற நம்பிக்கைச் சார்ந்த பாரம்பரியங்களைத் தோற்றுவித்தவர்களைப் போல் அல்லாமல் முஹம்மது ﷺ நபியவர்களின் குடும்பத்தாரும் சகாக்களும் அவரைப் பற்றி அவரது வாழ்க்கைச் சுவடுகளையும் கவனமாகப் பதிவு செய்ததால், வரலாற்றில் எளிதாக அங்கீகரிக்கக்கூடிய நபராக உள்ளார்கள்.

## நபியவர்களின் தோற்றம் எப்படி இருந்தது?



முஹம்மது ﷺ அவர்கள் அரேபியர்களின் கண்ணியம் நிறைந்த வம்சத்தைச் சேர்ந்தவர். நபி அவர்கள் பார்ப்பதற்கு வெண்ணிறமானவராகவும் நடுத்தரமான ஒயரம் கொண்டவராகவும் இருந்தார்கள். நபி அவர்களுக்கு தொப்பை வயிறு அறவே இல்லை, மேலும் அவர்கள் விறுவிறுப்புடனும் கம்பீரத்திடனுமே இருந்தார்கள். நபியவர்களது சகாக்கள் அவரை பரந்த நெற்றி மற்றும் கூர்மையான மூக்கினையுடையவராகவும் நீண்ட கண்ணிமைகள், பெரிய கருவிழிகள் மற்றும் சீராக வரிசையில் அமைந்த பற்களுடையவராகவும் மற்றும் மாறாத இனிய புன்னகை தவழும் உதடுகள் கொண்ட இனிமையான புன்னகை பூப்பவராகவும் மிக அழகான தோற்றம் கொண்டவராகவும் வர்ணிக்கின்றனர். நபியவர்கள் சற்றே சுருள் முடியுடன் அடர்ந்த தாடியுடையவராகவும் இருந்தார்கள். நபியவர்கள் முழுநிலவைப் போன்று பிரகாசமான முகத்துடன் இருந்தார்கள் என அவரது சகாக்கள் வர்ணிக்கின்றனர். நபி அவர்கள் சத்தமாக சிரித்ததில்லை, அவர்களது சிரிப்பு, பெரும்பாலும் ஆலங்கட்டிகளைப் போன்று சிறிதாக பற்கள் தெரியும் புன்னகையாகவே இருந்தது. நபி அவர்களது உற்சாகமும் வெளிப்படையான அணுகுமுறையும் அனைத்து மக்களையும் கவரக்கூடியதாக இருந்தது.

## நபி அவர்களது இயல்பு

முஹம்மது ﷺ அவர்கள் எப்பொழுதும் உற்சாகமானவராகவும் மென்மையானவராகவும் இருந்தார்கள். அவர்கள் எப்பொழுதும் எதிர்மறையாகவோ, தகாத வார்த்தைகளையோ பேசியதில்லை. மேலும் நபி அவர்கள் பிறரிடம் குறை காண்பவராகவோ, பிறரை அளவிற்கு அதிகமாக புகழ்பவராகவோ இருந்ததில்லை.

## நபியவர்களது பேச்சு

முஹம்மது ﷺ அவர்கள் தேவையின்றி பேசாதவராகவும், பேசும் பொழுது கூறவிழைந்த கருத்தை நேராகவும் முழுமையாகவும், கூடுதல், குறைவின்றி பேசக்கூடியவராகவுமாக இருந்தார்கள். அவர்களது பேச்சு சுருக்கமானதாகவும், தெளிவானதாகவும், ஒரு சில வார்த்தைகளே இருந்தாலும் முழுமையான பொருள் கொண்டதாகவும் இருக்கும். நபியவர்களது பேச்சு தரத்தில் மிக உயர்ந்ததாகவும் கேட்பவர்களுக்கு மிக இனிமையானதாகவும் இருக்கும்.

முஹம்மது ﷺ அவர்கள் ஏதேனும் ஒரு கருத்தை அதிமுக்கியத்துவத்துடன் வலியுறுத்தும் பொழுது, அக்கருத்தை ஒரு சைகையுடன் மூன்று முறை மீண்டும் மீண்டும் கூறுவார்கள். அவர்கள் இறைவனிடம் நன்மைகளைப் பெற்றுத்தராத எதைப்பற்றியும் பேசியதில்லை. நபி ﷺ அவர்கள் தனது சகாக்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

"எவர் ஒருவர் தான் சரியாக இருப்பினும் வாதிடுவதை விடுவாரோ அவருக்கு சுவர்க்கத்தின் எல்லையில் ஒரு வீட்டுக்கு நான் உத்திரவாதம் அளிக்கின்றேன். எவர் ஒருவர் விளையாட்டுக்காகக்கூட பொய் சொல்வதைத் தவிர்க்கின்றாரோ அவருக்கு சுவர்க்கத்தின் நடுவிலும், நன்னடத்தை உடையவருக்கு சுவர்க்கத்தின் உயரிய இடத்திலும் வீடு கிடைக்க நான் உத்தரவாதம் அளிக்கின்றேன்" - (அபூதாவூத், 4974/4800)

## அவரது பண்புகள்



முஹம்மது ﷺ அவர்கள் தனது உணர்ச்சிகளை நன்கு கட்டுக்குள் வைத்திருப்பவர்களாக இருந்தார்கள். அவர் எரிச்சலடையும் பொழுது அந்த இடத்திலிருந்து நகர்ந்துவிடுவார்கள் அல்லது அமைதியாக இருந்துவிடுவார்கள். யாரேனும் இறைவனின் கட்டளைகளுக்கு மாறுசெய்தால் அவர்கள் ஒரு தீர்க்கமான நிலைப்பாட்டுடன் தனது கடுங்கோபத்தை வெளிப்படுத்துபவராக இருந்தார்கள். இறைவன் இறக்கியருளிய உண்மைக்கு மாற்றமான கருத்துக்கள், செயல்களில் நபியவர்களுக்கு ஏற்படும் சினத்தை எதிர்க்கொள்ள யாரும் துணியமாட்டார்கள்.

## மக்களுடன் கலந்துவாழும் பண்பு

முஹம்மது ﷺ அவர்களே எப்பொழுதும் மற்றவர்களுக்கு வாழ்த்துச் சொல்வதில் முந்திக்கொள்பவராக இருந்தார்கள். பிறருடன் வாழ்த்துச் சொல்ல கைக்குலுக்கும் பொழுது அடுத்தவர் தன் கைகளைப் பின்வாங்கும் வரை நபியவர்கள் தனது கைகளை விலக்கிக்கொள்ளமாட்டார்கள்.

நபியவர்களை திடீரென சந்திப்பவர்கள், அவரது நற்பண்புகளைக் கண்டு வியந்து அவரைப் பாராட்டினார்கள். அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவர்கள் மீது பேரன்பு கொண்டிருந்தார்கள். நபியவர்கள் மிக மென்மையான இயல்புடையவர்கள். அவர்கள் யாரிடமும் கடுமையுடனோ, ஏளனமாகவோ நடந்ததேயில்லை.

நபியவர்கள் யாரையேனும் பார்த்தால், அவரைத் தன் முகம் முழுமையாகத் தெரியும்படி பார்ப்பவர்களாக இருந்தார்கள். யாரேனும் நபியவர்களை அழைத்தால், தனது முகத்தை மட்டும் திருப்பாமல், முழு உடலையும் அழைப்பு வந்த திசையின்பால் திருப்பி முழுக்கவனத்துடன் தன்னை அழைத்தவரைக் காண்பவராக இருந்தார்கள்.
ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு சென்றால், நபியவர்கள் தன் அருகிலுள்ள காலியான இடத்தில் அமரக்கூடியவராக

இருந்தார்கள். அவரது சகாக்களையும் தனது நடைமுறைகளைப் பின்பற்றுமாறு உத்தரவிட்டார்கள். அவர்கள் தனக்கு அருகில் அமர்ந்திருந்திருந்தவர்கள் மற்றும் மற்றவர்கள் மீதுதான் அதிக கவனம் செலுத்தினார் எனக் கூற வாய்ப்புக் கிடைக்காத வகையில் அனைவர் மீதும் தனது முழுக்கவனத்தையும் செலுத்துவார்கள். அனைவரும் அமர்ந்திருக்கும் எந்த ஒரு சபையிலும் தனக்கென்று பிரத்யேக இடமாக எதையும் நபியவர்கள் ஒதுக்கிக்கொண்டதில்லை. அவர்கள் தனது சகாக்களுடனும் மற்ற மக்களுடனும் பாரபட்சமின்றி நடந்துக்கொண்டார்கள். மக்கள் அனைவரும் தங்களின் இறையச்சம் மற்றும் நற்பண்புகளை மட்டுமே கொண்டு வேறுபடுத்தப்பட்டனர்.

## அவரது வாழ்க்கை முறை

முஹம்மது ﷺ அவர்கள் எந்த ஒரு செயலையும் தேவைக்கு அதிகப்படியாகவோ, குறைவாகவோ இல்லாமல் அனைத்திலும் மிதமான போக்கை மேற்கொள்பவராகவே இருந்தார்கள். தனக்காகத் தயார் செய்யப்பட்ட உணவையோ, பானத்தையோ ஒருபொழுதும் குறைகூறியதும் கிடையாது, அதிகமாகப் புகழ்ந்ததும் கிடையாது.

நபியவர்கள் வீட்டிலிருந்த சமயங்களில் தனது நேரத்தை மூன்று பங்குகளாக பிரித்து ஒரு பங்கினை இறைவழிப்பாட்டிற்காகவும், ஒரு பங்கினை தனது குடும்பத்திற்காகவும், ஒரு பங்கினைத் தனக்காகவும் பிரித்துக்கொண்டார்கள். எப்பொழுதும் வீட்டு வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்கள், துணிகளை மடித்து வைத்தார்கள், தனது காலணிகளைச் சரி செய்தார்கள், வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்தார்கள். நபியவர்கள் எப்பொழுதும் நன்றாக உடையணிந்து, நறுமணம் பூசிக்கொள்பவராக இருந்தார்கள்.

காலைத் தொழுகைக்குப்பின் சூரியன் உதயமாகும் வரை பள்ளிவாசலில் அமர்ந்து குர்ஆன் ஓதுவதிலும் அல்லாஹ்வைப்

புகழ்வதிலும் நேரத்தைக்கழித்தார்கள். நள்ளிரவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக (இரவில் தொழும் அதிகப்படியான தொழுகை மற்றும் பிரார்த்தனைகள்) எழுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

தேவையுள்ள மக்களுக்காக ஸகாத் (ஏழை மக்களுக்கு கொடுப்பதற்காக வசூலிக்கப்படும் வரி) நன்கொடைகளைத் தானோ, தனது குடும்பத்தாரோ உபயோகிப்பதிலிருந்து தடைச் செய்தார்கள். நபியவர்கள் அதில் மிகவும் கவனத்துடன் இருந்தார்கள், ஏழை மக்களான சமுதாயத்திற்காக நன்கொடைகளை வசூலிக்கும் பணியில் தனது குடும்பத்தார் எவரையும் அவர்கள் நியமித்ததில்லை. களிமண்ணால் கட்டப்பட்ட சுவர்கள் மற்றும் ஒட்டகத்தின் தோலால் மூடப்பட்ட ஈச்சையிலைக் கூரையைக் கொண்ட குடிசையே நபியவர்களின் வீடாக இருந்தது.

நபியவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்தபொழுது வெள்ளைக் கம்பளி மற்றும் ஒரு சிறிய நிலம் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் விட்டுச் செல்லவில்லை. நபியவர்களிடம் இருந்த அனைத்தையும் இஸ்லாமிய சமுதாய மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்துச் சென்றார்கள். (நூல் : புகாரி )

முஹம்மது ﷺ அவர்கள் “உலகத்தின் பொருட்களைக் கொண்டு நான் என்ன செய்யப்போகின்றேன்? எனக்கும் இந்த உலகத்திற்குமான தொடர்பு, மரத்தினடியில் ஓய்வெடுத்துப் பின் தனது பயணத்தைத் தொடரும் ஒரு வழிப்போக்கரைப் போன்றதே” எனக் கூறியுள்ளார்கள்." (2/666 - 2788, முஸ்னத் அஹ்மத், அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி)



அத்தியாயம்

3

# வாழ்க்கை வரலாறு



# வாழ்க்கை வரலாறு



## நபி ﷺ அவர்களின் விவரங்கள்

| | |
|---|---|
| பெயர் | முஹம்மது ﷺ |
| தந்தையின் பெயர் | அப்துல்லாஹ், அப்துல் முத்தலிப்பின் மகன் (இறைத்தூதர் இப்றாஹீம் (அப்ரகாமின்) மகன் இறைத்தூதர் இஸ்மாயிலின் வம்சாவழியைச் சேர்ந்தவர்) |
| குடும்பப் பெயர் (Clan) | அரேபியாவில் மிகவும் மதிக்கப்படும் குரைஷ் எனும் பழங்குடி இனத்தின் பனு - ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்தவர் |
| பிறந்த நாள் | 20 அல்லது 22 ஏப்ரல், 570 கி.பி. [1] (தோராயமாக கணக்கிடப்பட்டது) |
| பிறந்த இடம் | மக்கா நகரம் - அரேபிய தீபகற்பம் (தற்பொழுது சவுதி அரேபியாவிலுள்ளது) |
| இறந்த நாள் | 6-ஜூன், 632 கி.பி. (அவர் இறந்த பொழுது அவருக்கு கிட்டத்தட்ட 63 வயது) |
| இறந்த மற்றும் அடக்கம் செய்யப்பட்ட இடம் | மதீனா நகரம் (மக்காவில் இருந்து வடக்கே 400 கி.மீ. தொலைவில் உள்ள நகரம்) |
| இறந்த மற்றும் தகனம் செய்யப்பட்ட இடம் | மதீனா நகரம் (கிட்டத்தட்ட மக்காவில் இருந்து வடக்கே 400 கி.மீ.) |



# குழந்தைப் பருவம் முதல் இளமைப் பருவம் வரை

| | |
|---|---|
| **பிறப்பு முதல் 2 வயது வரை** | முஹம்மது ﷺ அவர்களுக்கு உடன்பிறந்த சகோதர சகோதரிகள் கிடையாது. அவரது தந்தை அவர் பிறக்கும் முன்பே காலமாகிவிட்டார். அவரது தாயார் அவருக்கு ஹலிமா எனும் செவிலித்தாய் மூலமாகப் பாலூட்ட அவரை மக்கா நகரத்திற்கு வெளியில் அனுப்பினார் (இது அரேபியர்களின் பழங்காலத்து வழக்கமாக இருந்தது). |
| **2 - 6 வயது வரை** | தமது 6 வயது வரை தாயார் ஆமினாவிடம் வளர்ந்த முஹம்மது ﷺ அவர்கள் கி.பி. 576-ல் தமது தாயாரை இழந்தார்கள். |
| **6 - 8 வயது வரை** | வளர்ந்த முஹம்மது ﷺ அவர்கள் 8-ஆம் வயதில் தமது பாட்டனாரை இழந்தார்கள். |
| **8 - 25 வயது வரை** | தனது தந்தையின் சகோதரர் அபு தாலிப் அவர்களின் பராமரிப்பில் வளர்ந்தார்கள். அவருக்கு 10 குழந்தைகள் இருந்தனர். |

## கல்வி முஹம்மது ﷺ அவர்கள் எழுத, படிக்க தெரியாதவர் :

நபியவர்களுக்கு படிக்கவோ எழுதவோ தெரியாது. அவர் மக்கா நகரத்தின் வெளியே சென்று வாழவோ அல்லது வெளிநாட்டு கல்வியறிவைப் பெறவோ இல்லை. முஹம்மது ﷺ அவர்கள் குர்ஆனை எழுதியவர் என்றோ அல்லது அதன் நூலாசிரியர் என்றோ இஸ்லாமியர்கள் நம்புவதில்லை. (மனித இனத்திற்கு அல்லாஹ்வின் செய்தியை ஒவ்வொரு எழுத்தையும் ஒவ்வொரு வார்த்தையையும் சற்றும் திரிக்காமல் தெரிவித்தார்.

## முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகளும் போதனைகளும் குர்ஆனில் கலக்கப்படவில்லை:

நபி அவர்களது போதனைகள், வாழ்க்கை முறை மற்றும் குர்ஆனின் விளக்கங்கள் ஆகியவை தனி புத்தகங்களாக “ஹதீத்” அல்லது “இறைத்தூதரின் வழிமுறைகள் (சுன்னத்துக்கள்)” எனும் பெயரில் சேகரிக்கப்பட்டுள்ளன.



## பணிக்காலம்

| | |
|---|---|
| **சிறுவயது முதல் இருபந்தைந்து வயது வரை** | முஹம்மது ﷺ அவர்கள் மற்றவர்களின் ஆடுகளை மேய்ப்பவராக இருந்தார்கள். கூடுதலாக, அவரது மாமா அபூதாலிப்புடன் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டார். ஆதாரமிக்க ஹதீத்களின்படி, முஹம்மது ﷺ அவர்கள் முதல் முறையாகத் தனது சிறிய தந்தை அபூதாலிப்புடன் சேர்ந்து தனது 12-ஆவது வயதில் சிரியாவுக்கு வணிகரீதியான பயணம் மேற்கொண்டார்கள். |
| **25 வயது முதல் 40 வயது வரை** | கதீஜா எனும் செல்வச்சீமாட்டியிடம் வணிகர் அல்லது வர்த்தகராக பணிப்புரிந்தார் (அவர்கள் பொருட்களை ஒரு இடத்திலிருந்து வாங்கி மற்றொரு இடத்தில் விற்பவராக இருந்தார்கள்).<br><br>முஹம்மது ﷺ அவர்கள் தனது நேர்மைக்காகவும் நம்பகத்தன்மைக்காகவும் புகழ்பெற்றிருந்தார். அவர் “உண்மையாளர் மற்றும் நம்பிக்கையாளர்” எனும் அர்த்தமுள்ள “அல் அமீன், அஸ் ஸாதிக்” எனும் பட்டத்தை விரைவிலேயே பெற்றார்கள். |
| **40 - 63 வயது வரை** | முஹம்மது ﷺ அவர்களுக்கு 40 வயது இருக்கும் பொழுது (கி.பி. 610) இறைவனால் நபித்துவம் வழங்கப்பட்டு தமது வாழ்க்கை முழுவதையும் இறைவனின் செய்தியை மக்களிடத்தில் கொண்டு சேர்ப்பதற்காக அர்ப்பணித்தார்கள். அவர் மக்களுக்கு இறைவனின் ஏகத்துவத்தையும் இறைவன் அருளிய வேதத்தையும் (குர்ஆன்) போதித்தார்கள். குர்ஆன் மக்களிடையே சமூகநீதி, அமைதி, ஒற்றுமை மற்றும் நல்வாழ்வு ஆகிவற்றை வலியுறுத்துகிறது |

## மணவாழ்க்கை

முதல் மனைவி ஹதீஜா அம்மையாருடன் 25 ஆண்டு மணவாழ்வு: முஹம்மது ﷺ அவர்கள் அஸத் எனும் கண்ணியம் குடும்பத்தைச் சேர்ந்த குவைலித் என்பவரின் மகள் ஹதீஜா என்பவரைத் திருமணம் செய்தார்கள்.

ஹதீஜா அம்மையார் அவர்கள் ஏற்கனவே மணமுடித்து, தனது கணவர் மரணமடைந்த பின்னர் விதவையாக வாழ்ந்து வந்தார்கள். இரண்டு ஆண்டுகள் அம்மையாரிடம் முஹம்மது ﷺ அவர்கள் வியாபாரத்தில் உதவி புரியும் வணிகராக இருந்தார்கள். முஹம்மது ﷺ அவர்களின் நன்னம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லொழுக்கப் பண்புகளைக் கண்ட ஹதீஜா அம்மையார், வேறொரு நபர் வாயிலாக தனது திருமண விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

### மனநிறைவு மற்றும் மகிழ்ச்சியான மண வாழ்வு:

ஹதீஜா அவர்கள் முஹம்மது ﷺ அவர்களை விட 15 ஆண்டுகள் வயதில் மூத்தவராக இருப்பினும், இருவருமே கண்ணியம் நிறைந்த சமூக பின்புலத்தில் இருந்து வந்தவர்கள். இருவரும், 25 ஆண்டுகள் மனநிறைவான மகிழ்ச்சியான மணவாழ்க்கை வாழ்ந்தனர். அவர்களுக்கிடையே இருந்த வயது) இடைவெளி ஒருபொழுதும் அவர்களின் மகிழ்வான மணவாழ்க்கைக்கு தடையாக இருந்ததில்லை. கி.பி.619-ல் தனது 65-ஆம் வயதில் ஹதீஜா அம்மையார் அவர்கள் மரணித்தார்கள். அவர்களின் மரணத்திற்கு பிறகு முஹம்மது ﷺ அவர்கள் மறுமணம் செய்துகொண்டார்கள் (அத்தியாயம் 6-ஐப் பார்க்கவும்

பல சமயங்களில் ஹதீஜா அவர்களை ஈஸா அவர்களின் தாயாரைப் போன்று தனது காலத்தின் சிறந்த பெண்மணி என்று வர்ணித்துள்ளார். (புகாரி ஹதீதில் பதிவாகியுள்ளது)

முஹம்மது ﷺ அவர்கள் ஹதீஜா அவர்களிடம் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். மேலும் அவருக்கு உண்மையானவராகவும் இருந்தார்

## ஆறு குழந்தைகளுக்குத் தந்தை:

முஹம்மது ﷺ அவர்களும் ஹதீஜா அம்மையாரும் அமைதி மற்றும் நிம்மதி நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தனர்; அவர்களுக்கு 4 பெண் குழந்தைகள் (ஸைனாப், ருகையா, உம்மு குல்தும் மற்றும் பாதிமா) மற்றும் 2 ஆண் குழந்தைகள் (அல்-காஸிம், அவர் தனது 3 வயதில் இறந்தார் மற்றும் அப்துல்லாஹ், அவர் தனது 4 வயதில் இறந்தார்) இருந்தனர். முஹம்மது ﷺ அவர்கள் தனது குடும்பத்துடன் தனது நேரத்தை செலவழித்தார், தனது மனைவிக்கு வீட்டு வேலைகளில் உதவினார், தனது துணிகளைத் தானே தைத்தார், மேலும் குழந்தைகளையும் கவனித்துக்கொண்டார்.



மதீனா நகரில் இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள பகீஃ (Baqee) அடக்கஸ்தலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம். முஹம்மது ﷺ அவர்களின் சில சகாக்கள், உறவினர்கள், துணைவியர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் இங்கு நல்லடக்கம்



ஹதீஜா (ரலி) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள அல்மஃலாஹ் அடக்கஸ்தலம். மக்கா நகரில் உள்ளது.

# 23-ஆண்டுகள் நபித்துவப்பணி

**610 கி.பி.**

### இறைவனிடம் இருந்து முதல் செய்தி இறங்கியது

அனைத்து மக்களுக்காகவும் இறைத்தூதராக நியமிக்கப்பட்ட முஹம்மது ﷺ அவர்கள் முதல் இறைவெளிப்பாட்டைப் பெறுகிறார். இந்தப் பணிக்கு வலுவான நம்பிக்கையும், அர்ப்பணிப்பும், நேர்மையும் தேவைப்படுகிறது.

**610-612 கி.பி.**

### இஸ்லாமியர்களின் முதல் குழு உருவானது

இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் தனது நண்பர்கள் நெருங்கியவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களிடம் இறைவன் ஒருவனே எனும் ஏகத்துவ செய்தியையும் இறைவனின் இறுதி வாழ்வியல் செய்தியான இஸ்லாத்தினை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தி போதனை செய்தார்கள். நபித்துவம் பெற்ற முதல் மூன்று ஆண்டுகளில் சுமார் 130 நபர்கள் இஸ்லாத்தை ஏற்று இஸ்லாத்தை பொதுமக்களுக்கு கொண்டுசெல்ல வலுவான கருவாக அமைந்தனர். இந்த இஸ்லாமியர்களின் குழுமத்தில் ஏழைகளும் மற்றும் செல்வந்தர்களும் கலந்திருந்தனர்.

**613-615 கி.பி.**

### முஹம்மது ﷺ அவர்களின் வெளிப்படையான அழைப்பு எதிர்க்கப்பட்டது

முஹம்மது ﷺ வும் அவரது சகாக்களும் வெளிப்படையாக இஸ்லாத்திற்கு அழைக்கத் துவங்கினர். முஹம்மது ﷺ அவர்கள் நேர்மையானவர் மற்றும் நம்பிக்கையானவர் எனப்பெயர் பெற்றிருந்தாலும் மக்கா நகரின் தலைவர்கள் அவரை நம்பவில்லை. அவர்கள் முஹம்மது ﷺ அவர்களைப் புலவர் என்றும் மந்திரவாதி என்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் இட்டுக்கட்டலானார்கள்.

### முஹம்மது ﷺ அவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள்:

மக்கா நகரின் தலைவர்கள் முஹம்மது ﷺ அவர்கள் மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பதைத் தடுக்க சில சமயங்களில் பொன், பொருள் மற்றும் பதவிகளைத் தருவதாக

ஆசைக்காட்டினர். அதனை முஹம்மது ﷺ மறுத்த பொழுது அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். மேலும், மக்களை அவரது போதனைகளைக் கேட்பதிலிருந்து தடுக்கவும் செய்தனர். அவர்கள் புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் மீது கடும் பகை கொண்டனர். ஏழை எளிய இஸ்லாமியர்களை அவர்கள் துன்புறுத்தியும் சித்தரவதை செய்தனர்.

**முஹம்மது ﷺ அவர்கள் தனது தோழர்களை ஆதரித்தார், சிலரை அபிஸினியா நாட்டிற்கு அனுப்பினார்:**

முஹம்மது ﷺ அவர்கள் தனது தோழர்களுடன் மிக நெருக்கமாக இருந்தார்கள். அவர்களை அல்அர்கம் என்பவரின் இல்லத்தில் சந்திக்கச் செய்தார்கள், அது ஒரு சிறிய கல்லூரியைப் போன்றிருந்தது. அங்கு அவர்களுக்கு ஒழுக்கங்களையும், நற்பண்புகளையும் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் அவர்களிடையே பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை விதைத்தார்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் ஒரு சில தோழர்கள் அனுபவித்து வந்த இன்னல்களையும் சோதனைகளையும் கண்டு அவர்களை அபிஸினியா நாட்டிற்குச் சென்று அடைக்கலம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார்கள். கிறிஸ்துவ மன்னாரால் ஆளப்பட்ட அந்நாட்டை அவர் நல்லொழுக்கமிக்க நாடாகவும் அங்கு யாரும் அநியாயமாக நடத்தப்பட மாட்டார்கள் என்றும் விவரித்தார்.

**இரண்டு செல்வாக்கு மிகுந்த நபர்கள் இஸ்லாத்தை ஏற்றனர்**

இரண்டு வலுவான மற்றும் மதிப்பு மிகுந்த மக்காவைச் சேர்ந்த நபர்கள், உமர் இப்னுல் கத்தாப் மற்றும் ஹம்ஸா இப்னு அப்துல் முத்தலிப் (முஹம்மது ﷺ அவர்களின் சாச்சா), இஸ்லாத்தை ஏற்றனர். அது இஸ்லாமியர்களுக்கு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. ஹம்ஸா அவர்கள் தான் உஹத் போரில் (கி.பி.625) மரணமாகும் வரை முஹம்மது ﷺ அவர்களுக்கு பலத்த ஆதரவாளராகவும் பாதுகாப்பாளராகவும் திகழ்ந்தார்கள். முஹம்மது ﷺ அவர்கள் இறந்து மூன்றாண்டுகள் கழித்து உமர் அவர்கள் கலி∴பாவாகி இஸ்லாமிய நகரத்தை 11 ஆண்டுகள் ஆண்டார்.

**616-618 கி.பி.**

**முஹம்மது ﷺ அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்:**
மக்காவின் தலைவர்கள் முஹம்மது ﷺ அவர்களையும் அவரது தோழர்களையும் புறக்கணித்தனர், அவர்கள் மீது பொருளாதார மற்றும் சமூக தடைகளை விதித்தனர், அது மூன்றாண்டுகள் நீடித்தது. அச்சமயத்தில் முஹம்மது ﷺ அவர்களும் அவரது தோழர்களும் மிகுந்த இன்னல்களுக்குள்ளாயினர். அவர்களின் பொறுமைக்கும் நம்பிக்கை மற்றும் உண்மைக்கான அவர்களின் அர்ப்பணிப்பிற்கும் பலத்த சோதனையாக அது அமைந்தது.

**619-620 கி.பி.**

**துயரமான வருடம்:**
மக்காவின் தலைவர்கள் பொருளாதார மற்றும் சமூக தடைகள் பயனுள்ளதாக இல்லாததால் அதனை நீக்கினர். அதே வருடம் முஹம்மது ﷺ அவர்களின் மனைவி ஹதீஜா அவர்களும், அவரது சாச்சா அபு-தாலிப்பும் மரணமடைந்தனர்.
முஹம்மது ﷺ அவர்கள் மக்கா நகரின் மீது நம்பிக்கை இழந்து இறைவனின் செய்தியைப் பரப்ப மக்காவிற்கு வெளியிலிருந்து ஆதரவுக் கோரினார். தாயிஃப் நகரத்திற்குச் சென்றார் ஆனால் அவரால் அங்கு விரோதத்தைத்தான் காணமுடிந்தது. மேலும் அவர் 20 அரேபிய பழங்குடியினரிடம் இஸ்லாத்தைப் பற்றி உரையாடினார் ஆனால் எந்த நேர்மறையான பதிலும் கிடைக்கவில்லை.

**620-622 கி.பி.**

**நம்பிக்கைத் துளிர்:** முஹம்மது ﷺ அவர்கள் யத்ரிப்பில் இருந்து (மக்கா நகரிலிருந்து 400 கி.மீ. தொலைவில் உள்ள நகரம்) 6 நபர்களைப் புனித யாத்திரையின் பொழுது சந்தித்து அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றி உரையாடினார்கள். அவர்கள் முஹம்மது ﷺ அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டு தங்களது பழங்குடியினத்தினரையும் மற்றும் யத்ரிப்பில் இருந்த மற்ற பழங்குடியினத்தவரையும் இஸ்லாத்திற்கு அழைக்கும்

எண்ணத்துடன் தங்களது நகரத்திற்குச் சென்றனர். அவர்கள் அடுத்த ஆண்டு புனிதயாத்திரையின் பொழுது மக்கா நகரில் இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களைச் சந்திப்பதாக ஒத்துக் கொண்டனர்.

## புதிய இஸ்லாமியர்கள் முஹம்மது ﷺ அவர்களிடம் உறுதிமொழி ஏற்றனர்

அதே கூட்டத்தினர் அடுத்த வருடம் (கி.பி.621) மேலும் 6 நபர்களுடன் திரும்பினர். அவர்கள் முஹம்மது ﷺ அவர்களிடம் (அவரை இறைத்தூதராக ஏற்பதாக) உறுதிமொழியளித்தனர். (இது முதலாவது அகபா என்று அழைக்கப்படும்.

அவர்கள் கீழ்கண்டவாறு உறுதிமொழியேற்றனர்:

(1) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை.

(2) திருடுவதில்லை

(3) விபச்சாரம் செய்வதில்லை

(4) கொலைச் செய்வதில்லை

(5) அண்டை வீட்டாரைப் பற்றி அவதூறு பேசுவதில்லை

(6) இறைத்தூதரை அவமதிப்பதில்லை

அந்த கூட்டம் திரும்ப யத்ரிப் சென்று தங்கள் பழங்குடியின தலைவர்களையும் மக்களையும் இஸ்லாத்திற்கு அழைத்தனர். அடுத்த வருடம் (கி.பி.622) புனித யாத்திரையின் பொழுது 70 க்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் 2 பெண்களுடன் அவர்கள் திரும்பினர். முன்னரைப் போன்று அவர்களும் முஹம்மது ﷺ அவர்களிடம் உறுதிமொழியளித்தார்கள் ((இது இரண்டாவது அகபா என்று அழைக்கப்படும்)

அகபா அல்லது அல்பைஆ "உறுதிமொழி" பள்ளிவாயல்



**மக்காவிலிருந்து 450 கி.மீ. வடக்கே புதிய இஸ்லாமியக் கூட்டமைப்பு உருவானது:**

யத்ரிப் நகரின் பழங்குடியினத் தலைவர்கள் இஸ்லாத்தை ஏற்றனர், அதனைத் தொடர்ந்து அம்மக்களும் இஸ்லாத்தை ஏற்றனர். இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களை யத்ரிப் வந்து யத்ரிப்பின் தலைவராகவும் ஆட்சியாளராகவும் இருக்குமாறும் அழைப்பு விடுத்தனர்.

**622 கி.பி.**

**மக்கா நகரின் தலைவர்கள் முஹம்மது ﷺ அவர்களைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினர்; யத்ரிப்பிற்குக் குடிபெயர்ப்புத் தொடங்கியது:**

மக்கா நகரில் நிலைமை மோசமானது. முஹம்மது ﷺ அவர்கள் மக்காவில் வாழும் இஸ்லாமியர்களை யத்ரிப்பிற்குக் குடிபெயரச் சொன்னார். அவர்களைத் தொடர்ந்து முஹம்மது ﷺ அவர்களும் செப்டம்பர் மாதம் கி.பி.622-ல் யத்ரிப்பிற்குக் குடிபெயர்ந்தார். அவரது குடிபெயர்ப்பு இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. யத்ரிப்பிலிருந்து இஸ்லாம் மலர்ந்தது, ஓர் இஸ்லாமிய நகரம் உருவானது, மேலும், ஒரு சமூகக்கட்டமைப்பு உருவானது.

**623-624 கி.பி.**

**முஹம்மது ﷺ அவர்கள் யத்ரிப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**

அனைவரினதும் ஒப்புதலுடன் இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் அமைதியான முறையில் ஆட்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

யத்ரிப் நகரில் அரபியர்கள் மற்றும் யூதர்கள் கலந்திருந்தனர். அங்கு இரண்டு முக்கிய அரபிய பழங்குடியினர் மற்றும் மூன்று சிறிய யூதப்பழங்குடியினர் இருப்பினும் அரபிய சமூகம் யூத சமூகத்தைவிட பெரியதாகவும் ஆட்சியதிகாரம் உள்ளதாகவும் இருந்தது.

### முஹம்மது ﷺ அவர்கள் பன்முகக்கலாச்சார நகரமான யத்ரிப்பின் பெயரை மாற்றினார்கள்:

முஹம்மது ﷺ அவர்கள் யத்ரிப் நகரத்திற்கு "மதீனா" எனப் பெயர்சூட்டினார்கள்.
மக்கா நகரின் இஸ்லாமியர்கள் குடிப்பெயர்ந்தபின், யத்ரிப் நகரமானது, ஒரு குறிப்பிட்ட அரேபிய சமூகத்தினர்க்கானதாக இல்லாமல் இஸ்லாத்தை ஏற்ற அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் தாயகமானது.



யத்ரிப் நகரில் யூதர்களும் இஸ்லாத்தை ஏற்காத அரேபியர்களும் வாழ்ந்ததால் முஹம்மது ﷺ அவர்கள் அந்நகருக்கு "அல்-மதீனா", அதாவது "நகரம்" எனப் பெயரிட்டார்கள், அங்கு வாழ்ந்த அனைவருக்கும் குடியுரிமையின் சமச்சீர் உரிமையைப்பெற்றனர்.

### முஹம்மது ﷺ அவர்கள் மதீனாவில் அமைதி மற்றும் ஒற்றுமைக்காக அழைப்பு விடுத்தார்

முஹம்மது ﷺ அவர்கள் மதீனா நகரின் மக்களுக்கு நிகழ்த்திய முதல் சுருக்கமான உரையில் அமைதி மற்றும் சமூக ஒற்றுமையை ஊக்குவித்தார்.

> "மக்களே, அமைதியை நாடிப் பரப்புங்கள் மற்றும் ஒருவருக்கொருவர் உணவளித்துக் கொள்ளுங்கள், உறவினர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள் மற்றும் இரவு நேரத்தில் மற்றவர்கள் உறங்கும் பொழுது தொழுது, இறைவனை மகிழ்வித்து அவனுடைய சுவர்க்கத்தில் நுழையுங்கள்".

முஹம்மது ﷺ அவர்கள் பன்முகக்கலாச்சாரம் கொண்ட சமூகத்தில், மக்கள் ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறவும், அமைதியில் வாழவும் இந்தச் செயல்களை இறைவனின் திருப் பொருத்தத்துடன் மேற்கொண்டார்கள்.



**623-624 கி.பி.**

**முஹம்மது ﷺ அவர்கள் யூதர்களுடன் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் முதல் உடன்பாட்டில் கையெழுத்திட்டார்fள்:** பல யூதர்கள் இறுதித்தூதர் யூதயினத்திலிருந்து தான் வருவாரென்று நம்பினர். பல யூதர்கள் முஹம்மது ﷺ அவர்களை இறைவனின் இறைத்தூதராக ஏற்கவில்லை, இருப்பினும் முஹம்மது ﷺ அவர்கள் (ஆட்சியாளராக), "மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் அரசியலமைப்பு மற்றும் சாசனம்" போன்றிருந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டார்கள், அதற்கு அனைத்து அரேபிய மற்றும் யூதயின மக்களும் உடன்பட்டனர்.

அந்த உடன்பாடு இஸ்லாமியர்கள், யூதர்கள் மற்றும் இஸ்லாத்தை ஏற்காத அரேபியர்கள் அனைவருக்கும் இறைவழிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு உறுதியளித்தது. கூடுதலாக, அந்த உடன்பாடு அனைத்து குடிமக்களின் பாதுகாப்பிற்கு உறுதியளித்தது, மேலும் மதீனா நகரம் எதிரிகளால் தாக்கப்பட்டால் அனைத்துத் தரப்பினரையும் தேசியப் பாதுகாப்பில் பங்குப்பெற வழிவகை செய்தது. அந்த உடன்பாடு நீதி, மனித உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றை பாதுகாத்து குற்றம் மற்றும் ஒழுக்கக்கேடான நடைமுறைகளை தடை செய்தது.

**624 கி.பி.**

**தவிர்க்கயியலாத பத்ர் யுத்தம்:**
இஸ்லாமியர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்குக் குடிப்பெயர்ந்த பொழுது, பலர் தங்களது வீடுகளை விடவேண்டிய நிலை ஏற்பட்டது, மேலும் அவர்களது பொருட்களும் கைப்பற்றப்பட்டது.



பத்ர் போர் நடைபெற்ற இடம்

மக்கா நகரின் தலைவர்கள் கைப்பற்றப்பட்ட செல்வத்தை வியாபாரத்திற்காகப் பயன்படுத்தினர். மக்காவின் தலைவர்கள் தங்களது வியாபரத்திற்காகப் பயன்படுத்திய தங்கள் எதிரியான அபு-சுஃப்யானின் தலைமையிலான சரக்கு வாகனம் மதினா நகரின் அருகிலிருந்து கடப்பதை இஸ்லாமியர்கள் அறிந்திருந்தனர்.

முஹம்மது ﷺ அவர்கள் கைப்பற்றப்பட்ட இஸ்லாமியர்களின் செல்வங்களுக்குப் பதிலாக அந்த சரக்கு வாகனத்தைக் கைப்பற்ற திட்டம் தீட்டினார்கள். 313 இஸ்லாமியர்களைக் கொண்ட படை இந்தப் பணியை ஏற்றனர். மக்காவின் புலனாய்வுத்துறை அபூசுஃபியானுக்கு சரக்கு வாகனத்தின் பாதையை மாற்றச் சொல்லி அறிவுறுத்தியது. கூடுதலாக, மக்கா 950 சிப்பாய்களையும் அனுப்பியது, போருக்குத் தயாராக இல்லாத மக்காவின் ராணுவத்திற்கு முன் மிகக்குறைந்த ஆயுதங்களைக் கொண்ட இஸ்லாமியப் படைகளை எதிர்கொள்வதற்கு.

எதிர்பார்ப்புகளை மீறி ஆச்சரியமூட்டும் வகையில் மக்காவின் தலைவர்களை எதிர்த்து முதல் போரில் வெற்றி பெற்றனர். பல மக்காவின் தலைவர்கள் மற்றும் முக்கிய நபர்கள் போரில் கொல்லப்பட்டனர்.



**625 கி.பி.**

**மக்காவின் தலைவர்கள் உஹுது போரில் முஹம்மது ﷺ மற்றும் அவரது சகாக்களைத் தாக்கினர்:** பத்ர் போரில் ஏற்பட்ட இழப்பிற்குப் பழிவாங்கவும் அரேபியாவில் தங்களது தலைமையை இழக்கும் அச்சத்திலும் மக்காவின் தலைவர்கள் மற்ற சில அரேபிய கோத்திரங்களுடன் சேர்ந்து 3000 சிப்பாய்களைக் கொண்ட இராணுவத்தை மதீனாவின் வடக்கே உள்ள உஹுதுக்கு அனுப்பினர். இஸ்லாமியர்கள் இப்போரில்


உஹுத் போர் நடைபெற்ற இடம் - மதீனா - சவுதி அரேபியா

தோல்வி அடைந்தனர். முஹம்மது ﷺ அவர்கள் காயங்களுடன் காப்பாற்றப்பட்டார்கள். உஹுத் போரில் முஹம்மது ﷺ அவர்களின் மாமா ஹம்ஸா உட்பட முஹம்மது ﷺ அவர்களின் சில சகாக்கள் கொல்லப்பட்டனர்.

உஹுதுப் போரில் ஷஹீதானவர்கள், உஹுத் கல்லறை - மதீனா - சவுதி அரேபியா



626 **கி.பி.**

**மக்காவாசிகள் மற்றும் ஏனைய பழங்குடியினர் முஹம்மது ﷺ அவர்களையும் அவரது சகாக்களையும் அகழி யுத்தத்தில் தாக்கினர்:** இந்த யுத்தம் “அஹ்ஸாப் யுத்தம்” என்றும் அழைக்கப்படும். முந்தைய யுத்தத்தில் முஹம்மது ﷺ அவர்கள் கொல்லப்படாததால், முஹம்மது ﷺ அவர்களைக் கொல்லவும் இஸ்லாமிய சமூகத்தை அழிக்கவும் மக்காவின் தலைவர்கள் மற்றும் அரேபிய மற்றும் யூத பழங்குடியினர் ஒன்றிணைந்து முயற்சி செய்து விரிவான தாக்குதலுக்கு அழைப்பு விடுத்தனர்.

10,000 சிப்பாய்கள் மதீனாவை நோக்கிப் படையெடுத்தனர். முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களுடன் கலந்தாலோசித்த பிறகு சல்மான் அல்பாரிஸ் என்ற நபித்தோழரின் ஆலோசனைப்படி மதீனாவின் வடக்குப் பாதையில் 5.5 கி.மீ. நீளம் மற்றும் 4.6 கி.மீ. அகலம் கொண்ட அகழிகளைத் தோண்ட முடிவெடுத்தார்கள்.

இஸ்லாமியர்கள் மிகவும் சங்கடமான நிலையில் இருந்தனர், மேலும் உளவியல் ரீதியாக உட்பட தங்களைத் தற்காத்துக்கொள்ள முழுமுயற்சி எடுத்தனர். ஒரு மாதகால முற்றுகைக்குப் பிறகு மக்காவின் இராணுவத்தினர் பொறுமையிழந்தனர், மேலும் கடுமையான புயல் மற்றும் காற்று வீசியதால் அவர்கள் தங்களது கூடாரங்களைக் கலைத்துப் பின்வாங்கினர்.

627 **கி.பி.**

**ஹுதைப்பியா உடன்படிக்கை, 10 ஆண்டுகால சமாதான உடன்படிக்கை:** அகழி யுத்தத்திற்குப் பிறகு ஒரு வருடம் கழித்து, முஹம்மது ﷺ அவர்கள் உம்ரா செல்வதற்காக (மக்காவிற்கு புனித பயணம் மற்றும் மதரீதியிலான சடங்குகள்) அமைதிக்கான நடவடிக்கை எடுத்தார். மக்காவிற்கு மதரீதியிலான பயணம் மேற்கொள்வது அரேபியாவிலுள்ள அனைத்து மக்களுக்குமான மத உரிமையாக இருந்தது.

10 வருட அமைதி

1400 பொதுமக்களுடன் முஹம்மது ﷺ அவர்கள் மதீனாவிலிருந்து மக்காவிற்கு வருவதைக் கண்ட மக்காவின் தலைவர்கள் பெரும் ஆச்சரியமடைந்தனர்.




மக்காவின் தலைவர்கள் மற்றும் முஹம்மது ﷺ அவர்களுக்கும் இடையே பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு 10 ஆண்டுகளுக்கான அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது, அதில் முஹம்மது ﷺ அவர்களும் அவரது சகாக்களும் அடுத்த வருடம் (கி.பி. 628) மக்கா திரும்புவதாகக் கூறிச் சென்றனர். அந்த உடன்படிக்கையில் மேலும் சில நிபந்தனைகள் மக்காவாசிகளுக்கு பலத்த ஆதரவாக இருந்ததால் இஸ்லாமியர்களுக்கு ஏமாற்றமளிக்கும்படியாக இருந்தன.

**628-629 கி.பி.**

**உடன்படிக்கையின் பொழுது முஹம்மது ﷺ அவர்கள் மக்காவிற்கு உள்ளேயும் வெளியேயும் இறைச்செய்தியைப் போதித்தார்:**

உடன்படிக்கைக் காலம் முஹம்மது ﷺ அவர்களுக்குத் தடைகள் ஏதுமின்றி இஸ்லாத்தைப் பற்றிப் போதிக்க ஒரு பொற்காலமாக அமைந்தது. முஹம்மது ﷺ அவர்கள் மற்ற அரேபிய பழங்குடியினரிடம் பிரதிநிதிகளை அனுப்பினார்கள்,

மேலும் அண்டை நாடுகளுக்கும் பாரசீகம், பைசான்டைன், எகிப்து போன்ற வல்லரசுகளுக்கும் கடிதம் எழுதி இஸ்லாத்தை இறைவனின் செய்தியாக ஏற்றுக் கொள்ள வலியுறுத்தினார். மக்கள் இஸ்லாம் தான் உண்மையானது என உணர்ந்ததால் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை உயர்ந்தது.



630 **கி.பி.**

மக்கா நகர் அமைதியாகக் கைப்பற்றப்பட்டது: இரண்டே ஆண்டுகளில் மக்கா வாசிகள் 20 இஸ்லாமியர்களைக் கொன்றதால் உடன்படிக்கை இரத்தானது.

இந்த அதிர்ச்சிகரமான சம்பவத்தால், முஹம்மது ﷺ அவர்கள் 10,000 இஸ்லாமியர்களுடன் மக்காவைக் கைப்பற்றப் படையெடுத்தார்கள்; ஆனால் அவரது சிப்பாய்களுக்கு எதிரிகள் தாக்கும் வரை அவர்களைத் தாக்கக்கூடாது என உத்தரவிட்டார்.



மக்காவின் தலைவர்கள் சங்கடத்திற்குள்ளாயினர், மேலும் அவர்கள் இஸ்லாமியர்களை எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கவில்லை. இஸ்லாமியர்களின் படை மக்காவை அடைந்ததும், முஹம்மது ﷺ அவர்கள் அனைத்து மக்காவாசிகளிடமும் அனைவரும் ஆதாமிலிருந்து படைக்கப்படோம் என்பதை நினைவுறுத்தி, ஆதாம் மண்ணிலிருந்து படைக்கப்பட்டதையும், ஏகத்துவத்தையும், இறைவனின் வெற்றியையும் குறித்து உரையாற்றினார். பிறகு மக்காவாசிகளிடம் வினவினார், "நான் உங்களை என்ன செய்யவேண்டும் என எதிர்ப்பார்க்கிறீர்கள்?" அவர்கள் கூறினார்கள், "கருணையுள்ள சகோதரரும் மரியாதைக்குரிய உறவினருமான உங்களிடம் சிறந்ததையே எதிர்பார்க்கின்றோம்" என்று பதிலளித்தனர்.



**மன்னிப்பதில் உதாரண புருஷர் :** கடந்த 21 ஆண்டுகளாக மக்காவாசிகளால் கடுந்துயரத்திற்கு உள்ளாகி இருந்தாலும், முஹம்மது ﷺ அவர்கள் உயர்ந்த நற்குணங்களுடன் நடந்துக்கொண்டார்கள். அவர்கள் பதிலளித்தார்கள்: “அஞ்சவேண்டாம். நீங்கள் உங்கள் இல்லங்களை நோக்கிக் கலைந்துச் செல்லுங்கள், நீங்கள் விடுதலையாகி விட்டீர்கள்.” அவரது செய்தி மிகுந்த செல்வாக்குள்ளதாய் அமைந்து பலர் அவரிடம் வந்து உறுதிமொழி ஏற்று இஸ்லாத்தைத் தழுவினர். (**சுனன் அல்-பைஹகி** Sunan Al-Bayhaqi, 9/118, 18342, 18343)

630-631 **கி.பி.**

**அரேபிய பழங்குடியினர் இஸ்லாத்தைத் தழுவினர்:** மக்காவை அமைதியான முறையில் கைப்பற்றியப் பிறகு, அரேபியாவின் அனைத்து பகுதிகளிலிலும் இருந்த பிரதிநிதிகளுக்கு இஸ்லாத்தைப் பற்றி அறிந்தனர். ஹூவாஸன் பழங்குடியினத்தவரைத் தவிர பல அரேபிய பழங்குடியினர் இஸ்லாத்தைத் தழுவினர், ஹூவாஸன் இனமக்கள் இஸ்லாமியர்களுடன் போரிட்டு தோற்றனர். முஹம்மது ﷺ அவர்கள் அரேபியாவின் பல்வேறு மாகாணங்களுக்கும் தனது சகாக்களை அனுப்பி அம்மக்களுக்கு இறைச்செய்தியான இஸ்லாத்தைப் போதிக்கும்படி செய்தார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் மக்காவுக்குத் திரும்பிய போது, அவருடைய முக்கிய குறிக்கோள் புனித மசூதியை சுத்தப்படுத்துவதாக இருந்தது. அரேபியர்களால் வணங்கப்பட்ட அனைத்து விக்கிரகங்ளயும் அவர் தகர்த்துவிட்டு, அதனை ஏகஇறைவன் அல்லாஹ்வின் இல்லமாக மீண்டும் நிலைநிறுத்தினார்கள்.





632 கி.பி.

**முஹம்மது ﷺ அவர்களின் இறுதியுறை:** முஹம்மது ﷺ அவர்களின் பணி முற்றுப்பெற்றது. அவர்கள் தனது வாழ்வின் இறுதிக்கட்டத்தை அடைந்தார்கள். கி.பி. 632 ம் ஆண்டு முஹம்மது ﷺ அவர்கள் புனிதயாத்திரை மேற்கொண்ட பிறகு 100,000 திற்கும் அதிகமான மக்களுக்கு தனது இறுதி உரையை நிகழ்த்தினார்கள்.

அவரது இறுதியுறை மக்களுக்கு ஏகத்துவத்தையும், உயிர்களின் புனிதத்துவத்தையும், செல்வங்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பையும், அனைத்து இனத்தவரின் சம உரிமைகளையும், நீதிக்கான விதிகளையும், பெண்களின் உரிமைகளையும் மற்றும் நற்குணங்களையும் நினைவூட்டுவதாக இருந்தது.

## முஹம்மது ﷺ அவர்களின் மரணம்

இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் கி.பி. 632 ம் ஆண்டு தனது இல்லத்தில் மிகவும் சொற்பமான பொருட்களை மட்டும் விட்டு மரணமடைந்தார்கள். அவரிடம் பணமோ சொத்தோ எதுவும் இருக்கவில்லை மாறாக உலகம் முழுதும் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இன்றளவும் ஒளிர்விடும் இறைநம்பிக்கையை விட்டுச் சென்றார்கள்.

> “தவறு செய்வது மனித குணம், மன்னிப்பது இறைவன் குணம்”
> - அலெக்ஸாண்டர் போப்



சவுதி அரேபியாவின் மக்காவில் உள்ள மலைகள்





சவுதி அரேபியாவில் உள்ள புனிதபள்ளியான மக்காவின் வான்வழி காட்சி



மக்கா நகரில் ஹிரா மலை அமைந்துள்ள ஒளியின் குன்று (நூர் மலை) என்னும் மலையின் அகலமான காட்சி



புனிதப்பள்ளியை (அல்-மஸ்ஜித் அல்-ஹரம்) காட்சிப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்ட சவுதி அரேபியாவில் உள்ள மக்காவின் வான்வழி பார்வை. தொழில்முறையிலான புகைப்படக்காரர் சூசான் எஸ்கேண்டர் (Suzan Eskander) அவர்களால் எடுக்கப்பட்டது.





சவுதி அரேபியா மக்காவில் உள்ள ஒளியின் குன்று (நூர் மலை)



ஹிரா குகை



முஹம்மது ﷺ அவர்களும், அவரது சகா அபூபக்ர் (ரலி) அவர்களும் மதீனாவிற்கு குடிபெயர்ந்த பின்பு மூன்று இரவுகள் அடைக்கலம் பெற்ற தவ்ர்(Thawr) குகை



சவுதி அரேபிய ராஜ்ஜியத்தின் மதீனா நகரில் உள்ள மஸ்ஜித் நபவியிலிருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள இஸ்லாத்தின் முதல் பள்ளிவாசலான குபா பள்ளிவாசல் (Qubaa Mosque)



சவுதி அரேபிய ராஜ்ஜியத்தின் மதீனா நகரில் உள்ள குபா பள்ளிவாசல் (Qubaa Mosque)


பத்ர் நகரின் வான்வழி காட்சி


பத்ர் போரின் பொழுது குறைஷிப் படையினர் முகாமிட்டு இருந்த இடம்


பத்ர் போரின் பொழுது முஹம்மது ﷺ அவர்களும் அவர்களது சகாக்களும் முகாமிட்டு இருந்த இடம்


பத்ர் போரின் போர்களம்


உஹத் மலையின் விரிந்த காட்சி



பத்ர் போரின் போர்களம் இப்புகைப்படத்தில் வில்லாண்மை குன்று மற்றும் ஷஹீதானவர்களின் அடக்கஸ்தளங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அவ்விடத்தில் முஹம்மது ﷺ அவர்களின் எழுgத்திற்கும் மேற்பட்ட சகாக்களும் மற்றும் அவரது சாச்சா ஹம்ஸா (ரலி) அவர்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர்





Trench Battle
அகழி யுத்தம்
Mount of Uhud
உஹுத் மலை
அகழி தடம்
Location of the trench
Silaa Mount
Waqem Harra (Volcanic Area)
மதீனா நகரம்
Madinah City
Wabra Harra (Volcanic Area)






வீடுகள் மற்றும் பனை மரங்களால் முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசல் (மஸ்ஜித் நபவி) சூழப்பட்டுள்ளதாக உருவாக்கப்பட்டுள்ள கற்பனை காட்சி.
(உருவாக்கம்: மதீனா ஆராய்ச்சி மற்றும் கல்வி மையம், சவுதி அரேபியா)



முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசல்







அறிந்துள்ள இறைத் தூதர்களில், முஹம்மது ﷺ அவர்களின் அடக்கஸ்தலம் மட்டுமே மிகச்சரியாக அறியப்படுகின்றது. மேலும், நபியவர்களது கல்லறையின் சரியான இடத்தை அவரைப் பின்பற்றுபவர்களால் அடையாளம் காணப்படுகின்றது.

முஹம்மது ﷺ அவர்கள் மதீனாவில் உள்ள அவர்களது பள்ளிவாசலான மஸ்ஜித் நபவி அருகிலுள்ள தனது இல்லத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

முஹம்மது ﷺ நபியவர்களது இல்லம் மற்றும் கப்றை காண்பதற்காக மக்கள் நுழையக்கூடிய பள்ளிவாசலின் பகுதியைப் இப்படத்தில் காணலாம்.

இறைத்தூதர் அவர்கள் பள்ளிவாசலில் அல்ல மாறாக தனது இல்லத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அல்-வலீத் பின் அப்துல்-மாலிக் அவர்களால் விரிவுபடுத்தப்பட்ட பொழுது இறைத்தூதர் அவர்களது இல்லம் புதிய பள்ளிவாசலோடு இணைக்கப்பட்டுள்ளது.



மதீனாவின் நபவி பள்ளிவாசலில் உள்ள இறைத்தூதர் முஹம்மது ﷺ (இடப்பக்கத்தில் முதலில் உள்ளது). அதற்கு அடுத்து உள்ளது (நபியவர்களுக்கு அடுத்த) முதல் கலிஃபா மற்றும் ஆட்சியாளராக அபூபக்ர் சித்திக் மற்றும் இரண்டாம் கலிஃபாவான உமர் பின் அல்-கத்தாப் ஆகியோரது கல்லறைகள்.





இறைத்தூதர் அவர்களது பள்ளிவாசல் (அல்-மஸ்ஜித் அந்-நபவி அஷ்ஷரீப்)
புகைப்படக்காரர் நௌஷாத் அலி அவர்களால் எடுக்கப்பட்டது.



## இறுதிக் குறிப்புகள்

1 ஒரு சில குறிப்புகளின் படி முஹம்மது ﷺ அவர்கள் பிறந்த ஆண்டு கி.பி. 571.

2 முஹம்மது ﷺ அவர்கள் வழியாக அரேபிய மொழியில் இறக்கப்பட்ட குர்ஆன் ஒன்றே ஒன்று மட்டுமே உள்ளது. ஆனால், ஆங்கிலம், பிரெஞ்சு, சைனீஸ் எனப் பல மொழிகளில் அது மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் ஆங்கில மொழிப்பெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

3 சில குறிப்புகள் ஹதீஜா ரலி அவர்களுடனான முஹம்மது ﷺ அவர்களின் மணவாழ்க்கை 24 ஆண்டுகள் மற்றும் பல மாதங்கள் நீடித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

4 முஹம்மது ﷺ அவர்கள் தாயிபில் தாக்கப்பட்ட பொழுது மிக மோசமான சிகிச்சையைப் பெற்றார். அவர் மிகுந்த ஏமாற்றத்துடன் தாயிபை விட்டு வெளியேறினார். சில குறிப்புகளில், அவர் அழகிய பிரார்த்தனையைக் கொண்டு இறைவனிடத்தில் வேண்டியதாகக் கூறப்பட்டுள்ளது (அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்).

5 அகபா அல்லது அல்பைஆ மசூதி (உறுதிமொழி மசூதி): மதீனாவிலிருந்து வந்த இஸ்லாமியர்கள் முஹம்மது ﷺ அவர்களிடம் உறுதிமொழி ஏற்ற இடமாக நம்பப்படும் இடத்தில் அப்பாஸிய தலைவர் அபூ ஜஃபர் அல் மன்சூர் அவர்களால் நிறுவப்பட்டது.

6 ஒரு சிறிய இஸ்லாமிய சமூகம் மக்காவிலேயே தங்கியது, அவர்களால் யாத்ரிப்பிற்கு (மதீனாவிற்கு) குடிபெயர இயலவில்லை.

7 இஸ்லாமிய நாட்காட்டி முஹம்மது ﷺ அவர்கள் மக்காவிலிருந்து மதினாவிற்குப் புலம்பெயர்ந்ததிலிருந்து துவங்குகின்றது (13 செப்டம்பர் கி.பி. 622 (கிட்டத்தட்ட). அமைதியான முறையில் மக்காவைக் கைப்பற்றியது 8 ஜனவரி கி.பி. 630 (கிட்டத்தட்ட).



எனது இறைவனே! உன்னிடமே என் பலவீனத்தையும், உதவியற்ற நிலையையும், அவமானத்தையும் கொண்டு வருகிறேன்.

கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளனே, பலவீனமாகக் கருதப்பட்டவர்களுடைய ஆதரவாளனே, நீயே என் ஆதரவாளன்.

உன்னையன்றி நான் யாரை நம்புவது. என் மீது கோபங்கொண்ட தொலைவில் இருப்பவர்களிடமா அல்லது யாரிடம் நான் சரணடைந்த எதிரியிடமா.

நீ என்மீது கோபம் கொள்ளாத வரை, என்னிடம் சோகத்திற்கான காரணம் கிடையாது.

உனது ஒளியில், எதிலிருந்து இருள் விலகுகிறதோ, எதிலிருந்து இவ்வுலகமும் அடுத்த உலகமும் நீடிக்கின்றதோ, அதில் அடைக்கலம் தேடுகின்றேன்.

நீ எனக்களித்துள்ள நல்வாழ்வு உனது கோபத்திலிருந்து என்னைச் சூழ்ந்துள்ளது.

உனது அருட்கொடையைப் பெறும் வரை உன்னிடமே நான் திரும்புவேன்.

அத்தியாயம்

4

# நபித்துவம்



ஜப்பான் நாட்டின் சித்திரவடிவமைப்பாளர் நோபுகோ சகாவா (Nobuko Sagawa) அவர்களால் உருவாக்கப்பட்ட அரேபிய சித்திரவடிவம்.

"இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுவதற்கும் நன்மாராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி (வேறெவ்வாரும்) அனுப்பவில்லை; ஆனால் மனிதர்களில் பெரும்பாலானோர் (இதை) அறியமாட்டார்கள்."

திருக்குர்ஆன் (34:28)



ஒளியின் குன்று (நூர் மலை)
மக்கா - சவூதி அரேபியா

# முஹம்மது ﷺ மற்றும் நபித்துவம்



**முஹம்மது ﷺ அவர்களுக்குத் தான் ஒரு இறைத்தூதராவோம் எனத் தெரியாது:** அவர் நெறிமுறைகளுடன் கூடிய சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவர் விசுவாசம், நேர்மை மற்றும் நம்பகத்தன்மைக்குப் பெயர் பெற்றிருந்தார். பன்முகக்கலாச்சாரம் கொண்ட சமூகத்தில் சிலை வழிபாடு நிறைந்திருந்தாலும் அவர் என்றுமே சிலையை வணங்கியதில்லை.

ஒரே ஒரு கடவுள் தான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துப் பராமரித்து வருகிறார் என எப்பொழுதும் நம்பினார். மக்காவிற்கு கிழக்கே 4 கி.மீ. தூரத்தில் (கடல் மட்டத்திலிருந்து 634 மீட்டர் உயரத்தில்) இருந்த குகைக்குச் சென்று அவர் கடவுளை வணங்கினார்கள்.

அந்த குகை, "ஜபல் அந்நூர்" (அதாவது, ஒளியின் சிகரம்) எனும் சிகரத்தில் உள்ள "ஹிரா" என்பதாக அறியப்படுகிறது. முஹம்மது ﷺ அவர்கள் அந்த குகையில் தியானம் செய்யும் பொழுது தான் தனது முதல் இறைவெளிப்பாட்டைப் பெற்றார்கள்.

**அது ஒரு மாயை அல்ல, மேலும், அது ஒரு கனவும் அல்ல:**

படி!

முஹம்மது ﷺ அவர்கள் தனது நாற்பது வயதை அடைந்த பொழுது அவர்கள் ஹிரா மலையில் அடிக்கடி தியானம் செய்தார்கள். ரமழான் மாதத்தில் (சந்திர ஆண்டின் 9-ஆவது மாதம், கி.பி. 610) வானவர் ஜிப்ரீல் அவர்கள் முஹம்மது ﷺ அவர்கள் முன் தோன்றி அவரை படிக்கச்சொன்னார். முஹம்மது ﷺ அவர்கள் அச்சமடைந்தார்கள்.



ஹிரா குகை

அவர் எழுதப் படிபக்க தெரியாதவர், வானவர் ஜிப்ரீல் அவர்கள் மீண்டும் மீண்டும் “படி” என்று கூறினார், மேலும் அவர் பின்வரும் இறை வசனங்களை ஓதிக்காட்டினார்.

> “யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக. 'அலக்" என்ற நிலையிலிருந்து மனிதனை படைத்தான். ஓதுவீராக: உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுது கோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.
> ”திருக்குர்ஆன் - 96:1-5

இந்த சிறிய சந்திப்பிற்குப்பின் வானவர் ஜிப்ரீல் அவர்கள் மாயமானார்.

**முஹம்மது ﷺ அவர்கள் அச்சமடைந்தார்கள்:** அவர் மிகவும் பயந்திருந்தார்கள். அவர்கள் வீட்டிற்கு திரும்பினார். அவர்கள் நடுக்கத்தில் இருந்தார்கள். அவர்கள் தனது மனைவி ஹதீஜாவிடம் நடந்ததைக் கூறி தன்னைப் போர்த்தி விடும்படி கூறினார்கள். ஹதீஜா அவர்கள் அவர் தனது உறவினர்களுடன் நல்ல உறவு வைத்துள்ளதாலும் ஏழைகளுக்கு உதவுவதாலும் மற்றும் தர்மம் செய்வதை விரும்புவதாலும் இறைவன் அவரைக் கைவிடவும் மாட்டான் சாத்தான்கள் அவரை நெருங்கவும் விட மாட்டான் எனக் கூறினார்கள்.





கலைஞர் அப்துல் மஜீத் அல் நோரட் (Abdul Majid Al-Noerat) அவர்கள் அரபிய மொழியில் முஹம்மது என்னும் வார்த்தையை வடிவமைத்துள்ளார். அனைத்து உயிரினங்களையும் படைத்த ஏகஇறைவனை அறிய முஹம்மது ﷺ அவர்கள் ஒளியின் குன்றின் (நூர் மலை) மேல் ஏறியதை குறிப்பதாக உள்ளது.

**இறைவெளிப்பாடா அல்லது சாத்தானின் கிசுகிசுப்புகளா?** முஹம்மது ﷺ அவர்கள் அச்சமடைந்தார்கள். அவர் தனது துணைவியார் ஹதீஜா அவர்களுடன் சென்று கிறிஸ்துவரும் பைபிளை நன்கு அறிந்தவருமான வரகா இப்னு நவ்பல் (ஹதீஜா அவர்களின் உறவினர்) என்பவரிடம் நடந்ததைத் தெரிவித்தார்கள். முஹம்மது ﷺ அவர்கள் ஒரு இறைத்தூதராக இருக்கக்கூடும் என்று வரகா கணித்தார்கள், மேலும் அவரது அனுபவம் யூதர்களின் இறைத்தூதரான மூஸா அவர்களுக்கு வந்ததைப் போன்ற இறைவெளிப்பாடு தான் என உறுதியளித்தார். வரகா, தான் முஹம்மது ﷺ அவர்களுக்கு உறுதுணையாக இருக்க விரும்புவதாகவும் ஆனால் தனக்கு வயதாகிவிட்டது என்று கூறினார். மேலும் அவர், முஹம்மது ﷺ அவர்கள் மக்காவிலிருந்து தனது சொந்த மக்களால் வெளியேற்றப்படுவார் எனவும் வேறு சிலரால் சிறந்த முறையில் நடத்தப்படுவார் எனவும் தெரிவித்தார்.

**நீங்கள் ஓர் இறைத்தூதர்:** முஹம்மது அவர்களுக்கு அமைதியடைய சில நாட்கள் தேவைப்பட்டது, அதுவரை அவர் அந்த மலைக்கு திரும்பவில்லை. சில நாட்கள் கழித்து வானவர் மீண்டும் தோன்றி அவர் அல்லாஹ்வின் செய்தியை அனைத்து மக்களுக்கும் எத்திவைப்பதற்கான ஓர் இறைத்தூதர் எனத் தெரிவித்தார். ஜிப்ரீல் அவர்கள் பின்வரும் வசனங்களை ஓதினார்கள்.

> “(போர்வை) போர்த்திக் கொண்டு இருப்பவரே! நீர் எழுந்து (மக்களுக்கு அச்சமூட்டி) எச்சரிக்கை செய்வீராக. மேலும், உம் இறைவனைப் பெருமைப் படுத்துவீராக. உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக. அன்றியும் அசுத்தத்தை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக. (பிறருக்குக் கொடுப்பதையும் விட அவர்களிடமிருந்து) அதிமாகப் பெறும் (நோக்கோடு) உபகாரம் செய்யாதீர். இன்னும், உம் இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக ”திருக்குர்ஆன் - 74:1-7

ஜிப்ரீல் அவர்கள் முஹம்மது ﷺ அவர்களிடம் 23 வருடங்கள் தொடர்ந்து வந்தார்கள். அந்த காலக்கட்டத்தில், மனிதயினத்திற்கு இறைவனின் செய்தி (திருக்குரான்) அருளப்பட்டது.

முஹம்மது ﷺ அவர்கள் அனைத்து மக்களுக்கும் இறைச்செய்தியைத் தெரிவித்தார்கள்: முஹம்மது ﷺ அவர்கள் கி.பி. 610 ஆம் ஆண்டு தான் பெற்ற இறைவெளிப்பாட்டின்படி நடந்தார்கள். அரேபியாவிலும் அரேபியாவின் வெளியிலும் வாழ்ந்த மக்களை ஓர் இறைவன் (அல்லாஹ்) மீது நம்பிக்கைக் கொள்ளவும் அவனது கட்டளைகளைப் பின்பற்றவும் அழைப்பு விடுத்தார்கள். அதுவே ஒட்டுமொத்த மனிதயினத்திற்கு நன்மை பயக்கக்க்கூடியது என்றார்கள்.

நம்பிக்கை மற்றும் சட்டம்

அந்த செய்தி எதைப்பற்றியது? இஸ்லாத்தின் செய்தி "அகீதா"வை அடிப்படையாகக் கொண்டது, அதாவது ஏகத்துவம் மற்றும் ஷரீஆவை நம்பிக்கைக் கொள்வது. ஷரியா என்பது இறைவனின் சட்டம்; ஷரீஆ என்பது மக்களின் அன்றாட வர்த்தகங்கள், நடவடிக்கைகள் மற்றும் வழக்கங்களை நிர்வகிக்கும் அமைப்பு மற்றும் ஒழுங்குமுறைகள்.

மூன்று முக்கிய கிளைகளாக ஷரீஆ பிரிக்கப்பட்டுள்ளது:

(1) இறைவழிப்பாடு: அதாவது தினசரி தொழுகைகள், நோன்பு நோற்பது, பிரார்த்தனைகள், தர்மங்கள் செய்வது, போன்றவை.

(2) ஒழுக்கங்கள்: சரியான செயல்கள் மற்றும் பழக்கங்கள் (நேர்மை, விசுவாசம், அன்பு, ஒத்துழைப்பு போன்றவை)

(3) வாழ்வின் பரிவர்த்தனைகள் மற்றும் நீதிக்கான விதிமுறைகள், மக்களின் உரிமைகள், வியாபாரத்தின் நெறிமுறைகள், மரபுரிமைகள் போன்ற மற்றவர்களுடனான தொடர்புகள்.

குறிப்பு: இறைவெளிப்பாட்டைப் பெற்றபின், 13 வருடங்களுக்கு முஹம்மது ﷺ அவர்கள் மக்களுக்கு ஏகத்துவத்தைப் (அகீதா) போதிப்பதில் கவனம் செலுத்தினார்கள். மதீனாவிற்கு குடிபெயர்ந்தபின் ஷரீஆவை விளக்குவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அதிகம் கவனம் செலுத்தினார்கள்.

# இறைவனின் கட்டளைகள்

“நபியே! நீர் கூறுவீராக!
'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது
விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நாம்
ஓதிக் காண்பிக்கிறேன்;
(1) எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள்
(2) பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள்;
(3) வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக்
கொல்லாதீர்கள் - ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும்
நாமே உணவளிக்கின்றோம்;
(4) வெளிப்டையான இரகசியமான மானக்கேடான
காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள்;
(5) அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும்
நியாயமானதற்கு அல்லாமல் - கொலை செய்யாதீர்கள் -
இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்)
உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்.
(6) அநாதையின் பொருளின் பக்கம் அவன் பருவவயதை
அடையும் வரையில் அழகான முறையிலன்றி நீங்கள்
நெருங்காதீர்கள்;
(7) அளவையும்
(8) நிறுவையையும் நீதத்தைக் கொண்டு
நிரப்பமாக்குங்கள்; நாம் எந்த ஆத்மாவையும் அதன்
சக்திக்கு மீறி கஷ்டப்படுத்துவதில்லை.
(9) நீங்கள் பேசும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவர்
நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் - நியாயமே
பேசுங்கள்;
(10) அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை
நிறைவேற்றுங்கள். நீங்கள் நினைவு (கூர்ந்து நடந்து)
கொள்ளும் பொருட்டே அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு)
போதிக்கிறான்.”

திருக்குரான் - 6:151-152

அபிஸினியாவில் முஹம்மது ﷺ அவர்களின் போதனைகளின் நடைமுறை அறிமுகம்: பாதுகாப்பிற்காக அபிஸினியாவிற்கு (தற்போது ஆஃப்ரிக்காவிலுள்ள எதியோபியா) குடிபெயர்ந்த எண்பது இஸ்லாமியர்களில் ஜஃபர் இப்னு அபூதாலிபும் ஒருவர். அபிஸினியாவின் அரசரிடம் புகலிடம் கோரிய இஸ்லாமியர்களின் சார்பாக ஜஃபர் பின்வருமாறு கூறினார்கள்:

“அரசரே, நாங்கள் ஒரு காலத்தில் சிலைகளை வழிப்பட்டும், அழுகிய உடல்களை உண்டும், அருவருக்கத்தக்க செயல்களைச் செய்தும், உற்றார் உறவினர்களை உதாசீனப்படுத்தியும், அண்டைவீட்டாரை மோசமாக நடத்தியும், எங்களில் பலமானவர் பலவீனமாவரை அடக்கியும் அறியாமையில் வாழ்ந்த மக்கள். நேர்மையான கண்ணியமான ஒருவராக நாங்கள் அறிந்திருந்த ஒருவரை இறைவன் எங்களுக்கு தூதராக அனுப்பும் வரையில் நாங்கள் அவ்வாறுதான் வாழ்ந்திருந்தோம்.

அவர் எங்களை இறைவன் ஒருவனை மட்டுமே வணங்கவும் எங்களின் மூதாதையர்கள் போன்று நாங்கள் வணங்கிவந்த கற்களையும் சிலைகளையும் ஒதுக்கவும் அழைத்தார். அவர் எங்களை உண்மைகளை மட்டும் பேசவும், வாக்குறுதிகளை நிறைவேற்றவும், இரத்தச் சொந்தங்களுக்கான கடமைகளை நிறைவேற்றவும், அருவருப்பான செயல்களை விட்டு ஒதுங்கவும் அறிவுறுத்தினார்.

அதனால் நாங்கள் அவர் மீது நம்பிக்கைக் கொண்டு அவர் பெற்ற இறைவனின் செய்தியைப் பின்பற்றினோம். எனினும் எங்களின் சகமக்கள் எங்களை கண்டனம் தெரிவித்தோடு எங்களை சித்திரவதை செய்தனர். அவர்களது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்து எங்களை எங்கள் மார்க்கத்திலிருந்து வெளியேற வற்புறுத்தினர். அவர்களின் ஒடுக்குமுறை தொடர்ந்ததால் நாங்கள் அனைத்திற்கும் மேலாக உங்களைத் தேர்ந்தெடுத்து எங்களின் பாதுகாப்புக்காவும் பாரபட்சமின்றி நடத்தப்படவும் உங்கள் நாட்டிற்கு வந்துள்ளோம்.”





**ஒரு கிறிஸ்துவ மன்னன் முஹம்மது ﷺ அவர்களின் மார்க்கத்தை ஏற்றார்:**

ஜஃபர் ரலி பேசி முடித்தபின் (மதநம்பிக்கையாளரும் இறையச்சமும் உடைய) அந்த அபிஸினிய மன்னர் முஹம்மது ﷺ அவர்களுக்கு அருளப்பட்ட அந்தப் புத்தகத்திலிருந்து சில வசனங்களை வாசிக்குமாறு ஜஃபர் ரலி அவர்களைக் கேட்டார்.



*Negash Mosque Tigray, Ethiopia*
நேகாஷ் மஸ்ஜித், டிக்ராய், எத்தியோப்பியா

ஜஃபர் ரலி அவர்கள் சூறா "மர்யம்" இருந்து சில வாசகங்களை வாசித்தார். மன்னர் அழுது அவரது

பின்னர் அந்த மன்னர் கூறினார்:

> "முஹம்மது ﷺ அவர்கள் கொண்டு வந்த செய்தியும் ஈஸா (அலை) அவர்கள் கொண்டுவந்த செய்தியும் ஒரே மூலாதாராத்திலிருந்து வந்துள்ளது"





# இஸ்லாத்தின் செய்தி

**எளிய வார்த்தைகளில் இஸ்லாம்:** "இஸ்லாம்" என்றால் ஏக இறைவன் ஒருவனை மட்டுமே ஏற்று, அவனை மட்டுமே வணங்கி வழிபடுதலாகும். அதுவே ஏகத்துவத்தின் நம்பிக்கையாகும், இஸ்லாத்தை ஏற்றல் என்பது ஓரிறையை மட்டுமே ஏற்று அவன் ஒப்பிடமுடியாதவன் என நம்பிக்கைக் கொள்வதாகும். அவனுக்கு நண்பர்களோ குழந்தைகளோ இல்லை. அவன் யாரையும் பெறவும் இல்லை எவராலும் பெறப்படவும் இல்லை. அவனே இந்த பிரபஞ்சத்தையும் அதில் இருப்பவற்றையும் தோற்றுவித்தான். அவனது தெய்வீகத்தன்மை எவருடனும் பங்கிடப்படவும் இல்லை, அவனைத் தவிர வேறு யாரும் வணக்கத்திற்கும் வழிப்பாட்டிற்கும் உரியவர்கள் இல்லை.



அப்துல் அஸிஸ் அல் மஜீத்
அவர்களின் உருவாக்கம்

**இறைவனின் பெயர் என்ன?** அவனது பெயர் "அல்லாஹ்". அது லகரநெடில் "லா"-வைக் கொண்டு "அல்லாஹ்" என உச்சரிக்கப்படுகின்றது. மேலும், இறைவனுக்குப் பல அழகிய பெயர்களும் பண்புகளும் உள்ளன. அவற்றில் சில பண்புகள் பழைய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக, "புனிதமானவன்" எனும் பொருள் கொண்ட, அரபியில் குத்தூஸ் (Quddous) எனும் பெயர், ஹிப்ரு மொழியில் கத்தோஷ்(Qadosh) அல்லது ஹக்கதோஷ்(Hakkadosh) என்பதற்கு ஒத்துள்ளது. "ஒருவன்" எனும் பொருள் கொண்ட, அரபியில் அஹத்(Ahad) எனும் பெயர், ஹப்ரு மொழியில் எசாட்(Echad) எனும் பெயருக்கு ஒத்துள்ளது. இஸ்லாத்தில் இறைவன் "மிகவும் இரக்கமுள்ளவன்" என வர்ணிக்கப்படுகிறான்.

| ஆங்கிலம் (English) | அரபி (Arabic) | ஹிப்ரு (Hebrew) | அரமேக் (Aramaic) |
|---|---|---|---|
| காட் (God) | இலாஹ் (Elah) | இலோஹா (Eloha) | இலாஹா (Elaha) |

குறிப்பு:

*அரேபிய பைபிலில், இறைவனைக் குறிக்க அல்லாஹ் எனும் வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்பட 99 அழகிய பெயர்கள் மற்றும் பண்புகள் உள்ளன.*

"அவனே அல்லாஹ்; வணக்கத்திற்குரியவன்; அவனைத் தவிர வேறு நாயன் இல்லை; மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன்; அவனே அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.

அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரிய நாயன் அவனைத் தவிர, வேறு யாரும் இல்லை; அவனே பேரரசன்; மிகப்பரிசுத்தமானவன்; சாந்தியளிப்பவன்; தஞ்சமளிப்பவன்; பாதுகாப்பவன்; (யாவரையும்) மிகைப்பவன்; அடக்கியாள்பவன்; பெருமைக்குரித்தானவன் - அவர்கள் இணைவைப்பவற்றையெல்லாம் விட்டு அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

அவன்தான் அல்லாஹ்; படைப்பவன்; ஒழுங்குபடுத்தி உண்டாக்குபவன்; உருவமளிப்பவன் - அவனுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன; வானங்களிலும், பூமியிலும் உள்ளவையாவும் அவனையே தஸ்பீஹு (செய்து துதி) செய்கின்றன - அவனே (யாவரையும்) மிகைத்தவன் ஞானம் மிக்கவன்.."

திருக்குரான் - 59:22-24

**நேர்மையாக நடக்கவும்**

முஹம்மது மற்றும் இஸ்லாம்: ஒரு மனிதன் முஹம்மது ﷺ அவர்களிடம் இஸ்லாத்தை வேறு எவரிடமும் விளக்கம் கேட்க தேவைப்படாதவாறு எளிய வார்த்தைகளில் விளக்குமாறு கோரினார். அதற்கு முஹம்மது ﷺ அவர்கள் சுருக்கமாகக் கூறினார்கள்:

"நபியே நீர் கூறுவீராக, நான் அல்லாஹ்வை (ஒரே இறைவன்) என நம்புகின்றேன், மேலும் நேர்மையாக நடந்துக்கொள்ளுங்கள்."

இஸ்லாமிய நம்பிக்கையை ஏற்பதற்கு சொல் மற்றும் செயலால் எல்லைகளைத் தாண்டாத கட்டுக்கோப்பான வாழ்வியல் முறை வேண்டும்.

**இஸ்லாம் மற்றும் அமைதி:** சொல்லடையாக அரபியில் “இஸ்லாம்” எனும் வார்த்தை, “ஸலாமா”, அதாவது “தீமைகள் ஏதுமற்றது”, என்பதிலிருந்து பெறப்பட்டுள்ளது. அது “ஸலாம்”, அதாவது அமைதி, எனும் வார்த்தையை ஒத்துள்ளது.

> முஹம்மது ﷺ அவர்கள் “எவரது நாவாலும் கைகளாலும் மற்றவர்கள் பாதுகாப்பாக உள்ளார்களோ அவரே முஸ்லிமாவார்” என விவரித்துள்ளார். அதாவது, அவரது நாவாலும் கைகளாலும் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படக்கூடாது.

இஸ்லாத்தில், “அமைதி” என்பது இறைவனின் (அல்லாஹ்வின்) மிகச்சிறந்த பெயராகவும் பண்பாகவும் உள்ளது. எவர் ஒருவர் அல்லாஹ்விடம் சரணடைகிறாரோ அவரின் மனம் அமைதியடைவதோடு அவரது குடும்பத்துடன் அமைதியாக நடந்து கொள்கிறார்.

இஸ்லாமிய சமூக மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது “வணக்கம்” என்று சொல்லாமல் “அஸ்ஸலாமு அலைக்கும்”, அதாவது, “தங்கள் மீது அமைதி உண்டாகட்டும்” என்று வாழ்த்துவது சுவாரஸ்யமானது. அதன் முழு வாசகம் “தங்கள் மீது அமைதி உண்டாகட்டும், மேலும் தங்கள் மீது அல்லாஹ்வின் சமாதானமும் அருளும் நிலவட்டும்” என்பதாகும்.

## முஸ்லிம்களா அல்லது முஹம்மதியர்களா?

மற்ற மதநம்பிக்கைகளை வழிதொடர்பவர்களைப் போல் இல்லாமல், முஹம்மது ﷺ அவர்களை வழிதொடர்பவர்கள் “முகம்மதியர்கள்” என்று அழைக்கப்படமாட்டார்கள். இஸ்லாத்தை ஏற்றவர் அல்லது அதன் நம்பிக்கையைத் தழுவியவர் “முஸ்லிம்” என்றே அழைக்கப்படுவார், அதாவது, ஓரே இறைவன் எனும் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கைக் கொண்டு அவனிடமே சரணடைந்தவர்.

**இஸ்லாமிய நம்பிக்கையின் ஆறு கூறுகள்:** ஓரிறைவன் மீது நம்பிக்கைக் கொள்வதற்கு அவனது வானவர்கள், அவனது புனித நூல்கள், அவனது இறைத்தூதர்கள், நியாயத் தீர்ப்பு நாள் மற்றும் கழா கத்ர் ஆகியவற்றின் மீதும் நம்பிக்கைக் கொள்வது அவசியமாகிறது.

## இஸ்லாத்தின் தூண்கள் மற்றும் இஸ்லாமிய நம்பிக்கையைப் பின்பற்றுதல்

இஸ்லாமிய நம்பிக்கை முஸ்லிம்களுக்கு கடமையாக்கப்பட்ட ஐந்து தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | ஷஹாதா (Shahada) | வாய்மொழியாக இஸ்லாமிய நம்பிக்கைக் கூறுவது (அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு இறைவன் இல்லை, மேலும் முஹம்மது ﷺ அவர்களே அல்லாஹ்வின் தூதர்). |
| 2 | ஸலாத் (Salat) | பரிந்துரைக்கப்பட்ட தினசரி தொழுகைகளைத் தொழுவது |
| 3 | ஸியாம் (Siyam) | சந்திர ஆண்டின் மாதத்தில் நோன்பு நோற்பது |
| 4 | ஸகாத் (Zakat) | வருடத்தில் ஒரு முறை தானம் செய்வது |
| 5 | ஹஜ் (Hajj) | பொருளாதார ரீதியாகவும் உடல்ரீதியாகவும் நல்ல நிலையில் உள்ளவர்கள் மக்காவிற்கு (இறை இல்லம்) புனித பயணம் மேற்கொள்வது |



## இஸ்லாத்தின் தூண்கள்

### 1. இஸ்லாமிய நம்பிக்கையை உச்சரித்தல், ஷஹாதா

இறைவன் ஒருவனே மற்றும் அவனே அனைத்தையும் தோற்றுவித்தவன் என சாட்சி கூறுதல். அவன் பெயர் அல்லாஹ்.



உள்ளத்தால் நம்பிக்கைக் கொண்டு வாய்மொழியால் ஷஹாதா "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை மற்றும் முஹம்மது ﷺ அவர்களே அவனது தூதர்" என உச்சரிப்பவர் முஸ்லிம் எனப்படுவார். (அரபி மொழியில் பின்வருமாறு உச்சரிக்கப்படுகிறது அஷ்'ஷஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ், வஅஷ்'ஷஹது அன்ன முஹம்மதன் ரசூலுல்லாஹ்)



முஹம்மது ﷺ அவர்களை இறைத்தூதராக ஏற்றுக்கொள்வது என்பது அவருக்கு முன்பு அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்வதாக ஆகிறது.



*இது ஒரு கலை வழிவகையில் வடிவமைக்கப்பட்ட அரபி எழுத்துக்களில் ஒரு சான்று. அதில் "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை மற்றும் முஹம்மது ﷺ அவர்கள் அவனது ஊழியர் மற்றும் அவனது தூதர் என் நான் சாட்சிக் கூறுகின்றேன்" என உள்ளது.*

### 2. பரிந்துரைக்கப்பட்ட தினசரி தொழுகைகள்.

இஸ்லாம்... நடைமுறையிலுள்ள நம்பிக்கை

தொழுகை (ஸலாத்) என்பது இஸ்லாத்தில் ஒரு வழிபாட்டு முறை, அது ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் இறைவனிடம் நெருங்க வழிவகை செய்கின்றது. ஒரு நாள் முழுதுமாக பிரிக்கப்பட்டு ஐந்து தொழுகைகள் தினசரி பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இறைவழிபாட்டின் சாராம்சமே உள்ளம், நாவு மற்றும் உடலால் இறைவனை மகிமைப்படுத்துவதும், உயர்த்துவதும், அவனது புகழைத் துதிப்பதுமே ஆகும்.




(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்; "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன்; அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்துக்) கேட்கட்டும்; என்னை நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக.
திருக்குரான் (2:186)

**சக்தியுள்ள தியானம்**

மொழிரீதியில் "ஸலாத்" என்றால் "இணைப்பு". அது இஸ்லாமிய நம்பிக்கையின் நடைமுறைக் காட்சி. ஒவ்வொரு தொழுகையும் குனிதல் இறைவனுக்குத் தலைவணங்குதல் என உடல் அசைவுகளை உள்ளடக்கியது. தொழுகையினால் இறைவனுக்குக் கீழ்படிதலில் படிப்படியாக முன்னேற்றம் தெரியும். அதில் முழுக்கவனத்துடனும் இவ்வுலக வாழ்வின் காரியங்களிலிருந்தும் ஈடுபட வேண்டும். முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதன் தலைவணங்கும் பொழுது இறைவனுக்கு மிக அருகில் இருக்கின்றான்".

தினசரி ஐந்து வேளைத் தொழுகை ஒரு சிலருக்கு அதிகப்படியாகத் தோன்றும். ஆனால் தினமும் நாற்பது நிமிடங்களைவிட குறைவான நேரமே எடுக்கும் ஒரு வகைத் தியானம் அது. தினமும் மூன்று அல்லது நான்கு முறை உணவு உண்டாலும் நாம் குறைச் சொல்வதில்லை, காரணம் நமது உடலுக்கு ஊட்டச்சத்து தேவைப்படுகிறது. அதே போன்று, நமது ஆன்மாவிற்கும் ஆன்மீக ஊட்டச்சத்து தேவைப்படுகின்றது. நாள் முழுதும் குறிப்பிட்ட இடைவெளியில் நாம் தொழும் பொழுது ஆன்மீக ஊட்டச்சத்து கிடைக்கின்றது.

### 3. ஸகாத், தர்மம் செய்தல்

ஸகாத் இஸ்லாத்தின் கட்டாயத் தூண். ஸகாத் என்பது வருடத்தில் ஒருமுறை ஏழைகள், தேவைப்படுபவர்கள் மற்றும் திருக்குரானில் கூறப்பட்டுள்ள சரியான பயனாளிகளிக்குத் தர்மம் செய்வது. தனது அதிகப்படியான செல்வத்திலிருந்து 2.5% என வரையருக்கப்பட்டுள்ளது.

ஆண்டு நிகர சேமிப்பில் 2.5%

ஸகாத் ஒருவரின் உள்ளத்தைப் பேராசையிலிருந்து தூய்மையாக்கும், மேலும் ஏழைகளின் இதயங்களிலிருந்து வெறுப்பு மற்றும் பொறாமைகளை நீக்கும். இது சமூக ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு, இரக்கம் மற்றும் மரியாதை ஆகியவற்றை வளர்க்கிறது. ஒட்டுமொத்த சமூகத்திற்கு நன்மையளித்து சமூக நீதியை அது நிலைநாட்டுகின்றது.

### 4. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றல்



முஸ்லிம்கள் சந்திர ஆண்டின் ரமதான் மாதம் முழுவதும் (29 அல்லது 30 நாட்கள்), சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையில் நோன்பு நோற்க வேண்டும். நோன்பு நோற்கும் நேரத்தில் வழக்கமான தினசரி வாழ்வைத் தொடர்ந்தாலும் உணவு, தண்ணீர் மற்றும் உடல் இச்சைகள் அகியவற்றில் இருந்து தன்னைப் பேணிக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் பொருட்டு நோன்பு நோற்பது, நமது ஆகாரம் அல்லாஹ்விடம் இருந்து தான் நேரடியாக வருகின்றது என்பதை உணரச்செய்கின்றது.

பசியின் தாக்கத்தை மக்கள் உணரும் பொழுது, ஏழை மக்களும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களும் உணவு கிடைக்கும் அடிப்படை வசதி இல்லாத இடங்களில் உள்ளவர்களும் படும் துயரத்தை அனுபவிப்பர். வசதிபடைத்தவர்கள் நோன்பு நோற்பதின் மூலம் அதிகமாக தானதர்மங்கள் செய்யத் தூண்டப்படுவர். இதனால் ஏழைகளுக்கும் செல்வந்தர்களிக்கும் நல்ல உறவு ஏற்படும், மேலும் சமூக அமைதியும் நிலைநாட்டப்படும்.

| சந்திர மாதங்கள் | |
|---|---|
| 1 | அல்-முஹர்ரம் |
| 2 | ஸபர் |
| 3 | ரபி அல்-அவ்வல் |
| 4 | ரபி அல்-ஆஹிர் |
| 5 | ஜுமாதுல் ஊலா |
| 6 | ஜுமாதுல் ஆஹிரா |
| 7 | ரஜப் |
| 8 | ஷ ஃபான் |
| 9 | ரமழான் |
| 10 | ஷவ்வால் |
| 11 | துல்க ஃதா |
| 12 | துல் ஹிஜ்ஜாஹ் |

நோன்பு நோற்பதால் ஒருவர் தனது மன இச்சைகளை அடக்கி, சுயகட்டுப்பாடு செய்து ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி பெற இயலும். நோன்பு நோற்பதால் பல மருத்துவ நன்மைகளும் உள்ளதால் பல மருத்துவர்களும் சில நோய்களுக்குத் தீர்வாக நோன்பு நோற்கச்சொல்கின்றனர்.

### 5. மக்காவிற்குப் புனிதப்பயணம் மேற்கொள்ளுதல் (ஹஜ்)

ஹஜ் என்பது சந்திர மாதம் துல் ஹிஜ்ஜாஹ்வில் புனிதப் பள்ளிவாசலுக்கு (அல்லாஹ்வின் இல்லத்திற்கு) விஜயம் செய்யும் எண்ணத்துடன் மக்காவிற்குப் பயணம் மேற்கொள்வது. இது இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகும். பருவமடைந்த முஸ்லிம்கள் அனைவருக்கும் உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இயலும் பட்சத்தில் இது கடமையாகும்.

இஸ்லாமிய உலகின் மையப்புள்ளியில் அனைத்து நாடுகளிலிருந்தும் அனைத்து சமூகத்தினரும் ஒன்று கூடும் பொழுது, அவர்களின் பொதுவான தந்தைவழி வம்சாவழியான ஆதமையும் ஆன்மீக வம்சாவழியான ஆப்ரஹாமையும் உறுதிப்படுத்துகின்றனர்.

# ஓர் இறைவன், ஒரு செய்தி

## திருக்குரானில் உள்ள இறைத்தூதர்களும் நபிமார்களும்



இஸ்லாம், முஹம்மது ﷺ அவர்களுக்கு முன் மனிதயினத்தின் வழிகாட்டலுக்காக அனுப்பப்பட்ட அனைத்து இறைத்தூதர்களையும் நபிமார்களையும் கண்ணியப்படுத்துகின்றது. அவர்கள் அனைவரும் உறுதியளித்தது “ஏகத்துவம்” எனும் செய்தியைத் தான், அதாவது இறைவன் உண்டு என்றும் அதுவும் ஒரே இறைவன் தான் என்றும் உறுதியளித்தனர்.

இறைவன் அவர்களை மக்களுக்கு வாழ்வின் அர்த்தத்தைப் போதனை செய்யவும், வழிகெடுதலில் இருந்து பாதுகாக்கவும், நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுக்கவும் அனுப்பி வைத்தார்கள்.

திருக்குர்ஆனில் 25 இறைத்தூதர்கள் மற்றும் நபிமார்களின் பெயர்களும் அவர்களில் சிலரின் சரித்திரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, திருக்குர்ஆனில் ஆதம் (Adam) அவர்களின் பெயர் 25 முறையும், நூஹ் (Noah) அவர்களின் பெயர் 43 முறையும், இப்ராஹீம் (Abraham) அவர்களின் பெயர் 69 முறையும், மூஸா (Moses) அவர்களின் பெயர் 136 முறையும், ஈஸா (Jesus) அவர்களின் பெயர் 25 முறையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “என்னையும் மற்ற இறைத்தூதர்களையும் ஒப்பீடு செய்தால் அதன் ஒற்றுமைகள் எவ்வாறெனில், ஒரு மனிதன் ஒரே ஒரு செங்கலைத் தவிர்த்து கட்டி முடித்த வீட்டைப் போன்றதாகும். மக்கள் அந்த வீட்டைப் பார்த்து அதன் அழகில் பிரம்மிப்படைந்துக் கூறுவர்: அந்த ஒற்றை செங்கலும் வைத்துவிட்டால், இந்த வீடு எவ்வளவு பிரமாண்டமாக இருக்கும்.
நான் தான் அந்த ஒற்றைச் செங்கல், மேலும் நானே இறைத்தூதர்களில் இறுதியானவன்”

திட்டமாக நாம் உமக்கு முன்னர் தூதர்களை அனுப்பியிருக்கின்றோம்; அவர்களில் சிலருடைய வரலாற்றை உமக்குக் கூறியுள்ளோம்; இன்னும் எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லையோ (அவர்களும்) அத்தூதர்களில் இருக்கின்றனர்; (இவ்விருசாராரில்) எந்தத் தூதரும் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த அத்தாட்சியையும் கொண்டு வருவதற்கு (அதிகாரம்) இல்லை; ஆகவே அல்லாஹ்வுடைய கட்டளைவரும் போது, (அனைவருக்கும்) நியாயமாகத் தீர்ப்பளிக்கப்படும்; அன்றியும், அந்த இடத்தில் பொய்யர்கள் தாம் நஷ்டமடைவார்கள்.

- திருக்குர்ஆன் 40:78

(முஃமின்களே!) "நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும்; இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும்; மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம், அவர்களில் நின்றும் ஒவ்வொருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்; இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்"" என்று கூறுவீர்களாக. - திருக்குர்ஆன் 2:136

தௌராத் (Torah), இன்ஜீல் (Injeel) மற்றும் திருக்குர்ஆன் அனைத்தும் மனிதயினத்திற்கான இறைவெளிப்பாடுகளே: திருக்குரானுக்கு முன் இறைவனால் அனுப்பப்பட்ட வேதங்கள் அனைத்தின் மீதும் நம்பிக்கைக் கொள்வது இஸ்லாத்தின் முக்கியக் கடமையாகும். குர்ஆன் அதற்கு முன் அனுப்பப்பட்ட வேதங்களில் தனித்துவமானதும், இறுதியானதுமாகும். இதன் சட்ட திட்டங்களையே கடைப்பிடிக்க வேணடும் என்றும் முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

நிச்சயமாக நாம்தாம் 'தவ்ராத்"தையும் இறக்கி வைத்தோம்;. அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன.

- திருக்குர்ஆன் 5:44

இன்னும் (முன்னிருந்த) நபிமார்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈஸாவை, அவருக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துபவராக நாம் தொடரச் செய்தோம்; அவருக்கு நாம் இன்ஜீலையும் கொடுத்தோம்;. அதில் நேர்வழியும் ஒளியும் இருந்தன. அது தனக்கு முன்னிருக்கும் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதாக இருந்தது. அது பயபக்தியுடையவர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும் நல்லுபதேசமாகவும் உள்ளது.

- திருக்குர்ஆன் 5:47

மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது.

- திருக்குர்ஆன் 5:48

இவர்கள் ஆதமுடைய சந்ததியிலும், நூஹுடன் (கப்பலில்) நாம் ஏற்றிக் கொண்டவர்களி(ன் சந்ததியி) லும், இப்ராஹீமுடையவும், இஸ்ராயீல் (யாகூபின்) சந்ததியிலும், இன்னும் நாம் தேர்ந்தெடுத்து நேர்வழியில் நடத்தியவர்களிலுமுள்ள நபிமார்களாவார்கள். இவர்கள் மீது அல்லாஹ் அருளைப் பொழிந்தான்; அர்ரஹ்மானுடைய வசனங்கள் அவர்களின் மீது ஓதப்பட்டால், அவர்கள் அழுதவர்களாகவும், ஸுஜூது செய்தவர்களாகவும் விழுவார்கள்.

- திருக்குர்ஆன் 19:58

| இறைத்தூதர் | முஹம்மது | ஈஸா | மூஸா | இப்ராஹீம் |
|---|---|---|---|---|
| கிட்டத்தட்ட | 570 - 632<br>கி.பி | 1-33<br>கி.பி | 1400<br>கி.மு | 1700<br>கி.மு |
| கிட்டத்தட்ட | 63 | 33 | 120 | 175 |

## முஹம்மது ﷺ மற்றும் இப்ராஹீம் عليه السلام




யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் நம்பிக்கைப்படி பல இறைத் தூதர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களின் வம்சாவழி வந்ததினால் அவரை இறைத்தூதர்களின் தந்தை எனக் கருதப்படுகின்றார். இஸ்லாமியர்களும் முஹம்மது ﷺ அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களின் முதல் புதல்வன் இஸ்மாஈல் (அலை) அவர்களின் வம்சாவழி வந்தவர் எனக் கருதுகின்றனர். இஸ்மாஈல் (அலை) அவர்கள் பல அரேபிய பழங்குடியினரின் தந்தையுமாவார். மறுபக்கம், இஸ்ரேல் நாடும் யாகூப் (அலை) (Jacob), யூஸுப் (அலை) (Joseph), ஹாரூன் (அலை) (Aaron) மற்றும் மூஸா (அலை) (Moses) போன்ற இறைத்தூதர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களின் இரண்டாவது புதல்வன் இஷ்ஹாக் (அலை) அவர்களின் வம்சாவளியாக வந்தவர்கள்.

திருக்குர்ஆனில் இப்ராஹீம் (அலை) பற்றி அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் தனது சுய ஆராய்வுகள் மற்றும் பொதுஅறிவைக் கொண்டு உண்மையைத் தேடினார். சூரியனோ, சந்திரனோ அல்லது சிலைகளோ இறைவனாக இருக்க முடியாது என்று அவர் அங்கீகரித்தார். இறைவன் தான் பிரபஞ்சத்தையும் அதில் உள்ளனவற்றையும் படைத்தான். அவன் ஒருவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன். அவன் ஒருவனே, மேலும் அவனுக்கு இணைகள் கிடையாது. இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது வாழ்வை அர்ப்பணித்து மக்களுக்கு ஏகத்துவத்தைப் போதிக்கப் போராடினார்கள். அவர் இறைவனிடம் தனது விசுவாசம், நேர்மை, நன்றி மற்றும் ஒழுக்கத்தை நடைமுறையில் நிரூபித்தார்.

> மேலும், எவர் நன்மை செய்யக்கூடிய நிலையில் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்டு, இப்ராஹீமுடைய தூய மார்க்கத்தையும் பின்பற்றுகிறாரோ, அவரைவிட அழகிய மார்க்கத்தை உடையவர் யார்? இன்னும் அல்லாஹ் இப்றாஹீமை தன் நண்பராக எடுத்துக் கொண்டான்.
> - திருக்குர்ஆன் 4:125

ஓரிறை

இப்ராஹீம் (அலை) அவர்கள் உண்மையைத் தீர்க்கமாகக் கடைப்பிடித்த மனிதர், அவர் இறைவனிடத்தில் அசாதாரண கீழ்படிதலைக் கடைப்பிடித்தார். அதனால், திருக்குர்ஆனின்படி இப்ராஹீம் (அலை) அவர்களைத் தன் நண்பன் என்றும் இவ்வுலகத்தின் தலைச்சிறந்த மனிதர்களில் ஒருவர் என்றும் மறுமை நாளில் நீதிமான்களில் ஒருவர் என்றும் இறைவன் குறிப்பிட்டுள்ளான் (4:25, 2:130). இறைவன் அவரை உண்மையான மார்க்கத்தின்பால் வழிகாட்டினான், மேலும் அவரை "இமாம்"(மக்களின் தலைவர்) என்றாக்கினான் (திருக்குரான் 2:124), மேலும் அவரை ஒரு தேசம் என விவரித்தான் (திருக்குரான் 16:120).

இப்ராஹீம் (அலை) அவர்கள் முஸ்லிம்களால் தங்களுக்கு "முஸ்லிம்கள்" (அதாவது, ஓர் இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டு அவனுக்கே கீழ்படிபவர்கள்) என்ற பெயர் கொடுத்தவர் என்று மதிக்கப்படுகிறார் (திருக்குர்ஆன் 22:78)

> "இப்ராஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை. ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான முஸ்லிமாக இருந்தார். அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை."
> - திருக்குர்ஆன் 3:67





ஆதம் (அலை) அவர்கள் பூமியில் இறக்கப்பட்ட பொழுது அவரால் முதன்முதலாக வழிபடும் இடம் கட்டப்பட்டது என நம்பப்படுகின்றது. அந்த கட்டிடத்தை இப்ராஹீம் (அலை) அவரது புதல்வன் இஸ்மாஈல் (அலை) உடன் சேர்ந்து புணரமைத்தார் என்று இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். கனவடிவிலான அந்த கட்டிடத்திற்கு “காபா” என்று பெயர். அது சவூதி அரேபியாவிலுள்ள மக்காவில் உள்ளது. இறைவன் இப்ராஹீம் (அலை) மற்றும் அவரது புதல்வன் இஸ்மாஈல் (அலை) அவர்களுக்கு ஒரு கடமையை விதித்தான், அதானது, தன்னை வழிப்பட்டு, தியானம் செய்து, தலைவணங்குபவர்களுக்காக மக்காவைச் சுத்தம் செய்வது. இறைவன் அந்த இடத்தை ஒரு வழிப்பாட்டுத்தலமாகவும் மக்களுக்கு ஒரு சரணாலயமாகவும் (பாதுகாப்பான இடமாக) மாற்றினான்.

## இப்றாஹீம் மற்றும் இஸ்மாஈலின் பிரார்த்தனை

'எங்கள் இறைவனே! எங்கள் இருவரையும் உன்னை முற்றிலும் வழிபடும் இஸ்லாமியர்களாக்குவாயாக, எங்கள் சந்ததியினரிடமிருந்தும் உன்னை முற்றிலும் வழிபடும் ஒரு கூட்டத்தினரை (இஸ்லாமிய சமுதாயத்தை)ஆக்கி வைப்பாயாக, நாங்கள் உன்னை வழிபடும் வழிகளையும் அறிவித்தருள்வாயாக, எங்களை(க் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை) மன்னிப்பாயாக, நிச்சயமாக நீயே மிக்க மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.

-திருக்குர்ஆன் 2:128



சவூதி அரேபியாவின் மக்கா நகரில் உள்ள புனித பள்ளிவாசல் (அல்-மஸ்ஜித் அல்-ஹரம்). இதுவே இஸ்லாமியர்களின் புனித பள்ளிவாசலாகும். பள்ளிவாசலின் இடையில் உள்ள கருப்பு கட்டிடம் "கஃபா" என்றழைக்கப்படுகிறது. ஒரே இறைவனான தன்னை வழிபடுவதற்காக கஃபாவை நிறுவ இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு கட்டளையிட்டான் என்பது இஸ்லாமியர்களின் நம்பிக்கை. உலகில் உள்ள அனைத்து இஸ்லாமியர்களும் இறைவனை வழிப்படும் பொழுது (தொழுகை கஃபா இருக்கும் திசையை நோக்குவார்கள்.



(இறைவனின் வழிப்பாட்டு இல்லமான) புனித பள்ளிவாசலில் தொழுவது மிகவும் நன்மையளிக்கக்கூடியது என்று இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். புனித பள்ளிவாசலில் தொழும் ஒரு தொழுகைக்கு கிடைக்கும் நன்மையானது 100,000 தொழுகைகளுக்கு சமமானது.



# ஹஜ்

ஒவ்வொரு வருடமும் முப்பது இலட்சத்திற்கும் மேற்பட்டோர் மக்காவிலுள்ள புனிதப் பள்ளிவாசலுக்கு ஹஜ் பயணம் மேற்கொள்கிறார்கள். இஸ்லாத்தின் ஐந்தாவது தூணான இது, உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சக்திபெற்றவர்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது.

முஹம்மது ﷺ அவர்கள் இப்றாஹீம் (அலை) அவர்களின் நடைமுறைகளின் அடிப்படையில் மக்களுக்கு ஹஜ் செய்யக் கற்றுக் கொடுத்தார்கள். அவர் (கஃபாவைச்) சுற்றி நடந்தார்கள். காபா என்பது இப்றாஹீம் (அலை) அவர்களால் இறைவனின் இல்லம் என்று நிறுவப்பட்ட கன வடிவிலான கட்டடம்.

இறைவனுக்குக் கீழ்படிதலாக எதிர்திசையில் ஏழுமுறைச் செய்யப்படும் சுழற்சியானது கிரகங்கள் மற்றும் எலெக்ட்ரான்களின் அசைவுகளுக்கு ஒத்து இருக்கும்.



பின்னர், முஹம்மது ﷺ அவர்கள் மகாமு இப்றாஹீமுக்கு (Abraham's Station) பின்நின்று தொழுதார். தற்சமயம் அது இப்றாஹீம்(அலை) அவர்களின் பாதச்சுவடுகள் பதிந்த ஒரு கல்லைக் கொண்டு சுற்றப்பட்டுள்ளது ((முஸ்லிம்கள் அதனை மகாமு இப்றாஹீம் (Maqam Ibrahim) என்று அழைக்கின்றனர்).

பின்னர், பல ஆண்டுகளுக்கு முன்னர் ஹாஜர்(Hagar) அம்மையாரை அவரது கணவர் இப்றாஹீம் (அலை) அவர்கள்







அவரது புதல்வன் இஸ்மாஈல் (அலை) அவர்களுடன் விட்டுச்சென்றபின் தண்ணீரைத் தேடி அவர் நடந்த ஸஃபா மற்றும் மர்வா எனும் மலைகளுக்கு இடையே முஹம்மது ﷺ அவர்கள் நடந்தார்கள். இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து இப்றாஹீம் (அலை) அவர்கள் அம்மையாரையும் அவரது புதல்வனையும் அங்கு விட்டுச் சென்றிருந்தார்.

இரண்டு மலைகளுக்கும் இடையில் சுமார் 395மீட்டர் தூரமாகும். ஹஜ் யாத்திரையின் இந்த வழக்கத்திறகு “ஸாஈ (Sa'ee)” என்று பெயர், உத்வேகத்துடன் அங்கு நடப்பது, ஸஃபா(Safa) மற்றும் மர்வா(Marwa) மலைகளுக்கு இடையிலான அதே இடத்தில் ஹாஜர் அம்மையார் நடந்ததைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

மேலும், ஸாஈ என்பது ஒருவரின் வாழ்க்கையில் செய்யும் செயல்கள் மற்றும் நடவடிக்கைகளை ஒத்து இருக்கின்றது. அந்தச் செயல்கள் உலகத்திற்கும் மனிதயினத்திற்கும் நன்மைப் பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஸஈ என்பது ஸஃபாவில் ஆரம்பித்து மர்வா வரை மொத்தம் 2.76 கிமீ வரையிலான ஏழு சுற்றுகள் கொண்டுள்ளது.

கூடுதலாக ஹஜ் யாத்திரையின் பொழுது, ﷺ அவர்கள், தற்சமயம் "ஜம்ராத்(Jamarat)" என்று அழைக்கப்படும், மக்காவின் கிழக்கே 8 கி.மீ. தொலைவில் உள்ள "மினா(Mina)" எனும் இடத்திற்குச் சென்றார்கள். இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது புதல்வனை இறைவனுக்காக பலியிட சென்ற பொழுது முதியவர் உருவத்தில் வந்து அவரைப் பிரிக்க முயற்சித்த ஷைத்தான் மீது கல் எறிந்ததைப் பிரதிபலிக்கும் வகையில் அந்த இடத்தில் முஹம்மது ﷺ (அவர்கள்) கல்லெறிந்தார்கள். இப்றாஹீம் (அலை) அவர்கள் ஷைத்தான் மீது பலமுறை கற்களைக் கொண்டு எறிந்தார்கள். இஸ்லாமியர்கள் அந்த செயலைச் செய்யும் பொழுது அவர்கள் அந்த ஷைத்தானையும் தங்களுக்குள் இருக்கும் தீய எண்ணங்களுக்கும் எதிராக சவால் விடுகின்றனர்.










இறுதியாக, இப்றாஹீம் (அலை) அவர்களின் புதல்வனை ஓர் ஆட்டைக் கொண்டு காப்பாற்றியதைப் போல், இஸ்லாமியர்கள்களும் ஆடு அல்லது மாடு, ஒட்டகம் பலியிட்டு இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகத்தைச் சிறப்பித்து அதன் மாமிசத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுத் தரவேண்டும் என போதித்தார்கள்



முஹம்மது ﷺ அவர்கள் இப்றாஹீம் (அலை) மற்றும் அவரது குடும்பத்தாரைச் சிறப்பிக்கும் வகையில் தினசரி ஐவேளைத் தொழுகையில் ஓதும்படி ஒரு பிரார்த்தனை முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

மேலும், முஹம்மது ﷺ அவர்கள் தனது ஒரு புதல்வனுக்கு "இப்றாஹீம்" என்று பெயர்சூட்டியது குறிப்பிடத்தக்கது.

(நபியே!) நீர் கூறும்; "மெய்யாகவே என் இறைவன் எனக்கு நேரான பாதையின்பால் வழி காட்டினான் - அது மிக்க உறுதியான மார்க்கமாகும்; இப்ராஹீமின் நேர்மையான மார்க்கமுமாகும், அவர் இணைவைப்பவர்களில் ஒருவராக இருக்கவில்லை. -திருக்குர்ஆன் 6:161

பாலஸ்தீனத்தில் உள்ள ஹெப்ரோன்(Hebron) எனும் இடத்தில் இப்றாஹீம் (அலை) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதாக நம்பப்படுகின்றது. அது யூதர்கள், கிறிஸ்துவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு புனிதமான இடமாகக் கருதப்படுகின்றது. இப்றாஹீம் (அலை) அவர்களின் நினைவுச்சின்னத்தைக் கொண்டுள்ள அந்தக் கட்டிட வளாகத்திற்கு "அல்-மஸ்ஜித் அல்-இப்றாஹீமி (Al-Masjid Al-Ibrahimi)" (இப்றாஹீமின் பள்ளிவாசல்) என்று பெயர். மேலும் முஸ்லிம் அல்லாதவர்களால் அவ்விடம் "முன்னோர்களின் கல்லறைகள் (Tombs of the Patriarchs)" என்று அழைக்கப்படுகின்றது.





அந்தக் கட்டிடம், அடிப்படையில், இரண்டு சதுர தூபிகளைக் கொண்ட செவ்வக வடிவிலான பெரிய பள்ளிவாசலாகும். அதில் பல அறைகளும் தொடர்ச்சியான பாதாளக் குகைகளையும் உள்ளடக்கியுள்ளது.

கட்டிடத்தின் நடுவில் உள்ள அறையில் இப்றாஹீம் (அலை) மற்றும் சாராஹ் அம்மையாரின் நினைவுச்சின்னங்கள் உள்ளன. தெற்குப்பகுதியில் உள்ள அறையில் (ஹிப்ரு மொழியில் ஒஹெல் யிட்ஜாக் (Ohel Yitzhak)) இஸ்மாஈல் (அலை) மற்றும் இஷ்ஹாக் (அலை) அவர்களின் நினைவுச்சின்னங்கள் உள்ளன.

வடக்குப் பகுதியில் உள்ள அறையில் யாகூப் (அலை) மற்றும் லியா (Leah) அம்மையாரின் நினைவுச் சின்னங்கள் உள்ளன. இப்றாஹீம் (அலை). இஸ்மாஈல் (அலை), இஷ்ஹாக் (அலை), யாகூப் (அலை), சாரா (Sarah) அம்மையார், ரெபெக்கா(Rebecca) அம்மையார், லியா(Leah) அம்மையார் ஆகியோரின் அடக்கஸ்தளங்கள் அந்தக் கட்டிடத்தின் அடியிலுள்ள பாதாள அறைகளில் பேணப்படுவதாக நம்பப்படுகின்றது.







இப்றாஹீம் (அலை) அவர்களின் கல்லறை

கல்லறைகளில் அடக்கம் செய்யப்பட்ட மனிதர்களை வழிப்படுவதை இஸ்லாம் தடைசெய்கின்றது. இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் (ஏதேனும்) கேட்கவேண்டுமானால், அதனை அல்லாஹ்விடம் கேளுங்கள்; உங்களுக்கு ஆதரவு தேவையென்றால், அதனை அல்லாஹ்விடம் தேடுங்கள்"











இறைவனுடன் பேசிய மனிதன்

# முஹம்மது ﷺ மற்றும் மூஸா عليه السلام

முஹம்மது ﷺ அவர்கள் மூஸா (அலை) அவர்களை வெகுவாகப் புகழ்ந்துள்ளார், மேலும் நியாயத் தீர்ப்புநாளில் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் சிம்மாசனத்தின் ஒரு பக்கத்தில் நின்று அதனைத் தாங்கிக்கொண்டு இருப்பார். எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.(புஹாரியில் குறிப்பிடப்பட்டுள்ளது, 4/157, 3408, 4/159, 3414)




மற்றுமொரு சமயம் முஹம்மது ﷺ அவர்கள் மதீனாவிற்கு வந்த பொழுது, யூதர்கள் ஆஷுரா நாளன்று நோன்பு நோற்பதைக் கண்டு (அந்த நாளில் தான் இறைவன் இஸ்ரேலிய மக்களை எகிப்தின் ஃபிர்அவ்னிடம் இருந்து காப்பாற்றினான்), முஸ்லிம்களையும் அந்நாளில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக நோன்பு நோற்கச் சொன்னார்கள். (அஷூரா நாள், சந்திர ஆண்டின் முதல் மாதத்தின் 10 ஆம் நாளாகும்).



திருக்குர்ஆனில் சுமார் மூன்றில் ஒரு பகுதியில் மூஸா (அலை) அவர்களைப்பற்றியும் இஸ்ரேலிய மக்களிடம் நடந்த சம்பவங்களைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. கூடுதலாக,திருக்குர்ஆன் ஹாரூன்(Aaron), ஸக்கரியா(Zachariah) மற்றும் யஹ்யா(John) போன்ற இறைத்தூதர்கள் இஸ்ரேலிய மக்களிடம் அனுப்பப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருக்குர்ஆனில் இறைவன் மூஸா (அலை), நூஹ் (Noah), இப்றாஹீம் (அலை) (Abraham), மூஸா (அலை) (Moses), ஈஸா (அலை) (Jesus) மற்றும் முஹம்மது ﷺ (Muhammad) ஆகிய ஐந்து இறைத்தூதர்கள் உட்பட அதிமுக்கியமான பணியுடன் (உலு அல் அஸ்ம் - Ulu Al Azm) அனுப்பப்பட்ட இறைத்தூதர்களிடம் (அவர்கள் அனைவரின் மீதும் அமைதி உண்டாகட்டும்) என்று உரையாடிதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, கடவுள் அவர்களிடமிருந்து ஒரு உறுதியான உடன்படிக்கையை எடுத்துக் கொண்டார்.

(திருக்குர்ஆன், 33:7).

மூஸா (அலை) அவர்கள் சார்க்கடலையும் (Dead Sea) பலஸ்தீனத்தையும்(Palestine) நோக்கியவாறு உள்ள நெபோ மலையிலோ அல்லது அதன் அருகிலோ மரணமடைந்ததாக நம்பப்படுகின்றது. அந்த மலையில் அமைக்கப்பட்டுள்ள அவரது நினைவு மண்டபம் இன்று ஜோர்டான் நாட்டின் முக்கியச் சுற்றுலாத்தலமாக விளங்குகின்றது.






முஹம்மது ﷺ மற்றும் மூஸா (அலை) அவர்களின் இடையே முஸ்லிம்கள் நிறைய ஒற்றுமையைக் காண்கிறார்கள். அவர்கள் இருவருமே இறைத்தூதர்கள், மேலும் இருவரும் இறைவனின் சட்ட திட்டங்களை உள்ளடக்கிய இறைவேதங்களைக் கொண்டுவந்தனர், மேலும் இருவரும் மக்களிடையே நீண்ட காலம் வாழ்ந்தனர். இருவருக்கும் மணமாகி








# முஹம்மது ﷺ மற்றும் ஈஸா عليه السلام

அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களின்படி, முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்;

> "அனைத்து மக்களையும் விட மர்யமின் (Mary) புதல்வனிடம் நானே மிக அருகாமையில் உள்ளேன், அனைத்து இறைத்தூதர்களும் தந்தைவழி சகோதரர்களாவர், மேலும் எனக்கும் அவருக்கும் (ஈஸா) இடையே வேறு இறைத்தூதர் இல்லை." (புஹாரி, 3285)

திருக்குரானில் ஈஸா (அலை)

திருக்குர்ஆன், ஈஸா (அலை) அவர்களை மர்யம் அம்மையாருக்கு வழங்கப்பட்ட "இறைவனின் வாக்கு" எனவும், "நற்செய்தி" எனவும் விவரிக்கின்றது. அவரது பெயர் "தேர்ந்தெடுக்கப்பட்டவர், மர்யமின் புதல்வன் (The Messiah Jesus son of Mary)".

இறைவன் அவரை (வானவர் ஜிப்ரீல்) மூலமாகப் பாதுகாத்து, இஸ்ரேலின் மக்களுக்கு இறைத்தூதராக அவர்களை நேர்வழிப்படுத்தவும் அல்லாஹ்வை வழிப்பட வேண்டி வழிநடத்தவும் அனுப்பப்பட்டார். (திருக்குர்ஆன் 2:87, மேலும்,திருக்குர்ஆன் ஈஸா (அலை) அவர்களை இவ்வுலகிலும் மறுமையுலகிலும் ஒப்பற்றவர் எனவும் நேர்வழிபெற்றவர் எனவும் இறைவனின் அருகில் அழைத்து வரப்பட்டவர் எனவும் விவரிக்கின்றது.



திருக்குர்ஆன், ஈஸா (அலை) அவர்களுக்கு இறைவன் இலக்கியத்தையும், ஞானத்தையும், தோரா (Torah) மற்றும் இன்ஜீலையும் கற்பித்ததான் என விவரிக்கின்றது. கண்பார்வையற்றவருக்கு பார்வை வழங்கவும், குஷ்டரோகியைக் குணப்படுத்தவும், அவனது விருப்பப்படி இறந்தவரை உயிர்ப்பிக்கவும் அல்லாஹ் துணைபுரிந்தான்.

ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் திரும்புவார்கள் என இஸ்லாமியர்கள் நம்புகின்றனர். ஈஸா (அலை) சுவர்க்கத்திலிருந்து இறங்காத வரையில் நியாயத்தீர்ப்புநாள் நெருங்காது என முஹம்மது ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



பெத்தலகம்மிலிருந்து (Bethlehem) புகைப்படங்கள்: “சர்ச் ஆ்ஃப் நேட்டிவிடி (Church of Nativity)”, உலகில் பயன்பாட்டிலுள்ள பழமையான தேவாலயங்களில் ஒன்றாகும். அதுதான் ஈஸா (அலை) பிறந்த இடமென்று பல கிறிஸ்துவர்களால் நம்பப்படுகின்றது.

## ஈஸா (அலை) அவர்களின் மீள்வருகை

மக்களிடத்தில் ஏகத்துவ வழக்கத்தைக் கொண்டுவரவும் பூமியில் இறைவனின் சட்டதிட்டத்தை அமல்படுத்தவும் அவர் இறங்காத வரையில் உலகிற்கு இறுதிநாள் வராது. அவர் பொய்யானவானவர்களை எதிர்த்து சண்டையிடுவார், மேலும் மக்கள் அனைவரையும் ஓரே இறைவனை நோக்கி ஒன்றுபடுத்துவார். அவர் நேர்மையான அரசராக இருப்பார் மற்றும் உலகில் அமைதியை நிலைநாட்டுவார். இஸ்லாமியர்கள் அவருக்குத் துணை நிற்பவர்களாகவும் ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றுபவர்களாகவும் இருத்தல் அவசியமாகும்.







டமஸ்கஸ் (Damascus), சிரியாவின் புகைப்படங்கள்: ஒரு சில கூற்றுகளின்படி, டமஸ்கஸின் கிழக்குப்பகுதியில் ஈஸா (அலை) அவர்கள் இறங்குவார் என முஹம்மது ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் தெரிவித்த “செய்தியின்” பொதுமை இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை உள்ளட்ட அனைத்து இறைத்தூதர்களும் பெற்ற அதே செய்தியைத்தான் முஹம்மது ﷺ அவர்களும் பெற்றார்கள் ஆனால் அவரது பணி உலகளாவியது என முஸ்லிம்கள் நம்புகின்றனர். அவரிடம் மக்களின் நம்பிக்கையைச் சரி செய்யும், உண்மையான நம்பிக்கைக்கு அவர்களைத் திரும்ப அழைத்துவரும், நல்ல காரியங்களைக் கற்றுக் கொடுக்கும் பணி

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக - ஓர் அருட் கொடையாகவேயன்றி அனுப்பவில்லை. - திருக்குர்ஆன் 21:107

ரோமானிய பேரரசுக்கு முஹம்மது ﷺ அவர்களின் கடிதம்

இஸ்லாத்தை “இறைவனின் செய்தியாக” ஏற்றுக்கொள்ளும்படி அண்டை நாடுகள் மற்றும் பெர்சியா(Persia), பைசாண்டின்(Byzantine) மற்றும் எகிப்து(Egypt) போன்ற வல்லரசு நாடுகள் ஆகியவற்றின் அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு முஹம்மது ﷺ அவர்கள் கடிதம் அனுப்பினார்கள். பைசாண்டின் நாட்டு ஹெறாக்லியஸ்(Heraclius) மன்னனுக்கு அக்கடிதம் கிடைக்கப்பெற்ற நேரம், ( அங்கு வியாபாரம் செய்துக்கொண்டு இருந்த மக்கா நகரின் வியாபாரியும் முக்கியத் தலைவர்களில் ஒருவருமான) அபுசுஃபியானை அழைத்தார். ஹெறாக்லியஸ் அபுசுஃபியானிடம் சில கேள்விகள் கேட்டு அதற்கு நேர்மையாக விடையளிக்குமாறுக் கேட்டுக்கொண்டார்.



ஹீராக்ளீஸ்க்கு முஹம்மது ﷺ அவர்களின் (அரேபிய எழுத்துக்களிலானா) கடிதம்

ஹெராக்லியஸ் : சமூகத்தின் எந்த வர்க்கத்திலிருந்து முஹம்மது ﷺ வந்துள்ளார்?

அபுசு∴பியான் : அவர் மக்காவின் உன்னதமான குடும்பத்திலிருந்து வந்துள்ளார்.

ஹெராக்லியஸ் : அவர் எப்பொழுதாவது துரோகமிழைக்கவோ வாக்குறுதியை மீறவோ செய்துள்ளாரா?

அபுசு∴பியான் : இல்லை.

ஹெராக்லியஸ் : அவரைப் பின்பற்றுபவர்கள் எப்படி, அவர்களின் எண்ணிக்கை உயர்கின்றதா அல்லது குறைகின்றதா? மேலும், அவரைப் பின்பற்றுபவர்களில் எவரேனும் அவரிடம் இருந்து விலகிச் சென்றுள்ளனரா?

அபுசு∴பியான் : உண்மையில் அவரைப் பின்பற்றுபவர்கள் அவரை ரசிக்கின்றனர். அவர்களின் எண்ணிக்கைக் கூடவே செய்கின்றது.

ஹெராக்லியஸ் : அவரைப் பின்பற்றுபவர்களுக்கு முஹம்மது ﷺ என்ன போதிக்கிறார்?

அபுசு∴பியான் : ஓர் இறை நம்பிக்கை மற்றும் சமூகநீதி.

ஹெராக்லியஸ் சில நாளிகைகள் சிந்தித்த பின் கூறினார், “நீங்கள் என்னிடம் கூறியது உண்மையெனில், முஹம்மது ﷺ எனது இராஜ்ஜியத்தைக் கைப்பற்றக்கூடியவர் தான்”.

ஹெராக்லியஸ் அரசர் ரோமசாம்ராஜ்ஜித்தை 610 கி.பி முதல் 640 கி.பி. வரை ஆண்டார், அக்காலக்கட்டத்தில் அவர் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு பெர்சிய சாம்ராஜ்ஜியத்தை வீழ்த்தினார், மேலும் சிரியா, பலஸ்தீன் மற்றும் எகிப்தை மீண்டும் கைப்பற்றினார். 636 கி.பி யில் பலஸ்தீன், சிரியா, எகிப்து மற்றும் வடக்கு ஆ∴ப்ரிக்காவை இஸ்லாம் சென்றடைந்தது.. 642 கி.பி யில் இஸ்லாம் பெர்சியாவைச் சென்றடைந்தது.

**இஸ்லாம், ஓர் உலகளாவிய நம்பிக்கை:**
தற்சமயம், கிறிஸ்துவத்தைத் தொடர்ந்து வேகமாக வளரும் இரண்டாம் நிலையில் உள்ளது. 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் எடுக்கப்பட்ட விரிவான புள்ளிவிவர ஆய்வின்படி, இன்று உலகளவில் 1.5 7பில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றனர், அது 2015 ஆம் ஆண்டின் எதிர்பார்க்கப்படும் 6.8 பில்லியன் உலக மக்கள்தொகையில் 23% ஆகும் (பியூ மன்றம், மதம் மற்றும் பொது வாழ்வு 2015 (Pew Forum on Religion & Public Life 2015)).

**அனைத்து முஸ்லிம்களும் அரேபியர்கள் அல்ல:**
உலகளவில் வாழும் முஸ்லிம் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கைவிட குறைவாகவே அரேபிய நாடுகளில் வாழ்கின்றனர்.




உலகளவில் 2.1 பில்லியன் கிறிஸ்துவ மக்கள் வாழ்கின்றனர், அது உலக மக்கள் தொகையில் 33% ஆகும் மற்றும் 1.1 பில்லியன் நாத்திகர்கள் வாழ்கின்றனர் (அது உலக மக்கள் தொகையில் 16% ஆகும்). யூதர்கள், உலக மக்கள்தொகையில் 0.22% வாழ்கின்றனர் (சுமார் 16 மில்லியன் மக்கள்).

## இறுதிக்குறிப்புகள்

1 திருக்குர்ஆனில் இருந்து மர்யம் அம்மையாரைப்பற்றிய சில குறிப்புகள், பாகம் 19: வசனங்கள் 16-23 “மர்யம்”

(நபியே!) இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவு கூறுவீராக, அவர் தம் குடும்பத்தினரை விட்டும் நீங்கி, கிழக்குப் பக்கமுள்ள இடத்தில் இருக்கும்போது,

அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை அமைத்துக் கொண்டார்; அப்போது நாம் அவரிடத்தில் நம் ரூஹை (ஜிப்ரீலை) அனுப்பி வைத்தோம்; (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார்.

(அப்படி அவரைக் கண்டதும்,) "நிச்சயமாக நாம் உம்மை விட்டும் ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன்; நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (நெருங்காதீர்)"" என்றார்.

"நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதர்; பரிசுத்தமான புதல்வரை உமக்கு அளிக்க (வந்துள்ளேன்"") என்று கூறினார்.

அதற்கு அவர் (மர்யம்), "எந்த ஆடவனும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை பிசகியவளாக இல்லாதிருக்கும் நிலையிலும் எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்?"" என்று கூறினார்.

"அவ்வாறேயாகும்; 'இது எனக்கு மிகவும் சுலபமானதே; மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாகவும் நாம் அவரை ஆக்குவோம்; இது விதிக்கப்பட்ட விஷயமாகும்" என்று உம் இறைவன் கூறுகிறான்"" எனக் கூறினார்.

அப்பால், மர்யம் ஈஸாவை கருக்கொண்டார்; பின்னர் கர்ப்பத்துடன் தொலைவிலுள்ள ஓரிடத்தை சென்றடைந்தார்.

பின்பு (அவருக்கு ஏற்பட்ட) பிரசவ வேதனை அவரை ஒரு பேரீத்த மரத்தின்பால் கொண்டு வந்தது; "இதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறக்கப்பட்டவளாகி இருக்கக் கூடாதா"" என்று கூறினார்.

திருக்குர்ஆனில் உள்ள குறிப்புகளின்படி, மர்யம் அம்மையார் அவரைக் குற்றம் சாட்டிய மக்களிடம் ஈஸா (அலை) அவர்களை அழைத்து வந்தார், ஆனால் ஈஸா (அலை) (கைக்குழந்தை) ஆச்சரியமூட்டும் வகையில் பேசினார்கள். மற்றும் அவர் (கைக்குழந்தை ஈஸா (அலை) கூறினார்: பாகம் 19: வசனங்கள் 30-35, மர்யம்:

அத்தியாயம்

5

# இஸ்லாமிய நாகரிகம் மதிப்பு மற்றும் ஒழுக்கம்




"மேலும், (நபியே) நிச்சயமாக நீர்
மிக உயர்ந்த மகத்தான நற்குணம்
உடையவராக இருக்கின்றீர்"
திருக்குர்ஆன் 68:4

# இஸ்லாமிய நாகரிகத்தின் தார்மிக தளங்கள்

**உடல் மற்றும் ஆன்மாவின் தேவைகளைத் திருப்திக்கொள்ள சரியான சமநிலை தேவை** முஹம்மது ﷺ அவர்கள் உலகியல் மற்றும் ஆன்மீகத்தின் இடையே சரியான சமநிலையைப் பாதுகாக்க வலியுறுத்தினார்கள். சமநிலையுடனும் சரியான வழியிலும் உடல் மற்றும் ஆன்மாவின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அவர் தனது தோழர்களுக்கு அறிவுறுத்தினார்.



ஒரு மேம்பட்ட வாழ்க்கைமுறையைக் கொண்டு தனது உடல் மற்றும் ஆன்மாவிற்கு மதிப்புக்கூட்ட மதநம்பிக்கையினை ஒரு

**முஹம்மது ﷺ அவர்கள் அதீதத்தைக் கண்டித்தார்கள்:** அவர் சமநிலையான வாழ்க்கைமுறை, சமநிலைப் பார்வை மற்றும் பகுத்தறிவுள்ள சிந்தனைகளையே வலியுறுத்தினார். அவரது வழிபாட்டுமுறைகளைப் பற்றி அறிந்துக்கொள்ள, மூன்று நபர்கள் அவரது இல்லத்தை அடைந்தனர். அந்நேரத்தில் முஹம்மது ﷺ அவர்கள் இல்லத்தில் இல்லை, மேலும் அவரது துணைவியார் அவர்களுடன் உரையாடினார்கள். எனினும், அவரது வழிபாட்டுமுறை அவர்கள் எதிர்பார்த்த நிலைக்கு இல்லை என்று எண்ணினர்.




மதநம்பிக்கையிலான வாழ்வியல் முறையில் ஆன்மீகத்தில் அதீத கவனம் செலுத்தவும் உடல் தேவைகளைவிட்டு ஒதுங்கிக்கொள்ளவும் அதன் இயற்கையான இச்சைகளைக் கட்டுப்படுத்தவும் வேண்டும் என அவர்கள் எண்ணினர்.

அவர்களின் புரிதலின்படி, மதநம்பிக்கையாளர் திருமணம் செய்யாமல் தனியாக வாழவேண்டும் என எண்ணினர். மேலும், அவர்கள் தினமும் நோன்பு நோற்க வேண்டும் எனவும் தினசரி தொழுகைகளைத் தவிர இரவிலும் அதிகப்படியான தொழுகைகள்

முஹம்மது ﷺ அவர்கள் இதனைக் கேள்விப்பட்டதும் வருத்தமடைந்து, தான் வழக்கமாக தினமும் இரவில் அதிகப்படியானத் தொழுகைகள் தொழுதாலும், மற்றவர்களைப் போல் ஓய்வெடுத்துக் கொள்வதாகத் தெரிவித்தார்கள். தான் வருடந்தோறும் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பதாகவும், மேலும் சில நாட்கள் தான் நோற்காகதாகவும் சில நாட்கள் நோன்பு நோற்பதில்லை எனவும் தெரிவித்தார்கள். இறுதியாக தான் மணமுடித்துள்ளதாகவும் மக்கள் மணமுடிக்காமல் இருப்பதைத் தான் விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்கள். முஹம்மது ﷺ அவர்கள்; பின்வருமாறு கூறியுள்ளார்



"இதுவே எனது சுன்னா (இறைவன் விரும்பும் வாழ்க்கைமுறை). இதனை எவரேனும் ஏற்றுக்கொள்ள மறுத்தால், அவர் நம்மில் ஒருவராக மாட்டார்". (புஹாரி, 1184) மற்றும் (முஸ்லிம், 849)

எளிமை

**முஹம்மது ﷺ அவர்கள் சிரமத்தை விரும்பியதில்லை:** முஹம்மது ﷺ அவர்கள் ஒரு விஷயத்திற்காகவோ அல்லது ஒரு பிரச்சனைக்காகவோ ஒன்றுக்கும் மேற்பட்ட மாற்றுகளிலிருந்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்க நேரிட்டால், அவர்கள் இலகுவானதும் சட்டப்பூர்வமானதுமானதையே எப்பொழுதும் தேர்ந்தெடுத்தார்கள்.

(புஹாரி, 8/160, 6786. முஸ்லிம், 7/80, 2327)



சித்திர வடிவமைப்பாளர்: விசாம் ஷாவ்கட் (Wissam Shawkat)



## சுத்தம் மற்றும் தூய்மை

இஸ்லாமிய நம்பிக்கையில் தூய்மையும் தனிப்பட்ட சுகாதாரமும் மிகவும் முக்கியமானதாகும்.

"... பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான்; இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்". -திருக்குர்ஆன் (2:222)

"உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக" -திருக்குர்ஆன் (74:4)

## தினசரி உளூ செய்தல்

தொழுகையின்முன் வுளூச்செய்தல் தொழுகையின் கட்டாயமாகும். வுளூச் செய்வது என்பது கைகள், முகம், முழங்கைகள் வரை கழுவுதல், தலையைத் தடவுதல் மற்றும் கால்களைக் கழுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.



## குஸுல் (Ghusul), முழு உடலையும் கழுவுதல்

குஸுல் செய்தலை (முழு உடலையும் கழுவுதலை) வழக்கமாகக் கொண்டிருப்பது மிகவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது, மேலும் அது முஹம்மது ﷺ அவர்களின் சுன்னா (போதனைகள் மற்றும் வாழ்வியல் முறை) எனவும் கருதப்படுகின்றது. எனினும், குஸுல் செய்தல் சில தருணங்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது (உதாரணத்திற்கு, உடலுறவு மற்றும் மாதவிடாய்க்குப் பின்).

முஹம்மது ﷺ அவர்கள் சுத்தம் மற்றும் தூய்மைக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். தனது சகாக்களிடம் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புறத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருக்கும்படி வலியுறுத்தியுள்ளார்கள். சாலையிலிருந்து பாதிப்பளிக்கக்கூடியவைகளையோ குப்பைகளையோ அகற்றுவதும் கூட நன்மையளிக்கக்கூடியச் செயல் என போதித்துள்ளார்கள்.

மேலும், முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களைத் தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் சுத்தத்தை எப்பொழுதும் பேணும்படி வலியுறத்தியுள்ளார்கள். அவரது இந்த கூற்றில் பின்வருபவைகளும் உள்ளடங்கியுள்ளன;

- சுத்தமானதும் நேர்த்தியானதுமான ஆடைகளை அணிய வேண்டும், ஆனால் ஊதாரித்தனமாக அணியக் கூடாது
- நறுமணங்களை (Teeb) உபயோகித்து நல்ல மணத்துடன் இருக்க வேண்டும்
- நகங்களைக் களைய வேண்டும், மேலும் அக்குள் மற்றும் அந்தரங்களில் உள்ள முடிகளை அகற்ற வேண்டும்
- உணவு உண்பதற்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவ வேண்டும். உறங்கி எழுந்தவுடன் கைகளைக் கழுவாமல் உணவைத் தொடக்கூடாது






## மிஸ்வாக் மற்றும் பற்களின் தூய்மை. வாய் தூய்மை மற்றும் நாள் முழுவதுமான நல்ல

**பற்களின் பராமரிப்பு**

முஹம்மது ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்: “உங்களுக்கு கடினமானதாக இருந்திருக்கா விட்டால், ஒவ்வொரு தொழுகையின் (அதாவது, ஐவேளைத் தொழுகை) முன்பும் உங்களை மிஸ்வாக்கைக் கொண்டு பற்களைச் சுத்தம் செய்ய வலியுறுத்தி இருப்பேன்” (புஹாரி மற்றும் முஸ்லிமில் குறிப்பிடப்பட்டுள்ளது)



### மிஸ்வாக் என்றால் என்ன?

மிஸ்வாக் என்பது ஸால்டிவோர் பெர்சிகா (Salvadore Persica) வின் பொதுப்பெயர் (பல் தூரிகை மரம் (tooth brush tree), மேலும் அரக் மரம் (Arak tree) எனவும் அறியப்படுகின்றது. மிஸ்வாக் பற்களின் இடையே தூய்மைப்படுத்தும். மேலும், அழுத்தம் காரணமாக அது உடையாமல், நெகிழும் தன்மையுடனும் உறுதியுடனும் இருக்கும்.



மிஸ்வாக்கின் இரசாயன பகுப்பாய்வில் அது பல பயனுள்ள தாதுப்பொருட்கள் (minerals) மற்றும் அதிக அளவில் ஃப்ளோரைடுகள் (Fluorides), சிலிக்கா (silica), விட்டமின் சி, மற்றும் சிறிய அளவு குளோரைடுகள் (chlorides), டானின்கள் (tannins), சபோனின்கள் (saponins), ஃபிளவனாய்டுகள் (flavenoids) மற்றும் ஸ்டெரோல்ஸ் (sterols) ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

குறிப்பு: பகுப்பாய்வு ஆராய்ச்சிப்படி, பற்களில் ஏற்படும் ப்ளேக்ஸ் (plaques), மந்தத்தன்மை (recession) மற்றும் இரத்தக்கசிவு ஆகியவற்றை எதிர்க்கின்றது. மிஸ்வாக் குச்சியிலிருந்து வெளியாகும் சாப்(sap) மற்றும் சிலிக்கா (உறுதியான பளபளப்பான பொருள்), சிராய்ப்புத் தன்மையுடன் பற்களிலிருந்து கறைகளை நீக்க உதவுகின்றது. மிஸ்வாக் பற்களை சிறந்த முறையில் சுத்தப்படுத்தி அதனை வெண்மையாக்குவதுடன் எனாமல் மற்றும் பசைகளைப் பாதிப்பதும் இல்லை.

பற்களில் இருக்கும் ப்ளேக் (plaque) மற்றும் கறைகளை நீக்க குளோரைடு (chloride) உதவுகின்றது, மேலும், விட்டமின் சி, திசுக்களைக் குணப்படுத்தவும் பழுதுபார்க்கவும் உதவுகின்றது. மிஸ்வாக்கின் சாறு தலைவலி, சாதாரண சளி, வாந்தி, பதற்றம் மற்றும் தலைச்சுற்றல் போன்றவற்றில் இருந்து நிவாரணம் அடையவும் உதவுவதாக நம்பப்படுகின்றது.

## ஞானத்தைத் தேடுங்கள்

முஹம்மது ﷺ அவர்கள் அறிவியலின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும்படியான இறைச் செய்தி மற்றும் வழிகாட்டுதலைக் கொண்டுவந்தார். இவை அனைத்தும் “படி” என்று துவங்கிய இறைவெளிப்பாட்டிலிருந்து ஆரம்பமானது. சில தசாப்தத்திற்குள், அது ஞானத்தின் புரட்சியாக உருவாகி அரேபியா மற்றும் உலகம் முழுதும் அனைத்து வகையான அறிவியல் முன்னேற்றத்திற்கு வித்திட்டது.




படித்தல், சிந்தித்தல், கண்காணித்தல், ஆராய்தல், புரிதல், பார்த்து பிரதிப்பலித்தல் போன்ற வார்த்தைகள் திருக்குர்ஆனில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது.

> நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும்; இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.
>
> அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்;. வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை, நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்றும்).
>
> திருக்குர்ஆன் (3:190-191)



> உறுதியாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு பூமியில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன.
>
> உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன, (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?
>
> திருக்குர்ஆன் (51:20-21)

முஹம்மது ﷺ அவர்கள் மக்களைக் கற்கச் சொல்லியும் பயனுள்ள ஞானத்தைத் தேடச் சொல்லியும் அவர்களின் வாழ்வில் மதிப்பைக் கூட்டினார்கள். அவர் தனது சகாக்களிடம் ஞானத்தை மனிதயினத்தின் நன்மைக்காக உபயோகிக்குமாறும் பூமியில் குழப்பத்தை உண்டாக்கக்கூடாது எனவும் வலியுறுத்தினார்கள். அவர் அதனை இறையன்புடன் ஒப்பிட்டார்:



> “எவர் ஒருவர் ஞானத்தைப் பெறும் பாதையில் பயணிக்கிறாரோ, அவர் சுவர்க்கத்தை அடைய இறைவன் வழிவகுப்பான்”
>
> (முஸ்லிம், 8/71, 2699)

பல நூற்றாண்டுகளுக்கு, இஸ்லாமியர்கள் தூய மற்றும் பயன்பாட்டு அறிவியலின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். திருக்குர்ஆனின் மொழியாகிய அரபி மொழி, அறிவியலின் மொழியாக உருவாகி பல பல்கலைக்கழகங்கள் வேதியியல், கணிதம், கால்குலஸ் (calculus), மருத்துவம், வானியல், புவியியல், பொறியியல். கலை மற்றும் இலக்கியம் போன்ற துறைகளில் அரபி மொழியில் முழுநேரமாகக் கற்றுக் கொடுத்து பட்டங்களை வழங்கின.

மேற்கத்திய நாகரிகம் இஸ்லாமிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாக சில ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவ்வாறில்லாமல் இருந்திருந்தால், மேற்கத்திய நாகரிகம் இன்று இருக்கும் நிலையை அடைய குறைந்தது 500 ஆண்டுகள் தேவைப்பட்டு இருக்கும்.

| விஞ்ஞானி | முக்கிய பங்களிப்புகள் |
|---|---|
| கெபர் (Geber)<br>வேதியியலின் தந்தை<br>721-815 கி.பி | ஜாபர் இப்னு ஹய்யான் (Jaber Ibn Hayyan) மிகவும் பிரசித்திப் பெற்ற பல்துறை வல்லினர்: அவர் ஒரு வேதியியலாளர், விண்வெளியாளர், ஜோதிடர், பொறியியலாளர், நில அமைப்பியல் வல்லுனர், தத்துவவாதி மற்றும் மருத்துவர். பல விஞ்ஞானிகளால் அவர் வேதியியலின் தந்தையாகக் கருதப்படுகிறார்.<br>அவரே நைட்ரிக் அமிலம், ஹைட்ரோக்லோரிக் அமிலம் மற்றும் சல்ஃப்யூரிக் அமிலம் போன்றவற்றை முதன்முதலாக கண்டுபிடித்தவர். அவரே ஆவியாதல் (Evaporation), பதனிடுதல் (Sublimation) மற்றும் வடிகட்டுதல் (Distillation) போன்ற இரசாயண செயல்முறைகளைக் கண்டுபிடித்தவர். வேதியியலின் வரலாற்றாளரான எரிக் ஜான் ஹாமைர்ட் (Eric John Holmyard) ரசவாதத்தை நடைமுறை அறிவியலாக மாற்றியதற்காக கெபர் அவர்களையே பெருமைப் படுத்துகிறார். |
| அல்குவாரித்மி (Algoritmi)<br>வழிமுறைகளின் தந்தை<br>780-850 கி.பி | முஹம்மது இப்னு மூஸா அல்குவாரித்மி அவரது காலத்தின் மிகச்சிறந்த விஞ்ஞானியாவார். அவர் ஒரு கணிதமேதை, விண்வெளியாளர் மற்றும் நில அமைப்பியல் வல்லுனர். தசம நிலை எண் அமைப்பை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் அவரே. அல்ஜீப்ரா(Algebra - அல்ஜப்ர் (Al-Jabr) ல் இருந்து உருவானது) மற்றும் "வழிமுறைகள் (Algorithm)" கண்டுபிடித்தன் மூலம் கணிதத்திற்கு பெரும் பங்களிப்பை அளித்துள்ளார். அவரது பெயரே ஸ்பானிஷ் (Spanish) மொழியில் "குவாரிஸ்மோ (guarismo)" மற்றும் போர்த்துகீஸ் (Portuguese) மொழியில் அல்காரிஸ்மோ (Algaeismo) போன்ற வார்த்தைகளுக்கு மூலாதாரமாகும். இரண்டிற்கும் தசமம் (digit) என்று அர்த்தம். |
| ரேசஸ் (ராசிஸ்)<br>(Rhases (Rasis))<br>மருத்துவர்களின் தந்தை<br>865-929 கி.பி | அபூ பக்ர் முஹம்மது இப்னு ஸகரியா அல்ராஜி (Abu Bakr Mubammad Ibm Zakariya Al-Razi) பல விஞ்ஞானிகளால் அவர் மருத்துவர்களின் தந்தை என்று கருதப்படுகின்றார். அவரே சின்னம்மை (Small Pox) மற்றும் தட்டம்மை (Measles) இரண்டிற்கும் வேறுபாடு கண்டறிந்தவர்.<br>மது மற்றும் மண்ணெண்ணெய் போன்ற பல கலவைகள் மற்றும் இரசாயனங்களை அவர் கண்டுபிடித்துள்ளார். எட்வர்ட் க்ரான்வில்லே ப்ரௌனி (Edward Granville Browne) அவரை அனைத்து மருத்துவர்களிலும் அசலானவர் எனக் கருதுகின்றார். அவர் எழுதிய "அல்-ஹவி" மருத்துவக் களஞ்சியம் ("Al-Hawi" Medical Encyclopedia), பெரிய மருந்துகள் (The Big Pharmacology), சிறுநீரக மற்றும் சிறுநீரக கற்கள் (Kidney and the Bladder Stones) மற்றும் அனுபவங்களின் புத்தகம் (The Book of Experiences) போன்ற புத்தகங்கள் ஆங்கிலம் உட்பட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| அவிசென்னா (Avicenna) நவீன மருத்துவத்தின் தந்தை 980-1037 கி.பி | அபு அலி அல்-ஹுஸைன் இப்னு ஸீனா (Abu Ali Al-Hussein Ibn Sina) மருத்துவத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற முஸ்லிம் கல்வியாளராவார், மேலும் உலகில் அவர் மிகவும் பிரபலமான முஸ்லிம் விஞ்ஞானியுமாவார். அவர் ஒரு பல்துறை வல்லுனர், மேலும் அறிவியல், மதநம்பிக்கை மற்றும் தத்துவம் போன்றவற்றில் சுமார் 200 புத்தகங்களை எழுதியுள்ள நூலாசிரியருமாவார்.<br>அவிகன்னா அவர்களின் இரண்டு முக்கிய வேலைப்பாடுகள்: அரிஸ்டாட்டில் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தத்துவ கலைக்களஞ்சியமான ஷி்ஃபா (சிகிச்சைமுறைப் புத்தகம்) மற்றும் அல் கானுன் ஃபிடிப் (Al Qanun Fi-Tibb) (மருத்துவ நியதி).<br>நியதி, நோய்கள் மற்றும் அதன் காரணங்களை வகைப்படுத்தப்பட்டு விவரிக்கப்பட்ட 14 பாகங்களைக் கொண்ட புத்தகமாகும். அது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, மேலும் ஏழு நூற்றாண்டுகளுக்கு (18 ம் நூற்றாண்டு வரை) ஐரோப்பாவில் அது மருத்துவ உரையாக இருந்தது. |
| அல் ஜஸரி (Al Jazari) 1136-1206 கி.பி | அபுல் இஸ் இப்னு இஸ்மாஈல் அல்-ஜஸரி (Abul-Iz Bin Ismael Al-Jazari). அவர் "அத்தியாவசமான இயந்திரங்களின் அறிவுப் புத்தகம் (Book of Knowledge of Ingenious Mechanical Devices)" எனும் புத்தகத்தின் ஆசிரியராக நன்கு அறியப்படுபவர். அதில் அவர் ஐம்பது இயந்திரங்களின் கட்டுமான யுக்திகளை விவரித்துள்ளார்.<br>அவர் கேஸ்ல் க்லாக் (Castle Clock) எனப்படும் மிகப்பெரிய வானியல் கடிகாரத்தைக் கண்டுபிடித்துள்ளார், அதுவே நிரலாக்கத்தக்க முதல் கணினியாகும்.<br>டொனால்ட் ரௌட்லெட்ஜ் ஹில் (Donal Routledge Hill) கூற்றுப்படி அல்-ஜஸரியே அதிநவீன மெழுகுவர்த்தி கடிகாரங்களை விவரித்துள்ளார். மேலும் அவரே நீர் கடிகாரங்கள் மற்றும் சுழலும் இயக்கத்தை நேர்கோட்டு இயக்கமாக மாற்றும் குறுக்குச்சட்டத்தையும் கண்டுபிடித்துள்ளார். |



Latin Figures:

I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X

Arabic numbers :

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10

# விளையாட்டின் மூலம் சுய முன்னேற்றம்

முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களிடம் தங்கள் உடலை ஆரோக்கியத்துடன் வைத்துக்கொள்ளும்படி ஊக்குவித்துள்ளார்கள். மேலும், நீச்சல், வில்வித்தை, குதிரைச் சவாரி மற்றும் குதிரைப்பந்தயம் போன்ற விளையாட்டுகளையும் கற்றுக்கொள்ளும்படி ஊக்குவித்துள்ளார்.



கூடுதலாக, உற்சாகமும் உத்வேகமும் அளிக்கக்கூடிய விளையாட்டான ஓட்டப்பந்தயத்தில் தனது சகாக்களுடன் பங்கேற்றார். முஹம்மது ﷺ அவர்கள் தனது துணைவியார் ஆயிஷா (ரலி) அவர்களுடன் ஓட்டப்பந்தயம் வைத்து ஓடுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு முறை அவரை (ஆயிஷா (ரலி) அவர்கள் வென்றார், மறுமுறை முஹம்மது ﷺ வென்றார்கள். இந்நடவடிக்கை முஹம்மது(ஸல்) அவர்களின் பரஸ்பர அன்பையும் ஒற்றுமையையும் உற்சாகத்தையும் பிரதிபலிக்கின்றது. (அபூதாவூத், 2/334, இப்னு மாஜா, 3/149, 1979)

மதீனா நகரின் நபவி பள்ளிவாசலின் மேற்கில், முஹம்மது ﷺ அவர்கள் பந்தய மைதானம் அமைக்க ஓர் இடத்தையும் ஒதிக்கீடு செய்தார்கள். அதே மைதானத்தில் குதிரைப்பந்தயமும் நடைப்பெற்றது. அம்மைதானத்தின் அருகில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டு அதற்கு ஸபக் பள்ளிவாசல்(Sabaq Mosque) (அதாவது, பந்தைய மைதானத்தின் பள்ளிவாசல்) என்று பெயர் சூட்டப்பட்டது.



# சமூக மதிப்பு

## முஹம்மது ﷺ அவர்கள் மக்களை ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பு செலுத்த ஊக்குவித்தார்கள்.



முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “இறைவன் மீது ஆணையாக, நீங்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பு செலுத்தாத வரை, நீங்கள் உண்மையான நம்பிக்கையாளராக மாட்டீர்கள். நான் உங்களிடம் கூறுகிறேன், நீங்கள் அதனைச் செய்தால் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விரும்புவீர்கள். ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லி அதனை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.”

மேலும் அவர் கூறினார், “ஒருவர் தனக்கு விரும்பியதைப் போன்றே தனது சகோதரருக்கு விரும்பாத வரையில் அவர் நல்ல நம்பிக்கையாளர் ஆக மாட்டார்.”

மேலும் கூறினார், “எவரொருவர் வேறு நம்பிக்கையாளரின் இக்கட்டான நிலையில் உதவுகின்றாரோ அவருக்கு நியாயத்தீர்ப்பு நாளில் இக்கட்டான நிலையில் இருந்து அல்லாஹ் காப்பாற்றுவான் மற்றும் ஒருவர் மற்றவருக்கு உதவிக்கொண்டு இருக்கும் வரை அவருக்கு அல்லாஹ் உதவுவான்” (முஸ்லிம்)



மற்றவர்களைச் சந்திக்கையில் பிரகாசமான சிரித்த முகத்துடன் சந்திப்பதும் நன்மைத் தரும் செயலே.

முஹம்மது ﷺ

**மற்றவர்களை வாழ்த்துவதும் ஓர் அமைதிச் செய்தியே:** முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “எந்த ஒரு அன்பான செயலையும் குறைத்து மதிப்பிடாதீர்கள், நீங்கள் மற்றவரை இன்முகத்துடன் சந்திப்பதாயினும் சரி.”மேலும் அவர் கூறினார், “யார் முதலில் வாழ்த்துகின்றாரோ அவரே மற்றவர்களைவிட இறைவனின் அருகில் உள்ளார்.மற்றொரு சமயத்தில், ஒருவர் அவரிடம் மக்களிடம் நன்முறையில் நடப்பதைப் பற்றி கேட்டபொழுது, “மக்களுக்கு உணவளியுங்கள் மேலும் நீங்கள் அறிந்தவர் மற்றும் அறியாதவருக்கு வாழ்த்துக் கூறுங்கள்.”(முஸ்லிம் - 2626)



**முஹம்மது ﷺ அவர்கள் மக்களிடம் அன்பாக வாழ்த்து தெரிவித்தார்கள்:** முஹம்மது ﷺ அவர்கள் மக்களைப் பிரகாசமான இன்முகத்துடன் சந்தித்தார்கள், மேலும் அவர் கைகுலுக்கும் பொழுது, அடுத்தவர் தன் கையை விலக்கும் வரை அவர் விலக்கமாட்டார்.

**முஹம்மது ﷺ அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு அதிகம்:** முஹம்மது ﷺ அவர்கள் மிகவும் மகிழ்ச்சியான நன்னம்பிக்கையாளர். அவருடன் பழகியவர்கள் அவரை மிகவும் விருப்பத்திற்குரியவர் என்றும் மிகவும் மதிப்பிற்குரியவர் என்றும் விவரிக்கின்றனர். பலமுறை அவர் தனது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் நகைச்சுவையாக உரையாடியுள்ளார்.

முஹம்மது ﷺ அவர்களின் காலக்கட்டத்தில், (ஓட்டம் போன்ற) பந்தயங்கள் உற்சாகத்துக்கான செயல்களாகும்.



முஹம்மது ﷺ அவர்கள் தன் துணைவியார் மற்றும் குழந்தைகளுடன் பலமுறைப் பந்தயத்தில் ஈடுபட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒரு வயதான அம்மையாருடனான முஹம்மது ﷺ அவர்களின் நகைச்சுவை உணர்வு

ஒரு முறை ஒரு வயதான அம்மையார் அவரிடம் வந்து தான் இறைவனின் சுவர்க்கத்தில் நுழைய பிரார்த்திக்குமாறு கேட்க அதற்கு அவர் கூறியுள்ளார்:"சுவர்க்கத்தில் வயதானவர்கள் இருக்க மாட்டார்கள்". அந்த அம்மையார் அவரது கூற்றைத் தவறாகப் புரிந்து மிகவும் குழப்பமடைந்தார். பின்னர், அவர் விளக்கமளித்தார்: "நீங்கள் சுவர்க்கத்தில் நுழையும் பொழுது இளமையுடன் இருப்பீர்கள் (அனைத்து மக்களும் கூட)".



**தனது நண்பர்களுடனான அவரது நகைச்சுவை உணர்வு:**

ஒரு முறை ஸுகைப் என்ற ரோம நாட்டு முஸ்லிம் காயமடைந்த கண்களுடன் பழுத்த பேரிச்சம்பழம் உண்பதைக் கண்டார். அவரை உற்சாகப்படுத்தும் பொருட்டு அவரிடம் நகைச்சுவையாக, "உங்கள் இடது கண் காயமடைந்துள்ள பொழுது எப்படி பேரிச்சம்பழத்தை உண்கிறீர்கள்" எனக் கேட்டார். முஹம்மது ﷺ அவரிடம் நகையாடுகிறார் என்பதைப் புரிந்துக்கொண்ட ஸுகைப், அவரிடம் சொன்னார் "கவலை வேண்டாம், நான் எனது வலது பக்க (காயமடையாத கண் உள்ள பக்கம்) வாயால் தான் சாப்பிடுகின்றேன் என்றார்." (அல்ஹாக்கீம் 4/411, 8357, இப்னு மாஜா 4/500, 3443)



அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்: ஒருமுறை ஒரு மனிதன் முஹம்மது ﷺ அவரிடம் அவரது ஒட்டகத்தில் ஒரு சவாரி தரும்படி கேட்டுள்ளார். அதற்கு முஹம்மது ﷺ அவர்கள் பதிலளித்தார்: "நான் உங்களுக்கு ஒரு ஒட்டகத்தின் பிள்ளை மேல் சவாரி செய்து தருகிறேன்" என்றார். அதற்கு அந்த மனிதர், "ஒட்டகத்தின் பிள்ளையை வைத்து நான் என்ன செய்யமுடியும்" எனக்கேட்டார். பின்னர் முஹம்மது ﷺ அவர்கள் கேட்டார், "அனைத்து ஒட்டகங்களும் ஏதேனும் ஒரு ஒட்டகத்தின் பிள்ளை இல்லையா?" என்று.

**முஹம்மது ﷺ அவர்கள் குழந்தைகள் மீது அன்பும் அக்கறையும் செலுத்தினார்கள்:**

முஹம்மது ﷺ அவர்கள் குழந்தைகள் மீது கவனம் செலுத்தினார்கள். அவர் குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்து அவர்களுடன் விளையாடியுள்ளார்கள். ஒருமுறை அவர் ஒரு குழந்தை தனது பறவை இறந்ததற்காக வருத்தத்துடன் இருப்பதைக் கண்டார். அவர் ஒரு இடத்துக்கு சென்று கொண்டிருந்த பொழுதும் அந்த குழந்தையுடன் சிறிது நேரம் செலவழித்து அக்குழந்தைத் தனது சோகத்திலிருந்து வெளியேற உதவினார். (புஹாரி,8/30, 6129, (முஸ்லிம் 6/176,2150)

முஹம்மது ﷺ அவர்கள் பெற்றோர்களிடம் தங்கள் குழந்தைகளை அரவணைத்தும், முத்தமிட்டும், அனைத்து குழந்தைகளிடமும்

தனது குழந்தைப் பாசத்துடன் முத்தமிடாத தந்தை, இதயத்தில் இரக்கமற்றவர் என்று முஹம்மது ﷺ அவர்கள் விவரித்துள்ளார்கள்.



முஹம்மது ﷺ அவர்கள் அண்டைவீட்டார் மீது அன்பு செலுத்தினார்ர்ள்: முஹம்மது ﷺ அவரின் அண்டை வீட்டில் இவரிடம் இறக்கமற்று நடந்துக் கொண்ட யூதமதத்தைத் தழுவிய ஒருவர் இருந்தார். அந்த யூத அண்டைவீட்டார் உடல் நலமின்றி இருந்த பொழுது அவர் சென்று நலம் விசாரித்தார். இந்நிகழ்வு அவரின் இதயத்தை மென்மையாக்கியது. மேலும், ஒருமுறை தன்னிடம் வேலை செய்த யூதமதம் தழுவிய ஒரு வாலிபர் உடல் நலமற்று இருக்கையில் அவர் அவனது இல்லம் சென்று நலம் விசாரித்தார். (புஹாரியில் பதியப்பட்டுள்ளது, 2/94, 1356)




முஹம்மது ﷺ அண்டை வீட்டாருடன் இரக்கத்துடன் இருக்க வலியுறுத்தினார்கள்: ஜிப்ரீல் (அலை) அவர்கள் தன்னிடம் அண்டை வீட்டாரை நல்ல முறையில் நடத்துமாறு அடிக்கடி கூறியதாக முஹம்மது ﷺ தனது சகாக்களிடம் தெரிவித்துள்ளார்கள். முஹம்மது ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள், எவரொருவர் இறைவன் மீதும் நியாயத்தீர்ப்பு நாள் மீதும் நம்பிக்கைக் கொண்டுள்ளாரோ அவர் தனது அண்டை வீட்டாரிடம் இரக்கத்துடன் நடந்துக்கொள்ளட்டும். (புஹாரி,8/10, 6015)

ஒருமுறை அபூதர் எனும் தனது தோழரிடம் கூறினார்: "நீங்கள் கஞ்சி சமைத்தால், (அதன் அளவை அதிகரிக்க) அதில் அதிக நீர் கலக்கவும், அதனால் உங்கள் அண்டை வீட்டாருடன் அதனை பகிர்ந்துக்கொள்ள போதுமானதாகிவிடும்." (முஸ்லிம் 8/37,2625)

முஹம்மது ﷺ அவர்கள் மோசமான சமூக நடத்தைகளை அகற்றினார்கள்: முஹம்மது ﷺ அவர்கள், எவர் ஒருவரிடம் நன்னடத்தை உள்ளதோ அவர் நியாயத் தீர்ப்புநாளில் தனக்கு மிக அருகில் இருப்பார் என்றும் அவர் தனக்கு மிக விருப்பமானவர் என்றும் பல தருணங்களில் கூறியுள்ளார். மேலும் அவர் கூறினார்:

"ஒருவர் மீது மற்றவர் விரோதம் கொள்ளாதீர்கள் மற்றும் ஒருவர் மீது மற்றவர் பொறாமைக் கொள்ளாதீர்கள் மற்றும் சகோதரர்களாக இருங்கள்."

"இறைவன் மீது நம்பிக்கை உடையவன் சபிக்கவோ, சத்தியம் செய்யவோ, தகாத வார்த்தைகளை உபயோகிக்கவோ மாட்டான்."

## ஏளனம் அல்லது அவதூறு கிடையாது:

முஹம்மது ﷺ அவர்கள் பின்வரும் வசனங்களைத் திருக்குர்ஆனில் இருந்து வாசித்தார்: (முஹம்மது ﷺ அவர்களின் சொந்த வார்த்தைகள் அல்ல, மாறாக இறைவனின் வார்த்தைகள் என முஸ்லிம்கள் நம்புகின்றனர்)

*“முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிறிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம்; (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) - ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; இன்னும், உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் (உங்களில்) ஒருவரையொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும்; எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள்.”திருக்குர்ஆன் (49:11)*

## தீய எண்ணங்களோ, தீய சந்தேகங்களோ, உளவு பார்ப்பதோ அல்லது புறம் பேசுவதோ கூடாது:

முஃமின்களே! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும்; (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள்; அன்றியும், உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம், உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா? (இல்லை!) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும், நீங்கள் அல்லாஹ்வை அஞ்சங்கள். நிச்சயமாக பாவத்திலிருந்து மீள்வதை அல்லாஹ் ஏற்றுக் கொள்பவன்; மிக்க கிருபைச் செய்பவன்.திருக்குர்ஆன் (49:12)

## தவறான செய்திகளைப் பரப்பாதீர்கள்:

முஃமின்களே! ஃபாஸிக் (தீயவன்) எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதைத் தீர விசாரித்துக் கொள்ளுங்கள்; (இல்லையேல்) அறியாமையினால் (குற்ற மற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம்; பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப் படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள். திருக்குர்ஆன் (49:6)

## நடத்தை மூலம் மதிப்பை அதிகரித்தல்




முஹம்மது ﷺ அவர்கள் நடத்தைகளில் அதிக அக்கறை செலுத்தினார்கள் அவர் தனது தோழர்களிடம் நடத்தை தனது உதாரணம் மற்றும் வாழ்க்கை முறையின் (ஸுன்னாஹ்) ஒரு பாகம் என்று போதித்தார். மேலும், திருக்குர்ஆனின் பல வசனங்கள் மென்மையான மற்றும் நல்ல முறையிலான நடத்தைகளை வலியுறுத்துகின்றது. முஹம்மது ﷺ அவர்கள் (உரத்த குரல், துர்நாற்றம் உடைய) மனிதர்கள் மீது வானவர்கள் வருத்தமடைவார்கள் என்று கூறியுள்ளார்கள்.

பின்வரும் வசனங்கள் இஸ்லாமிய நன்னடத்தைகளைச் சுருக்கமாக விவரிக்கின்றது:

- உரத்த குரலில் பேசாதீர் மற்றும் திமிருடன் நடக்காதீர்.
- நோயாளியைக் காணச்சென்றால் நீண்ட நேரம் தங்காதீர், அவர் ஓய்வெடுக்க நேரம் அளிப்பீராக.
- ஒருவர் பள்ளிவாசலுக்கு செல்லும் போது நறுமணத்துடன் செல்ல வேண்டும்.
- வெங்காயம் மற்றும் பூண்டு உண்டால் பள்ளிவாசலுக்கு செல்லாதீர், (ஏப்பம் போன்ற) செயல்களால் ஏற்படும் துர்நாற்றம் பிறருக்கு தொந்தரவாக இருக்கும்.
- காலியான இடம் கிடைப்பது அரிதாக இருக்கும் கூட்டத்தில் பிறருக்கு இடமளித்து உதவுவீராக.
- மற்றவர்களை அவர்கள் விரும்பும் பெயர் மற்றும் புனைப்பெயரால் அழைப்பீராக.
- கொட்டாவி விடும்பொழுது உங்கள் வாயை உங்கள் கைகளால் மூடிக் கொள்வீர்களாக மற்றும் மற்றவர்கள் தும்மினால் அவர்களுக்காகப் பிரார்த்திப்பீராக.

- மற்றவர்களுடன் உரையாடும் பொழுது அவர்கள் விரும்புமாறு ஏற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த வார்த்தைகளையே உபயோகிப்பீராக. நல்ல வார்த்தைகளும் இஸ்லாத்தில் தானம் செய்வது போன்றதாகும்.
- பெற்றோரிடம் மென்மையாக உரையாடுவீராக மற்றும் அவர்களின் முகம் பார்த்து உரக்க பேசாதீர். அவர்களிடம் "உஃப் அல்லது ஃபீ" (அரபியில் மிகச்சிறிய எதிர்மறை வார்த்தை) என்று கூட சொல்லாதீர்.
- பகலின் சில நேரங்களில் பெற்றோரின் அறையில் நுழையும் முன், அவர்களது பிள்ளைகள் அறைக்கதவைத் தட்டி அனுமதி பெறுதல் வேண்டும்.
- நீங்கள் மற்றவர்களுக்கு தண்ணீர் பரிமாறினால், நீங்கள் இறுதியாக பருகுவீராக.
- உணவு விருந்துக்கு அழைக்கப்பட்டால், உணவுத் தட்டில் அருகில் உள்ளதை உண்பீராக, மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுத்தல் கூடாது.
- கோப்பையிலிருந்து தண்ணீர் பருகும் பொழுது அதில் மூச்சு விடுதல் கூடாது.

### பெண்களுடனான நடத்தை

உங்கள் பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுங்கள், பெண்களையோ கடந்து செல்பவர்களையோ முறைக்காதீர்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் மண்டியிட்டு தன் தொடை மேல் கால் வைத்து அவரது துணைவியார் ஸஃபிய்யா ரழி அவர்கள் ஒட்டகத்தின் மீது முதலில் ஏற்றினார்.

(அனஸ் இப்னு மாலிக் குறிப்பிட்டுள்ளார் - புஹாரி - 9/20)

## முஹம்மது ﷺ அவர்கள் மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தார்கள்

முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களுக்கு இரண்டு விதமான கருத்துகள் கொண்ட அறிவுறையைக் கூறிய பொழுதெல்லாம், அவர்களது கருத்துகளையும் செவியுற்று, அது நீதமான முறையில் நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் அதனை ஏற்றுள்ளார்கள்.

“தட் அல்ஸலஸெல் (That Al-Salassel)” போரின் பொழுது, (குளிப்பு கடமையான நிலையில்) குஸ்ல் மற்றும் வுழு செய்யாமல் தொழுகையை முன்னடத்தியதாக முஸ்லிம் தளபதி அம்ர் பின் அல்ஆஸ் (ரழி) (Amr Bin Al-Aass) குற்றம் சுமத்தப்பட்டார். முஹம்மது ﷺ அவர்கள் அவரது நியாயத்தைக் கேட்டு அதனை ஏற்றுக் கொண்டார்கள். முஹம்மது ﷺ அவர்களிடம் இரவு மிகுந்த குளிராக இருந்ததாகவும், தான் குளித்திருந்தால் நோய்வாய்ப்பட்டு படையை வழிநடத்த இயலாமலிருக்கும் என்று அம்ர் (ரழி) கூறினார்ர்ள். (ஹாகீம், 1/177, 634, அபூதாவூத் 1/132,334)

முஹம்மது ﷺ அவர்கள் யதார்த்தமானவர் மற்றும் பழகுவதற்கு மிகவும்

அனஸ் இப்னு மாலிக் ரலி அவர்கள் கூறியுள்ளார்கள், தான் முஹம்மது ﷺ அவர்களிடம் பத்து வருடங்கள் சேவைப் புரிந்ததாகவும், ஒரு முறைக்கூட “இப்படி ஏன் செய்தீர்கள், அப்படி ஏன் செய்யவில்லை” என்று கேட்டதில்லை. (திர்மிதி, 3351)

**முஹம்மது ﷺ அவர்கள் கலந்தாலோசிப்பதை ஊக்குவித்தார்கள் (ஷூரா):** முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்கள் மற்றும் துணைவியாருடன் கலந்தாலோசித்துள்ளார்கள். குறிக்கோளுடனும் பகுத்தறிவு சிந்தனைகளுடனும் இருக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்கள். அவர்களுக்கு முடிவெடுக்கும் செயல்முறைகளில் அதிகாரம் அளித்தார்கள்.

ஆலோசனை

மக்காவின் தலைவர்கள் அரபு நாட்டின் பழங்குடியினருடன் சேர்ந்து மதீனா மீது தாக்குதல் நடத்திய பொழுது, பெர்சியா நாட்டைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் மதீனாவின் வடக்கே அகழிகளைத் தோண்டும் திட்டத்தை முன்மொழிந்தார்.

அது முற்றிலும் புதிய கருத்தாகவும் அரேபியாவில் அதற்கு முன்னர் செயல்படுத்தாததாக இருப்பினும், முஹம்மது ﷺ அவர்கள் அதனைத் தீவிரமாக ஆராய்ந்தார்கள். மேலும், பெரும்பாலான முஸ்லிம்கள் அதற்கு ஆதரவு அளித்தனர். அவர்கள் 5.5 கி.மீ. நீளம் மற்றும் 4.6 மீ அகலம் கொண்ட அகழிகளைத் தோண்டினர்.

மற்றுமொரு சமயத்தில் (பத்ர் போரின் பொழுது), ஒரு சாதாரண மனிதர் முஹம்மது ﷺ அவர்களிடம் கூறினார்:

“இறைத்தூதரே! இந்த இடத்தில் முகாமிடுவது இறைவெளிப்பாடாக இல்லாமல் உங்கள் சுய முடிவாக இருக்கும் பட்சத்தில், வேறு இடத்திற்கு செல்ல நான் வலியுறுத்தலாமா?”.

அம்மனிதரிடம் அதற்கான காரணங்களைக் கேட்டு தனது தோழர்களுடன் கலந்தாலோசித்த பின் வேறு இடத்திற்கு நகர்ந்தார்கள்.

அரபு மொழியில் முஹம்மது என்ற வார்த்தை ஒரு கலை ரீதியான வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கலைஞர் ஃபாரித் அல்-அலி

பலசமய கலந்துரையாடல்

## மாற்று மத மக்களை மதித்தல்:

முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களிடம் தங்கள் இஸ்லாமிய நம்பிக்கையில் உறுதியான ஆளுமையும் தெளிவான புரிதலும் கொண்டு மாற்று மத மக்களை மதித்து அவர்களுடன் நட்புடனும் வெளிப்படையாகவும் பழகும்படி அறிவுறுத்தினார்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் பல தருணங்களில் மாற்று மத நம்பிக்கையாளர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். ஒருமுறை யூத மனிதனின் இறுதிச்சடங்குக்காக அவரது சவப்பெட்டியை முஹம்மது ﷺ மற்றும் அவரதுதோழர்களின் முன்பாக எடுத்துச் சென்ற பொழுது அவர் எழுந்து நின்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முஹம்மது ﷺ அவர்களிடம் அவரது தோழர்கள் ஏன் எழுந்து நின்றீர்கள் எனக் கேட்டதற்கு: "(மதம், சமயம், சமூக அந்தஸ்தையும் தாண்டி) அவர் ஒரு மனிதர்" எனக் கூறினார். (புஹாரி, 2/85, 1312. முஸ்லிம், 3/58, 961)

## மதநல்லிணக்க கலந்துரையாடல் மற்றும் மாற்று மத மக்களுடன் அமைதியுடன் கூடிவாழ்தல்:

மதநல்லிணக்க கலந்துரையாடல் என்பது இருபக்க உரையாடல் அல்லது வெவ்வேறு மதநம்பிக்கையுடைய வெவ்வேறு கலாச்சாரமுடைய மக்கள், தங்களது சந்தேகங்கள் மற்றும் குழப்பங்களைக் களைந்து புரிதலுக்காவும், விரோதத்தைக் களைந்து நட்பிற்காகவும் நேர்மறையான முடிவுகளை அடைய விவாதிப்பது என்று விவரிக்கலாம்.

## கிறிஸ்துவ குழுவுடன் கலந்துரையாடல்

632 கி.பி. வருடம், முஹம்மது ﷺ அவர்கள் (யமனில் உள்ள) நஜ்ரனில் இருந்து இஸ்லாம் மற்றும் கிரிஸ்துவத்தில் உள்ள வேறுபாடுகளை விவாதிக்க வந்த ஒரு கிரிஸ்துவ குழுவை மதீனா நகரில் உபசரித்தார்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் மற்றவர்களுடனான உரையாடல் மற்றும் விவாதத்திற்கான வழிமுறைகள் மற்றும் நடத்தைகளை, மரியாதை, ஞானம், பரஸ்பர புரிதல் மற்றும் எளிமையைக் கொண்டு தொகுத்தார்கள்.

> “(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர்களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்.”
> -திருக்குர்ஆன் (16:125)

> இன்னும், நீங்கள் சேதத்தையுடையவர்களுடன் அவர்களில் அக்கிரமமாய் நடப்பவர்களைத் தவிர்த்து, (மற்றவர்களுடன்) அழகிய முறையிலேயன்றித் தர்க்கம் செய்யாதீர்கள்; "எங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் உங்கள் மீது இறக்கப்பட்ட (வேதத்)தின் மீதும் நாங்கள் ஈமான் கொள்கிறோம்; எங்கள் இறைவனும் உங்கள் இறைவனும் ஒருவனே - மேலும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபட்டு, நடப்போர் (முஸ்லிம்கள்) ஆவோம்"" என்று கூறுவீர்களாக.
> திருக்குர்ஆன் (29:46)



அரபு மொழியில் "மற்றவருக்கு நன்மை பயக்கும் மக்களே மக்களில் சிறந்தவர்" என்ற வார்த்தை ஒரு கலை ரீதியான வழியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கலைஞர் ஹசன் சேலேபி (Hassan Celebi)



## உமர் பள்ளிவாசல் மற்றும் புனித கல்லறையின் தேவாலயம் (Church of the Holy Sepulcher), ஜெரூசெலம்:

மத சகிப்புத்தன்மை

பல நூற்றாண்டுகளாக மத சகிப்புத்தன்மையின் சிறந்த உதாரணம் பழைய ஜெரூஸலமில் இருக்கின்றது. ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் இரண்டாவது இஸ்லாமிய ஆட்சியாளர் கலிஃபா உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் ஜெரூசெலத்தை 638 கி.பி இல் கைப்பற்றியதிலிருந்து அது தொடங்கியது.

உமர் (ரலி) அவர்கள் ஜெரூஸலமின் பேராயர் சோப்ரோனியஸால் (Sophronius) அங்கு தொழுவதற்கு அழைக்கப்பட்டார். அந்த தேவாலயம் உயிர்த்தெழுதல் தேவாலயம் (Church of the Resurrection) என்றும் அழைக்கப்பட்டது (கிழக்கு மரபுவழி கிரிஸ்த்தவர்களுக்கான அனஸ்தாஸிஸ்). உலகிலேயே அது மிகவும் புனிதமான கிரிஸ்துவ தலமாகும். அந்த இடத்தில் தான் இயேசு அவர்கள் சிலுவையில் அறையப்பட்டார் என்றும் அவர் புதைக்கப்பட்ட கல்லறை உள்ளது என்றும் கிரிஸ்துவர்கள் நம்புகின்றனர். கி.பி 4 ஆம் நூற்றாண்டில் இருந்து அது புனிதப் பயணத்திற்கான இலக்காக இருக்கின்றது.









உமர் (ரலி) அவர்கள் மென்மையான முறையில் அங்கு தொழுவதற்கான அழைப்பை மறுத்த பின்னர் கூறினார்கள்: “நான் இந்த தேவாலயத்தில் தொழுதால், முஸ்லிம்கள் இதனைப் பள்ளிவாசல் என்று எடுத்துக்கொள்ளக் கூடும்”.

மாறாக உமர் (ரலி) அவர்கள் தேவாலயத்தில் இருந்து சில அடிகள் தள்ளிநின்று தொழுதார்கள். உமர் (ரலி) அவர்களின் இந்த செயலே இஸ்லாம் மற்றும் மற்றய மதங்கள் அங்கு இருந்ததை உறுதி செய்கின்றது. இஸ்லாமிய ஆட்சியில் மற்ற மதங்களுக்கான வழிப்பாட்டு முறையில் இருந்த சுதந்திரத்தையும் இது உறுதி செய்கின்றது.

உமர் (ரலி) அவர்கள் தொழுத வரலாற்று சிறப்புமிக்க அந்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது (பின்னர் அது "உமர் பள்ளிவாசல் (Omar Mosque)" என்று அழைக்கப்பட்டது).






உமர் (ரலி) அவர்கள் அந்த கல்லறையின் தேவாலயத்தின் பொறுப்பை முஹம்மது ﷺ அவர்களின் தோழரான "உபாதாஹ் இப்னு அல்-ஸாமித் (Ubadah Ibn Al-Samit) அவர்களிடம் ஒப்படைத்தார்கள், அவர் பின்னர், ஜெரூசெலத்தின் முதல் முஸ்லிம் நீதிபதியானார். உமதாஹ் அவர்கள் 658 கி.பி காலமானார்கள், தெற்கு மூலையில் உன்னத சரணாலயத்தை (Noble Sanctuary) சூழ்ந்துள்ள "கருணை வாயில் (Gate of Mercy) எனும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். அந்த சரணாலயத்தில் தான் "கல்லறைகளின் குவிமாடம் (Dome of the Rock)" மற்றும் அக்ஸா பள்ளிவாசல் உள்ளது.

## உமர் (ரலி) அவர்களின் உடன்படிக்கை

உமர் (ரலி) அவர்கள் ஜெரூஸலத்தின் மக்களுக்காக அமைதி மற்றும் பாதுகாப்பை முன்னிறுத்தி ஓர் உடன்படிக்கையை அறிவித்தார்கள். பின்னர் அது "உமரின் உடன்படிக்கை" என்று அழைக்கப்பட்ட அந்த உடன்படிக்கை, பல நூற்றாண்டுகளாக இந்நாள் வரை பள்ளிவாசலின் சுவற்றில் அது ஏற்றப்பட்டுள்ளது



### உமரின் உடன்படிக்கை

மிக்க கிருபையாளனும் மிக்க கருணையாளனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால்

ஈலியாவின் (ஜெரூஸலமின்) மக்களுக்கு, அல்லாஹ்வின் அடிமை உமர் கொடுக்கும் உத்தரவாதம். மக்களுக்கு அவர்களின் உயிர், சொத்து, தேவாலயங்கள், நோயுற்றோர் மற்றும் ஆரோக்கியமானோர் மற்றும் அனைத்து சமயங்களுக்கும் உத்தரவாதம் அளித்தார்.

அவர்களின் தேவாலயங்களின் ஒரு பகுதியோ அல்லது முழுமையாகவோ ஆக்கிரமிக்கப்படவோ, அழிக்கப்படவோ, எடுத்துக்கொள்ளப்படவோ மாட்டாது. அவர்கள் தங்களின் மதநம்பிக்கையில் இருந்து பலவந்தப்படுத்தப்படவும் மாட்டார்கள் அவர்களில் எவரும் தாக்கப்படவும் மாட்டார்கள். நகரங்களில் குடியிருக்கும் மக்களைப் போன்றும் (முஸ்லிம்கள் கொடுக்கும் ஸகாத்தைப் போன்றும்) இலியாவின் மக்களும் வரி (ஜிஸ்யா) கட்டுவார்கள்.

## வர்த்தகம் மற்றும் வர்த்தக நெறிமுறைகள்

முஹம்மது ﷺ அவர்கள் வணிகத்தையும் வியாபாரத்தையும் உன்னதமான இஸ்லாமிய மதிப்பீடுகளின்படி செய்ய ஊக்குவித்தார்கள், மேலும் ஏமாற்றுதல், நியாயமற்ற ஒப்பந்தங்கள், பித்தலாட்டம், ஏகபோகம் மற்றும் சுரண்டல்களுக்கு கண்டனம்

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல (அதாவது, நேர்மையான நம்பிக்கையாளர் அல்ல). முஸ்லிமில் பதியப்பட்டுள்ளது. அவர் மேலும் கூறினார்: எவர் ஒருவர் வாங்கும் பொழுதும் விற்கும் பொழுதும் தனக்கான உரிமையைக் கோரும் பொழுதும் சகிப்புத்தன்மையுடன் இருக்கின்றாரோ அவர் மீது அல்லாஹ் தன் கருணையை இறக்கி வைப்பான்.
(ஆடவர் மற்றும் மகளிருக்கு பொருந்தக்கூடியது - புஹாரி, 2076/16)

## பொய் உரைத்தல் மற்றும் வாக்குறுதியை மீறுதல் போலித்தனமாகும்

போலித்தனம் கிடையாது

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்:

“பின்வரும் நான்கு குணாதிசியங்களும் யாரிடம் இருக்கின்றதோ அவர் ஒரு போலித்தனமான மனிதராவார் மற்றும் அவற்றில் ஏதேனும் ஒன்று இருப்பவர் கூட, அதனை விடும் வரை, அவர் போலித்தனத்தின் ஒரு குணாதிசியம் கொண்டவராவார்:”

1) நம்பப்படும் பொழுது எல்லாம், அவர் ஏமாற்றுவார்.
2) உரையாடும் பொழுது எல்லாம், அவர் பொய்யே உரைப்பார்.
3) உத்தரவாதம் அளிக்கும் பொழுது எல்லாம், அவர் துரோகமிழைப்பார்.
4) தர்க்கம் செய்யும் பொழுது எல்லாம், அவர் அவமதிப்பாகவும் தீய முறையிலும் நடப்பார்.



மதீனா நகரின் சந்தைகளில் தற்போதைய காலத்தில் உள்ள ஒன்று

**இலவச வர்த்தக மண்டலம்**

மதீனா நகருக்கு அவர் குடிப்பெயர்ந்தவுடன் முஹம்மது(ஸல்) அவர்கள் தனது தோழர்களிடம் நிலத்தின் ஒரு பகுதியை விலைக்கு வாங்கி அதனை மக்கள் வணிகம் செய்ய இலவசமாகக் கொடுக்கச் சொன்னார்கள். மக்கள் அங்கு எந்த வரியும் கட்டணமும் இன்றி வணிகம் செய்தார்கள். அது “மனகா (Manakha)” என்று

ஒட்டகங்களைத் தரையில் அமர்த்தி அதன் முதுகின் மேல் (வணிகத்திற்காக) சுமைகளை ஏற்றி இறக்கும் இடம் மனகா (Manakha) என்று அறியப்படுகின்றது.



கீழுள்ள படத்தில், 14 நூற்றாண்டுகள் முன் முஹம்மது ﷺ அவர்களால் வர்த்தகத்திற்காக இலவசமாக கொடுக்கப்பட்ட இடத்தைச் சுற்றி இருக்கும் சுவர்களைக் காணலாம்.



தற்சயத்திலுள்ள மனகா இலவச வணிக வளாகத்தின் வேலி



ஓமன் பேரரசின் கிராண்ட் சுல்தான் கபூஸ் மசூதியில் எடுக்கப்பட்ட புகைப்படம். இஸ்லாமிய வளைவுகள், சுவர் அலங்காரங்கள் மற்றும் மர வளைவுகள் மூலம் சிறப்பாக இஸ்லாமிய கட்டிடக்கலை பிரதிபலித்தது.

## இறுதிக்குறிப்புகள்

1 ரியாழுஸ் ஸாலிஹீன் (183/3), (245/2), ஸஹீஹுல் புஹாரி (13)

2 ரியாழுஸ் ஸாலிஹீன் (121/5)

3 ரியாழுஸ் ஸாலிஹீன் (858/2)

4 ஸஹீஹுல் புஹாரி (11)

5 ஸஹீஹ் அல்-அல்பானி, அபுதாவூத், இமாம் அஹமத் மற்றும் திர்மிதி

6 ரியாழுஸ் ஸாலிஹீன் (862/1), புகாரி (598/10)

7 மற்றுமொரு அறிவிப்பின்படி, முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “ஒருவர் தனது அண்டை வீட்டாரைத் தன் வாரிசாக வேண்டும் என நான் எண்ணும் வரை ஜிப்ரீல் (அலை) அவர்கள் அண்டை வீட்டாரை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார்கள்.

8 ரியாழுஸ் ஸாலிஹீன் (1591/1), ஸஹீஹுல் புஹாரி (6065)

9 ரியாழுஸ் ஸாலிஹீன் (1734/1) (1738/3)



ஜெரூஸலம் நகரில் உள்ள "ராக் டோம் (Dome of the Rock)". தொழில்முறை புகைப்படக்காரர் பீட்டர் சாண்டர்சால் (Peter Sanders) எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

அத்தியாயம்

6

# பெண்கள்



நீல பள்ளிவாசல்(Blue Mosque), இஸ்தான்புல், துருக்கி

# பெண்கள்



**பெண்களின் உரிமைகள்:** இஸ்லாத்தின் வருகைக்கு முன்பு, பெண்களுக்கு சமூக உரிமைகள் இருக்கவில்லை. அரேபிய தந்தையர்கள் பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்கும் அளவிற்கு பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளையே விரும்பினார்கள்.

**பாலின பாகுபாடு இல்லை:** முஹம்மது ﷺ அவர்கள் ஆண் மற்றும் பெண் குழந்தைகளில் இடையே பாகுபாடு பார்ப்பதைக் கண்டித்துள்ளார். மேலும், பாலின வேறுபாடுகள் இன்றி தங்கள் குழந்தைகளை மீது அன்பு செலுத்த வேண்டும் என்று போதித்தார்கள். அதிலும், தங்கள் பெண் குழந்தைகள் மீது அதிக கவனம் மற்றும் அக்கறை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள். முஹம்மது ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

> "பெண்கள் ஆண்களின் உடன் பிறவிகள்." (திர்மிதி, 1/154, 113)

**பெண்களும் ஆண்களைப் போன்று வாரிசுகளே:** இஸ்லாத்திற்கு முன் பெண்கள் குடும்ப சொத்தின் வாரிசாக முடியாது. முஹம்மது ﷺ அதனை வெற்றிகரமாக மாற்றினார்கள். எனினும், முஹம்மது ﷺ அவர்கள் தானாகவே இஸ்லாமிய சொத்துரிமை அமைப்பை உருவாக்கவில்லை. அவர் (திருக்குர்ஆனில் பாதுகாக்கப்பட்டுள்ள) அல்லாஹ்வின் வார்த்தைகளையே தெரிவித்தார். அதில் ஆண் மற்றும் பெண்ணிற்கு தனித்தனியாக எவ்வளவு பாகம் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"முஹம்மது" எனும் வார்த்தையே அரபு மொழி எழுத்துக்களில் கலை மற்றும் சமச்சீர் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையான எழுத்துக்கள் இவ்வாறு இருக்கின்றன ($). "எம் (M)" மற்றும் "ஹெச் (H)" எழுத்துக்களே முதல் பாதியையும், "எம் (M)" மற்றும் "டி (D)" எழுத்துக்கள் இரண்டாம் பாதியையும் அமைத்து சமச்சீராக "முஹம்மது (Muhammad)" என்று அரபு மொழி உருவாக்கப்பட்டுள்ளது.




**பெண்களுக்கு என்று தனியாக அடையாளம் உள்ளது:** மனைவி தன் கணவனின் சொத்தில் ஒரு பகுதியாகக் கருதப்படுவதில்லை. அவளுக்கென்று தனியாக அடையாளம் உள்ளது. திருமணம் ஆன பின்பு ஒரு பெண் தனது குடும்பப்பெயரை மாற்றிக்கொள்ளத் தேவையில்லை. அவளது அடையாளம் பேணப்பட்டு அவளது சொத்து இஸ்லாமிய சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றது. அவளது கணவனின் மறைவிற்குப் பின்னர் ஆண் வாரிசுகளால் உரிமைக் கொண்டாடப்படும் பொருளாக அல்லாமல், அவளும் அவனது சொத்தின் ஒரு வாரிசாகக் கருதப்படுகிறாள். (குறிப்பு: இஸ்லாத்திற்கு முன்னர், பெண்கள் ஒரு சடங்காக நடத்தப்பட்டார்கள்)

**பெண் ஒரு பாலியல் கருவி அல்ல:** இஸ்லாத்தில் விபச்சாரம் தடைச் செய்யப்பட்டுள்ளது. முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் விபச்சாரத்தில் ஈடுபட்டால், அவர் “ஈமான் (நம்பிக்கை)” கொண்டவரல்ல (அதாவது, இறைநம்பிக்கை ஆழமாக அவரது மனதில் பதியவில்லை, அதனால் அவருக்கு விபச்சாரத்தில் ஈடுபடும் பொழுது இறையச்சம் ஏற்படுவதில்லை).

> “நீங்கள் விபச்சாரத்தை நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாகும். மேலும், (வேறு கேடுகளின் பக்கம் இழுத்துச் செல்லும்) தீய வழியாகவும் இருக்கின்றது.”
> -திருக்குர்ஆன் (17:32)



"இறையச்சமே ஞானத்தின் உச்சம்" என்று பொருள்படும் இந்த வடிவம், கலைவடிவமைப்பாளர் இஸ்மாயில் ஹக்கி அவர்களால் வடிவமைக்கப்பட்டது



**இஸ்லாத்தில் ஹிஜாப் மற்றும் கண்ணியம்:** தலையில் முக்காடு போடுதலும் கண்ணியமான ஆடைகளை அணிவதும் வயது வந்த பெண்களுக்குக் கட்டாயமாகும். இஸ்லாமிய போதனைகள், பெண்கள் தங்கள் உடல் மற்றும் இயல்புகளைப் பாலியல் சலனங்களுக்காக உபயோகிப்பதைத் தடை செய்துள்ளது.

சலனங்களுக்காகவும் பாலியல் ஈர்ப்புக்காகவும் பெண்களின் உடலை வெளிப்படுத்தும் எந்த ஒரு வியாபாரத்திற்கோ அல்லது விளம்பரத்திற்கோ இஸ்லாத்தில் அனுமதி இல்லை.

பாலியல் தொந்தரவுகள், பலாத்காரங்கள், பாலியல் நோய்கள் மற்றும் நிர்வாணம் மற்றும் ஆபாசம் போன்ற அருவருக்கதக்க செயல்கள் ஆகியவற்றிற்கு வகை செய்யும் அனைத்து வழிகளையும் இஸ்லாமிய போதனைகள் தடை செய்கின்றன.



## திருமணம் செய்துகொள்ளவும்!




முஹம்மது ﷺ அவர்கள் மக்களைத் திருமணம் செய்துகொள்ளவும் குடும்ப வாழ்க்கையை நிறுவவும் ஊக்குவித்துள்ளார்கள். திருமணமான ஆண் மற்றும் பெண்ணைத் தவிர்த்து மற்ற பாலியல் உறவுகளைத் தடைச் செய்யும் உன்னதமான இஸ்லாமிய மதிப்பீடுகளை முஹம்மது ﷺ அவர்கள் போதித்துள்ளார்கள். (புஹாரி, 3/26, 1905)

ஒரு வாலிபர் முஹம்மது ﷺ அவர்களிடம் (பெண் தோழியுடனோ அல்லது விலைமாதுவுடனோ) விபச்சாரம் செய்ய அனுமதி கேட்டார். முஹம்மது ﷺ அவர்கள் பதிலளித்தார்கள் : "உனது தாயார் இதனைச் செய்தால் நீங்கள் அனுமதிப்பீரா?". அதற்கு அந்த வாலிபர் கூறினார்: "இல்லை". பின்னர் முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: "அதே போன்று, மக்கள் தனது தாயாருடன் அதனை விரும்புவதில்லை".



பின்னர் முஹம்மது ﷺ அதே கேள்வியை மூன்று முறை அந்த வாலிபரிடம் கேட்டார்கள்: "நீங்கள் அதனை உங்கள் மகளோ, சகோதரியோ அல்லது சாச்சியோ செய்வதை விரும்புவீரா?". ஒவ்வொரு முறையும் அந்த வாலிபர் "இல்லை" என்று பதிலளித்தார். முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: "அதே போன்று மக்கள் தன் மகள், சகோதரி மற்றும் சாச்சியுடன் அதனை விரும்புவதில்லை".

பின்னர் முஹம்மது ﷺ அவர்கள் அந்த வாலிபரின் இதயத்தின் மேல் தன் கையை வைத்து பிரார்த்தித்தார்: "எனது இறைவா: இவரது பாவத்தை மன்னிப்பாயாக!, இவரது இதயத்தைச் சுத்தப்படுத்துவாயாக! மற்றும் இவருக்கு கண்ணியமளிப்பாயாக!". (முஸ்னத் அஹ்மத், 10/5220,



## முஹம்மது ﷺ அவர்கள் பெண்களுக்கு அதிகாரமளித்தார்கள்

சமூகத்தில் பெண்களுக்கான பங்கினைப் பலப்படுத்தும் தனது முயற்சிகளின் ஒரு கட்டமாக, வாரத்தின் சில நாட்களை பெண்களின் கல்விக்காக என்று முஹம்மது ﷺ அவர்கள் ஒதுக்கினார்கள்.

இஸ்லாமிய நிகழ்வுகள், விருந்துகள் மற்றும் வழிபாடுகளில் பங்குகொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார். வீட்டு பணிப்பெண்கள் கூட முஹம்மது ﷺ அவர்களைச் சந்தித்து உரையாடி அவரிடம் உதவியோ அறிவுறையோ பெறமுடிந்தது.

இஸ்லாமிய சட்டத்திற்கு அவர்களும் பொறுப்பாளர்களாக உள்ளதால், அவர் பெண்களிடமும் (ஆண்களிடமும் எடுத்தது போன்று) உறுதிமொழி எடுத்தார்கள்.

தேசத்தை வழிநடத்தப் போகும் அடுத்த தலைமுறையினரை வளர்ப்பதின் மூலம் பெண்கள் சமுதாயத்தில் முக்கிய பங்காற்றுகிறார்கள். இஸ்லாமிய பெண்கள், ஆண்களின் பங்கினை மீறாத வகையில், சமுதாயத்தில் முக்கிய பங்காற்றும் வகையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைகளை வளர்த்தல் மற்றும் அவர்களின் நலனில் அக்கறைக் கொள்ளுதல் போன்ற செயல்களில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும், அவர்களை சமுதாய மற்றும் அரசியல் வாழ்வில் பங்கு கொள்ளவும் பணிபுரியவும் செய்தார்கள்.

## முஹம்மது ﷺ அவர்கள் பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதை ஊக்குவித்தார்கள்

முஹம்மது ﷺ அவர்கள் பல தருணங்களில் பெண்களை நல்ல முறையில் நடத்துவதில் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். மேலும் அவர் அவர்களை மென்மையானவர்கள் என்றும் “கண்ணாடியைப் போன்று உடையக்கூடியவர்கள்” என்றும் விவரித்துள்ளார். அவர் தனது தோழர்களிடம், யார் தனது மகளை நல்ல முறையில் வளர்த்து, இறைவனுக்கு அடிபணிந்து அவர்கள் மீது அக்கறைச் செலுத்தி அவர்களை இறைநம்பிக்கையின்பால் வழிநடத்துகிறாரோ, அவர் சுவர்க்கத்தை அடைவார்” என்று கூறியுள்ளார்.



**முஹம்மது ﷺ அவர்கள் தாயாருக்கு முழு மரியாதைத் தர ஊக்குவித்தார்கள்** ஒரு மனிதர் முஹம்மது ﷺ அவர்களிடம் கேட்டார்: "என்னுடைய நெருங்கிய ஆதரவும் தோழமையும் பெற யாருக்குத் தகுதி உண்டு". முஹம்மது ﷺ பதிலளித்தார்கள்: "உங்கள் தாயார்". பின்னர் அந்த மனிதர் கேட்டார்: "அவருக்கு அடுத்து யார்?". முஹம்மது ﷺ அவர்கள் பதிலளித்தார்கள்: "உங்கள் தாயார்".

மீண்டும் அந்த மனிதர் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கும் மூன்றாவது முறையாக முஹம்மது ﷺ பதிலளித்தார்கள்: "உங்கள் தாயார்". ஆர்வம் காரணமாக அந்த மனிதர் நான்காவது முறையாக அதே கேள்வியைக் கேட்டார் (தாயாரை அதிக முக்கியத்துவத்துடன் நல்ல முறையில் நடத்த வேண்டும் என அம்மனிதர் புரிந்துக் கொண்டார). பின்னர் முஹம்மது ﷺ பதிலளித்தார்: "உங்கள் தந்தை உனது தாயாருக்கு அடுத்தபடியாக உங்களது நெருங்கிய ஆதரவையும் தோழமையும் பெறும் தகுதியுடையவர்".. (புஹாரி, 2/8, 5971. முஸ்லிம், 8/2, 2548)

கல்வியாளர்கள் மேற்சொன்ன குறிப்பிற்கு கருத்து தெரிவித்துள்ளார்கள். ஒரு தாய் மூன்று முக்கியப் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க முடியாது:
(1) கர்ப்பம் (2) பிரசவ வலி மற்றும் பிரசவம் (3) தாய்ப்பால் மற்றும் தாய்க்குணம்.

**முஹம்மது ﷺ அவர்கள் மனைவியரை நல்ல முறையில் நடத்த வலியுறுத்தினார்கள்:**



முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள், ஒரு மனிதருக்கு தன் மனைவியின் ஒரு குணம் பிடிக்கவில்லை என்றால் மற்றொரு குணத்தால் அமைதியடைய வேண்டும். என்று கூறினார்கள்:
(திர்மிதி, 6/188, 3895)




யாரிடம் சிறந்த நடத்தைகள் உள்ளதோ; மேலும் யார் தனது மனைவியருக்கு சிறந்து விளங்குகின்றாரோ அவரே சிறந்த நம்பிக்கையாளவாரார். இதுவே அன்பு, அமைதி மற்றும் பரஸ்பர புரிதலை ஊக்குவிக்கின்றது.

## இஸ்லாத்தில் விவாகரத்து

இஸ்லாத்தில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது, ஆனால் திருமணத்தைப் பாதுகாக்கும் அனைத்து விதமான நடவடிக்கைகளும் நேர்மையான முறையில் எடுத்தபின்னர் இறுதி விருப்பமாக இருக்க வேண்டும். விவாகரத்தைத் தடுக்க முடியாத பட்சத்தில், பிரிதல் நல்ல முறையிலான ஒப்பந்தங்களுடன் இருத்தல் வேண்டும்.

*(மீளக்கூடிய) தலாக் கூறித் தவணை-இத்தத்-முடிவதற்குள் முறைப்படி அவர்களை(உங்களுடன்) நிறுத்திக் கொள்ளுங்கள்; அல்லது (இத்தாவின்) தவணை முடிந்ததும் முறைப்படி அவர்களை விடுவித்து விடுங்கள்;. ஆனால் அவர்களை உங்களுடன் வைத்துக் கொண்டு அவர்களைத் துன்புறுத்தாதீர்கள். அவர்களிடம் வரம்பு மீறி நடவாதீர்கள்;. இவ்வாறு ஒருவர் நடந்து கொள்வாரானால், அவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கிறார். எனவே, அல்லாஹ்வின் வசனங்களைக் கேலிக் கூத்தாக ஆக்கிவிடாதீர்கள்;.அவன் உங்களுக்கு அளித்த அருள் கொடைகளையும், உங்கள் மீது இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் சிந்தி;த்துப்பாருங்கள். இவற்றைக்கொண்டு அவன் உங்களுக்கு நற்போதனை செய்கிறான். அல்லாஹ்வை அஞ்சுங்கள்;. நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிபவனாக இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். திருக்குர்ஆன் (2:231)*



**முஹம்மது ﷺ அவர்கள் தன் துணைவியாரை நேசித்தார்கள்:** ஹதீஜா அம்மையார் அவர்கள் இயற்கை எய்திய சில வருடங்கள் கழித்து, முஹம்மது ﷺ அவர்கள் தன் நெருங்கிய நண்பரான அபூபக்ர் (ரலி) அவர்களின் மகளான ஆயிஷா(ரலி) மணமுடித்தார்கள். இயற்கை எய்திய தன் மனைவிக்கு விசுவாசமாக இருப்பினும், ஆயிஷா (ரலி) அவர்களிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள், அவருக்கு நேர்மையாகவும் இருந்தார். ஒருமுறை அம்ர் இப்னு ஆஸ் (அவரது தோழர்) அவரிடம் கேட்டார்கள்: “உங்களுக்கு மிகவும் விருப்பமான நபர் யார்?”. முஹம்மது ﷺ அவர்கள் சிறிதும் தயக்கமின்றி உடனே ஆயிஷா என்று கூறினார்கள். (புஹாரி, 5/5, 3662)

அன்பான கணவராய் இருங்கள்

**உங்கள் மனைவியிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள் :** முஹம்மது ﷺ அவர்கள் தன் மனைவி மீதான அன்பு, ஒரு கயிற்றில் இறுக்கமாக போடப்பட்ட முடிச்சைப் போன்றது என விவரித்ததாக ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆயிஷா (ரலி) அவர்கள் அடிக்கடி முஹம்மது ﷺ அவர்களிடம் “முடிச்சு எப்படி உள்ளது” எனக் கேட்பார், அதற்கு அவர் “இன்னும் எப்பொழுதும் போல் இறுக்கமாக இருக்கின்றது” எனக் கூறினார்.

## முஹம்மது ﷺ அவர்கள் மறைந்த தன் துணைவி கதீஜா(ரலி) மீது முன்மாதிரியான அன்பினை நிரூபித்துள்ளார்கள்

ஆயிஷா (ரலி) அவர்கள் செம்மறி ஆடு சமைத்த பொழுதெல்லாம், முஹம்மது ﷺ அவர்கள் ஹதீஜா (ரலி) அவர்களின் தோழியர்களுக்கு ஒரு பங்கைக் கொடுத்தனுப்பும்படி கூறியுள்ளார்கள்.



ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஹதீஜா(ரலி) அவர்களை விட, அவர்கள் காலத்தில், சிறந்தவர் எவரும் இல்லை என முஹம்மது ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அவர் கூறினார், தனக்கு முதல் இறைவெளிப்பாடு வந்த பொழுது வேறு எவரும் (அவரது மாமா மற்றும் அவரது உறவினர்கள் உட்பட) அவரை நம்பாத பொழுது, ஹதீஜா(ரலி) அவர்கள் அவருக்கு ஆறுதல் கூறியதோடு சற்றும் தயக்கமின்றி தனது செல்வத்தையும் நபி அவர்களின் இறைப்பணிக்காக அளித்து அவருக்கு பக்கபலமாக இருந்தார்.

ஹதிஜா (ரலி) அவர்களைப் பற்றிய முஹம்மது ﷺ அவர்களின் கருத்துகளால் அவரின் தற்போதைய துணைவியார் ஆயிஷா (ரலி) அவர்கள் பொறாமைக் கொள்ளக்கூடும் என்று சிலர் கருத்து கூறினாலும், முஹம்மது ﷺ அவர்கள் தன் அனைத்து துணைவியரிடமும் நீதமாக நடந்துக் கொண்டார்கள்.

“முஹம்மது” எனும் வார்த்தையே அரபியில் ஒரு மலர் போன்ற தோற்றத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.
உருவாக்கிய கலைஞர் ஃபாரித் அல்-அலி (Farid Al-Ali).

# முஹம்மது ﷺ மற்றும் பலதார மணம்

## முஹம்மது ﷺ அவர்கள் பலதார மணத்தை அறிமுகப்படுத்தவில்லை:

உண்மையில் இஸ்லாத்திற்கு முன்பே கணக்கின்றி பலதார மணம் செய்யும் வழக்கம் இருந்தது. ஒரு மனிதர் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மனைவியாகவோ அல்லது காமக்கிழத்தியாகவோ அல்லது அடிமையாகவோ வைத்துக்கொள்வது சர்வ சாதாரணமாக இருந்தது.

இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்கள் ஸாரா அம்மையார் (இஸ்ஹாக் (அலை) அவர்களின் தாயார்) மற்றும் ஹாஜர் அம்மையார் (இஸ்மாஈல் (அலை) அவர்களின் தாயார்) ஆகியோரை மணமுடித்தது தெரிந்த ஒன்றே. மேலும், யாகூப்(அலை) அவர்களுக்கு இரண்டு மனைவியரும் இரண்டு காமக்கிழத்திகளும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதல் மனைவியுடன் 25 வருடங்கள் மணவாழ்க்கை வாழ்ந்தார்

## முஹம்மது ﷺ அவர்கள் தனது பெரும்பாலான வாழ்வை ஒரே துணைவியுடன் கழித்தார்:

முஹம்மது ﷺ அவர்கள் ஹதீஜா அம்மையாருடன் சுமார் 25 ஆண்டுகள் மணவாழ்க்கை வாழ்ந்தார், அவருக்கு நான்கு பெண் குழந்தைகள் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகள் இருந்தனர். இரண்டு மகன்களும் அவர்களின் குழந்தைப் பருவ காலத்திலேயே மரணமடைந்தனர்.

ஹதீஜா அம்மையார் இயற்கை எய்திய பிறகு, ஓர் ஏழை விதவையான “ஸவ்தாஹ்(Sawdah)” அம்மையாரை மணமுடித்தார்கள். அவரது கணவர் அபிஸினியாவில் இருந்து திரும்பிய பிறகு மரணமடைந்தார்கள். அபிஸினியா தான் முஹம்மது ﷺ அவர்கள் தனது சில தோழர்களை அடைக்கலம் கேட்டு அனுப்பிய நாடு.

ஸவ்தாஹ் அம்மையாருடனான அவரது திருமணம் அம்மையாருக்கு பெரும் துணையாக அமைந்தது. தன்னை விட வயதில் மூத்தவரான ஸவ்தாஹ் அம்மையாரை மணமுடித்த பொழுது நபி அவர்களுக்கு கிட்டத்தட்ட 50 வயது.

**முஹம்மது ﷺ தனது நெருங்கிய சகாவான அபூபக்ர் (ரலி) அவர்களின் மகளை மணந்தார்:** சில வருடங்கள் கழித்து, முஹம்மது ﷺ அவர்கள் தனது நெருங்கிய நண்பரும் தனது துணைநிற்கும் தோழருமான அபூபக்ர் (ரலி) அவர்களின் மகளான ஆயிஷா(ரலி) அவர்களை மணமுடித்தார். இந்த மணம் அபூபக்ர் (ரலி) மற்றும் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு பெருமைக்குரியதாக இருந்தது.

**முஹம்மது ﷺ அவர்கள் தனது இரண்டாவது நெருங்கிய தோழரான உமர் (ரலி) அவர்களின் மகளை மணமுடித்தார்கள்:**

இரண்டு வருடங்கள் கழித்து உமர் (ரலி) அவர்களின் மகள் ஹ:ப்ஸா அவர்கள் தன் கணவரை உகுத் போரில் இழந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் தன் நெருங்கிய நண்பர்களில் யாரையாவது அவருடன் மணமுடிக்க விரும்பினார்கள். ஆனால் யாரும் முன் வராத காரணத்தினால் முஹம்மது ﷺ அவர்களே முன்வந்து அவரை மணமுடித்தார்கள். இந்த மணம் உமர் (ரலி) அவர்களுக்கும் ஹ:ப்ஸா அம்மையாருக்கும் பெருமையாகவும் துணையாகவும் இருந்தது.

**முஹம்மது ﷺ அவர்கள் தன் எதிரியின் மகளான ஒரு கைம்பெண்ணை மணமுடித்தார்கள்:**

ராம்லா அம்மையார் “உம்மு ஹபீபாஹ் (Um Hbibah)” எனும் புனைப்பெயரால் அறியப்பட்டார்கள். அவர் மக்கா நகரின் தலைவரின் (அபூ ஸு:ப்யான்) மகள். அபு-ஸு:ப்யான் முஹம்மது ﷺ அவர்களை நம்பாமல் அவரை எதிர்த்து 20 வருடங்கள் போரிட்டார். ஆனால் அவரது மகள் இஸ்லாத்தைத் தழுவினார். ஆரம்ப காலத்தில் அபிஸினியாவிற்கு குடியேறிய முஸ்லிம்களில் அவரும் ஒருவர், அவர் தனது கணவருடன் குடியேறி அங்கு கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் வாழ்ந்தார். கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய அவரது கணவர் அதே நாட்டில் மரணமடைந்தார்.

அபிஸினியாவில் அவர் தனித்துவிடப்பட்டார், அதனால் முஹம்மது ﷺ அவர்கள் உம்மு ஹபீபாஹ்விடம் திருமணத்திற்கு விருப்பம் தெரிவிக்க, அதனை அம்மையார் ஏற்று அவரை மணமுடித்தார். ஆச்சர்யமூட்டும் வகையில் அவரது தந்தையார் ஒரு வருடம் கழித்து இஸ்லாத்தை ஏற்றார்.

**முஹம்மது ﷺ அவர்கள் யூத பழங்குடியினரான ஸா:ஃபியா-வை மணமுடித்தார்கள்:** "பனு நுழைர் (Bani Al-Nadhir)" எனும் யூத பழங்குடியினர் முகம்மத ﷺ அவர்களுக்கு துரோகம் இழைத்து அவருக்கு எதிராக செயல்பட்டனர். முஹம்மது ﷺ அவர்கள் அவர்களைக் கைபர்(Khaybar) நகரில் வெற்றியீட்டிய பின் அவர்கள் சரண்டைந்தார்கள். கைப்பறியவர்களில் அவர்களின் தலைவரின் மகளான ஸ:ஃபிய்யாவும் ஒருவர். முஹம்மது ﷺ அவர்கள் அவரை விடுவித்து அவரிடம் மண விருப்பத்தைத் தெரிவித்தார். ஸபிய்யா அம்மையார் அதனை ஏற்று அவரை மணமுடித்தார்.

இதன் மூலம் முஹம்மது ﷺ அவர்கள் யூதர்களுக்கு எதிராக தனக்கு எதுவும் (விரோதம்) இல்லை, மாறாக ஆக்கிரமிப்புக்காரர்களின் ஆக்கிரமிப்பை அவர்களின் இனம் மற்றும் சமயத்தைக் கருதாமல் நிறுத்தியாக வேண்டும் என அனைவருக்கும் நிரூபித்தார்கள்.

பல தருணங்களில், முஹம்மது ﷺ அவர்களின் மறைந்த பிறகும் கூட, ஸபிய்யா (Safiyya) அம்மையார் அவரை மிகவும் அன்பான மற்றும் நீதமான கணவர் என விவரித்துள்ளார்கள். (திர்மிதி, 6/188, 3894. முஸ்னத் அஹ்மத், 5/2609, 12587)

## மரியா, எகிப்து பழங்குடியின பெண்

அதே வருடம் முஹம்மது ﷺ அவர்கள் எகிப்து நாட்டின் கிறிஸ்தவ ஆட்சியாளரிடம் ஒரு தூதுவரை அனுப்பி இஸ்லாத்தை ஏற்கும்படி வலியுறுத்தினார்கள்.

எகிப்தின் ஆட்சியாளர் பண்பட்ட முறையில் மறுத்து, முஹம்மது ﷺ அவர்களுக்காக மருத்துவர் மற்றும் அடிமை அல்லது காமக்கிழவியாக மரியா (மேரி) போன்ற பரிசுப்பொருட்களை அனுப்பினார். முஹம்மது ﷺ அவர்கள் எகிப்து ஆட்சியாளரின் பரிசுப் பொருட்களை ஏற்றார். அவர் மரியாவை மணமுடித்தார், பின்னர் ஒரு வருடம் கழித்து ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது, அதற்கு இப்றாஹீம் எனப் பெயரிட்டார். சிறிய பாலகனாக இருந்த பொழுது இப்றாஹீம் மரணமடைந்தார், அவரது இழப்பினால் முஹம்மது ﷺ அவர்கள் மிகவும் வருத்தமடைந்தார்கள்.



## பலதார மணத்தைக் கட்டுப்படுத்த இறைவனின் கட்டளையை முஹம்மது ﷺ அவர்கள் அறிவித்தார்கள்:

இஸ்லாம் பலதார மணத்தைத் தடைச் செய்யவில்லை, மாறாக அதனைக் கட்டுப்படுத்தி ஒழுங்குப்படுத்தியது. இஸ்லாத்தில் ஒன்றுக்கும் அதிகமான மனைவியைத் திருமணம் செய்வது கட்டாயம் அல்ல, மாறாக உண்மையான காரணங்களுக்காக அது அனுமதிக்கப்பட்டுள்ளது.

> **இறைவனின் கூற்று**
> உங்களால் நீதமாக நடக்க இயலாதென்றால், ஒரு திருமணம் மட்டும் செய்யுங்கள்

ஓர் ஆண், முழுமையான மரியாதையும் பாகுபாடற்ற நீதியையும் வழங்கும் பட்சத்தில் இரண்டாம் திருமணம் செய்ய தடையில்லை. ஆனால் ஓர் ஆண் பாகுபாடில்லாமலும் நீதமாகவும் நடக்க இயலாதென்றால் அவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணம் செய்ய அனுமதியில்லை எனதிருக்குர்ஆன் நான்காம் அத்தியாயத்தின் மூன்றாம் வசனம் தெளிவாக்கியுள்ளது.

மேலும் நீதமாக நடக்கக்கூடிய கணவர்களுக்கும் நான்கு மனைவியர் என்று எல்லையும் அதே வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இறைவெளிப்பாட்டிற்கு முன்னர், ஆண்கள் எண்ணற்ற மனைவியரைக் கொண்டிருந்தனர்.

## இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் மீதான எல்லைகள்:

இந்த இறைவெளிப்பாட்டிற்கு முன்னர் இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களுக்கு நான்கிற்கும் மேல் மனைவியர் இருந்தனர். இறைத்தூதரின் மனைவியராக இருப்பது மிக்க பெருமையான ஒன்றாக இருப்பதுடன் அவர்கள் நம்பிக்கையாளர்களின் தாயார்களாகவும் கருதப்படுவார்கள்.

## இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் துணைவியர் மீதான எல்லைகள்:

நம்பிக்கை கொண்டோரின் தாய்மார்கள்

முஹம்மது ﷺ அவர்களின் துணைவியர் முஸ்லிம்களுக்கு தாயாரைப் போன்றாதலால், அவரின் மறைவிற்கு பின்னர் அவரது துணைவியரைத் திருமணம் செய்ய முஸ்லிம்கள் அனுமதிக்கப்படவில்லை.

திருக்குரானில், இறைவன் இறைத்தூதர் அவர்களின் துணைவியர்களை மற்ற பெண்களைப் போன்று அல்ல என விவரித்துள்ளான் (அவர்களை ஒரு முன்மாதிரியாகவும் நம்பிக்கையாளர்களின் தாயார்களாகும் தான் இஸ்லாமியர்களால் காணப்பட வேண்டும்).

இறைத்தூதரின் துணைவியர்களில் யாரேனும் வெளிப்படையாக பாவச்செயல் செய்தால், அவர்களுக்கு தண்டனை இரட்டிப்பாகும். ஆனால், யாரேனும் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நேர்மையான செயல்களைச் செய்தால், அவர்களின் நன்மைகள் இரட்டிப்பாக்கப்படும்.

## முஹம்மது ﷺ அவர்களின் துணைவியர்களுக்கு தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இருந்தது:

(திருக்குரானின் பாகம் 33, வரிகள் 28,29-ல் குறிப்படப்பட்டுள்ளபடி) இறைவன் முஹம்மது ﷺ அவர்களிடம் அவரது துணைவியர்களுக்கு இரண்டு விருப்பங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அளிக்கச் சொன்னான். ஒன்று, விடுதலைப் பெற்று(விவாகரத்து) உலக வாழ்வையும் அதன் அலங்காரங்களையும் தேர்ந்தெடுத்தல், அல்லது முஹம்மது ﷺ அவர்களுடனான மணவாழ்வில் ஒன்றி இருந்து இஸ்லாத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தல்.

அனைவரும் இரண்டாவது விருப்பத்தைத் தேர்ந்தெடுத்து முஹம்மது ﷺ அவர்களுடனான மணவாழ்வில் ஒன்றி இருந்தனர். முஹம்மது ﷺ அவர்களின் மறைவிற்கு பின் யாரும் மறுமணம் செய்யவில்லை.

## இறுதிக்குறிப்புகள்

1 வேறு சில குறிப்புகளின்படி முஹம்மது ﷺ அவர்கள் கூறியுள்ளார்: எவருக்காவது ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று மகள்கள் இருந்து அவர்களை நல்ல முறையில் கவனித்துக் கொண்டால்(அவர்கள் சுதந்திரமாக செயல்பட துவங்கும் வரை), அவர் இறைவனின் சுவர்க்கத்தை அடைவார்.

2 திருக்குரானின் பல வசனங்களில் ஒரு மனிதர் பெற்றோர் இருவருக்கும் நீதமாக நடக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (உதாரணம், பாகம் 17, வசனம் 23).

3 திருக்குர்ஆனின் பாகம்-2, வசனம் 23 -ஐயும் பார்க்கவும்.

4 மற்ற மதங்களில் பலதார மணங்களைப் பற்றி, முற்காலத்தில், இந்து மதத்திலும் எந்த கட்டுப்பாடும் இருந்ததில்லை. 1954-ஆம் ஆண்டு, இந்து திருமணச் சட்டம் ஏற்றிய பிறகு தான் இந்துக்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணம் செய்வது சட்டவிரோதமாக்கப்பட்டது. தற்சமயம், இந்திய சட்டம் இந்து ஆண்களை ஒன்றுக்கும் மேற்பட்ட திருமணம் செய்வதைத் தடுக்கின்றது; இந்து வேதங்கள் அல்ல.

5 யாகூப் (அலை) அவர்களின் குடும்பத்தைப் பற்றிய மேலும் விபரங்களுக்கு, பார்க்க ஜெனீஸிஸ் 32:22-24.

6 முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களின் முன்னால் அழுகின்ற அளவிற்கு அவரது மகனின் மறைவால் துயரடைந்தார். ஒரு தந்தையாக, அவரால் கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை. முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களிடம் “இறைவனுக்கு பிடித்தவற்றை மட்டுமே நான் கூறுவேன், இறைவனின் விதியை நம்பிக்கையாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்று கூறினார்.

7 இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் துணைவியர் பற்றிய குறிப்புகளுக்கு பார்க்க : திருக்குர்ஆன் பாகம் 33, வசனங்கள் 50, 51, 52.

அத்தியாயம்
7

# மனித உரிமைகள்

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை
ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே
படைத்தோம்; நீங்கள் ஒருவரை
ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு.
பின்னர், உங்களைக் கிளைகளாகவும்,
கோத்திரங்களாகவும் ஆக்கினோம்;
(ஆகவே) உங்களில் எவர் மிகவும்
பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ,
அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக
மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக
அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும்
சூழ்ந்து) தெரிந்தவன்."

திருக்குர்ஆன், 49:13



# மனித உரிமைகள்
## சுதந்திரம், நீதி மற்றும் பாதுகாப்பு

### இஸ்லாத்தில் எந்த "கட்டாயமும் இல்லை"

முஹம்மது ﷺ அவர்கள் தன்னை இறைத்தூதராக அறிவித்தார். அவர் மனிதயினத்திற்கான இறைச்செய்தியைப் பெற்று அதனை மக்களுக்கு அறிவிப்பதில் பல சிரமங்களுக்கு உள்ளானார். ஆனால் அதனை ஏற்கச் சொல்லி அவர் யாரையும் கட்டாயப்படுத்தியதில்லை. மக்களுக்கு நம்பிக்கைக்கான சுதந்திரத்தையும் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரத்தையும் உறுதிசெய்யும் திருக்குர்ஆனின் வசனங்களை அவர் வாசித்தார்.

"மேலும், உம் இறைவன் நாடியிருந்தால், பூமியிலுள்ள யாவருமே ஈமான் கொண்டிருப்பார்கள் ; எனவே, மனிதர்கள் யாவரும் முஃமின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகிவிடவேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப்படுத்த முடியுமா?" -திருக்குர்ஆன் (10:99)

"(இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்பந்தமுமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்." -திருக்குர்ஆன் (2:256)

### அனைத்து இனங்களுங்களுக்குமான அறநெறி மற்றும் சமத்துவம் :

இஸ்லாத்தில், அனைத்து மக்களும் மனிதர்களாக இருக்கின்ற காரணத்தினால் சட்டத்தின் கீழ் ஒன்றாகவே கருதப்படுவார்கள். பக்தி மற்றும் அறநெறியில் சிறந்து விளங்குபவர்களே இறைவனின் பார்வையில் சிறந்தவர்களாவார்கள். முஹம்மது ﷺ அவர்கள் அதனை இவ்வாறு கூறினார்கள்:



"உங்கள் இறைவன் ஒருவன் தான். மனிதயினம் ஆதம் (அலை) அவர்களிடமிருந்து வந்தது மற்றும் ஆதம் (அலை) மண்ணிலிருந்து படைக்கப்பட்டார். பயபக்தியைத் தவிர வேறு எதனைக் கொண்டும் ஓர் அரபு நாட்டவர், அரபு நாட்டவரல்லாதவரை விட சிறந்தவர் அல்ல, மேலும் அரபு நாட்டவர் அல்லாதவர், ஓர் அரபு நாட்டவரைவிட சிறந்தவர் அல்ல (பயபக்தியே நன்னடத்தைகளுக்கு உந்துகோளாகும்). "(முஸ்னத் அஹ்மத்



## முஹம்மது ﷺ அவர்கள் அடிமைகளை விடுவிக்க ஊக்குவித்தார்கள் மற்றும் அடிமைத்தனத்தை ஒழிக்க இஸ்லாமிய நெறிமுறைகளை அறிமுகப்படுத்தினார்கள்



முஹம்மது ﷺ அவர்களின் காலத்திற்கு முன்பாகவே அடிமைத்தனம் இருந்தது. உலகின் பல சமூக அமைப்புகளில் அது ஓர் அங்கமாகவே இருந்தது. அடிமைகள் சொத்தாகவும் மக்களுடைய செல்வத்தின் ஓர் அங்கமாகவும் கருதப்பட்டனர். இஸ்லாம் மக்களின் சொத்தையும் செல்வத்தையும் பாதுகாப்பதினால், அடிமைத்தனம் படிப்படியாக அகற்றப்பட்டது.

இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில், அடிமைகளைத் தவறாக நடத்துவது ஒரு பாவமாக இருந்தது, அதற்காக இறைவனிடம் மன்னிப்பைக் கேட்டு அந்த அடிமையை விடுவிக்க வேண்டியதாக இருந்தது. கூடுதலாக இஸ்லாத்தின் சட்டங்களை மீறுவோர் அடிமைகளை விடுவிக்கவோ அல்லது மற்றவர்களிடமிருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி விடுவிக்கவோ வேண்டியதாக இருந்தது. அடிமைத்தனம் முற்றிலுமாக ஒழியும் வரை அது தொடர்ந்து கொண்டே இருந்தது.

முஹம்மது ﷺ அவர்கள் இறைவனின் அன்பைப் பெறுவதற்காக அடிமைகளை விடுவிக்க வேண்டுமென ஊக்குவித்தார்கள். ஒரு முறை "அபு மஸ்உத் அல்-பத்ரி (Abu Mas'ud Al-Badri)" என்பவர் தனது அடிமையை சவுக்கால் அடிப்பதைக் கண்டு அவரிடம் தீர்க்கமாக கூறினார்:

“உனது தகுதிக்கும் சக்திக்கும் மேல் இறைவன் தகுதியும் சக்தியும் பெற்றவன் என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும்”. அபு மஸ்ஊத் சாந்தியடைந்து முஹம்மது ﷺ அவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் தொனியில் கூறினார்: “இறைவனின் அருளுக்காக நான் அவனை விடுதலைச் செய்வேன்”. முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “நீ அதனைச் செய்யாவிடில், நரக நெருப்பு உனது முகத்தைத் தொடும்.” (முஸ்லிம், 5/91, 1659)

மக்களின் பாதுகாப்பு: ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் முன் தனது இறுதியுரை ஆற்றிய முஹம்மது ﷺ அவர்கள்

“மக்களே, நம்பிக்கையாளர்கள் சகோதரர்களாவார்கள். தனது சகோதரனின் முழு அனுமதியின்றி யாரும் அவரது சொத்துக்களை எடுத்துக்கொள்ளக் கூடாது. செய்தியை நான் எத்திவைத்து



விட்டேனா? அல்லாஹ், எனது இறைவனே, நீயே எனது சாட்சியாவாயாக.

ஒருவரையொருவர் கழுத்தில் அடித்துச் செல்லாதீர்கள். நிச்சயமாக, நான் உங்களிடம் எதனை விட்டுச் செல்கின்றேனோ, அதனை நீங்கள் எடுத்துக் கொண்டால், நீங்கள் வழிதவற மாட்டீர்கள்: அது இறைவனின் வேதம் மற்றும் எனது வழிமுறையுமேயாகும். செய்தியை நான் எத்திவைத்து விட்டேனா? அல்லாஹ், எனது இறைவனே, நீயே எனது சாட்சியாவாயாக (ஹாகிம், 1/93, 317. அல்-பைஹகி, 6/96,



அனைத்து மக்களும் சட்டத்தின் முன் சமநிலையிலே நிற்கிறார்கள்: முஹம்மது ﷺ அவர்கள் மக்களின் வாழ்வை கட்டுப்படுத்தி அவர்களது உடன்பாடுகளையும் வர்த்தகங்களையும் ஒழுங்குபடுத்தும் வகையிலான "ஷரிஆ சட்டம்" எனப்படும் இறைவனின் கட்டளைகளை அறிமுகப்படுத்தி மக்களுக்கு போதனை செய்தார்கள். அனைத்து மக்களும் சட்டத்தை மதிக்க வேண்டும் மற்றும் குற்றவாளிகள், அவர்களின் சமூக நிலையைப் பொருட்படுத்தாமல், தண்டிக்கப்பட வேண்டும் என்பதை முஹம்மது ﷺ அவர்கள் மிகவும் முக்கியத்துவத்துடன் குறிப்பிட்டார்கள். சட்டத்தை நீதமாக அமல்படுத்தினால் அனைத்து மக்களும் நீதியையும் பாதுகாப்பையும் பெறுவார்கள்.




சட்டத்தின் முன், தனது உறவினர்கள் உட்பட, யாரும் அதிகாரம் படைத்தவர்கள் அல்ல என்பதனை இறைத்தூதர் தெளிவாக்கினார். உதாரணமாக, திருடுவதும் கொள்ளையடிப்பதும் மற்றவர்களின் சொத்துக்கள் மேல் தொடுக்கப்பட்ட தாக்குதலாகும். குற்றவாளிகளை அவர்களின் சமூகநிலையைப் பொருட்படுத்தாமல் தண்டிக்க வேண்டும். தனது அன்புமகள் ஃபாத்திமா யாரிடமிருந்தாவது திருடியிருந்தால், அவருக்கும் தான் தண்டனை அளிக்கக்கூடும் என்று முஹம்மது ﷺ அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## நீதியுடன் நீதிபதி; தஃமா மற்றும் ஒரு யூத மனிதனின் கதை:



ஒரு சமயம், தஃமா பின் உபைரிக் எனும் ஒரு அரபிய மனிதர், கவசத்தின் பகுதியான ஒரு உலோக கேடயத்தைத் திருடி தனது யூத நண்பரின் இல்லத்தில் மறைத்து வைத்தார். அந்த உலோக கேடயத்தைத் திருடியதாக அந்த யூத மனிதர் குற்றம் சுமத்தப்பட்டார், ஆனால் அவர் அந்த குற்றத்தை மறுத்து தஃமா மீது குற்றம் சுமத்தினார்.

குற்றவாளி யாரென்று தெரியாத நிலையில், பல அரேபியர்கள் தஃமா மீது இரக்கம் கொண்டு முஹம்மது ﷺ அவர்களை யூத மனிதனுக்கு எதிராகத் திருப்ப முயற்சித்தனர், ஆனால் இறுதியில் இஸ்லாமிய நீதி நிலைநாட்டப்பட்டது. தஃமா குற்றவாளி என்றும் யூத மனிதன் நிரபராதி என்றும் நிரூபிக்கப்பட்டனர். இந்த சூழலில், நீதியை உறுதிசெய்து திருக்குர்ஆனின் ஒரு வசனம் இறக்கப்பட்டது:

(ஹாகிம், 4/385, 8256. திர்மிதி, 5/128, 3036)

"(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம்;. எனவே சதி (செய்யும்) மோசக்காரர்கள் சார்பில் வாதாடுபவராகி விடாதீர்." - திருக்குர்ஆன் (4:105)

## பெண்களின் உரிமைகளும் கடமைகளும்

முஹம்மது ﷺ அவர்கள் தனது இறுதியுரையில் பெண்களின் உரிமைகளை மீண்டும் உறுதிப்படுத்தினார்கள். அவர்கள் கூறினார்கள்:

"மக்களே, உங்களின் பெண்கள் மீது உங்களுக்கு சில உரிமைகள் இருப்பது உண்மையே, ஆனால் அவர்களுக்கும் உங்கள் மீது உரிமைகள் உண்டு.

இறைவனின் மீதான நம்பிக்கையினாலும் அவனது அனுமதியுடனுமே அவர்களை உங்கள் மனைவியராக்கியுள்ளீர்கள் என்பதை நினைவு கொள்வீராக. அவர்கள் உங்களின் பங்காளிகளாகவும் உதவியாளர்களாகவும் இருப்பதால், அவர்களை நல்ல முறையில் நடத்துவீராக மற்றும் அவர்கள் மீது இரக்கத்துடன் இருப்பீராக." (புஹாரி, 6/27, 5185. முஸ்லிம், 4/178, 1468)

## அநாதைகளின் உரிமைகளின் பாதுகாப்பு



அநாதைகளை பராமரிப்பது பற்றியதான இறைவனின் கட்டளைகளை முஹம்மது ﷺ அவர்கள் எத்தி வைத்தார். அநாதைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களை இரக்கத்துடனும் நீதமாகவும் நடத்துமாறு முஸ்லிம்களைத்திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது.

"நிச்சயமாக, யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான். இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெறியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள்." -திருக்குர்ஆன் (4:10)

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்:



“யார் ஆநாதைக்ளை கவனித்துக் கொள்கிறாரோ, அவரும் நானும் சுவர்கத்தில் (ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் ஒன்ரோடொன்று இணைத்து) இவ்வாறு இருப்போம்” (புஹாரி, 7/53, 5304)

## அவர்களுக்கான கடமைகளைச் செலுத்துங்கள்:



அனாதைகள் மேல் அக்கறை கொள்ளுதல்

முஹம்மது ﷺ அவர்கள் மரணமடைந்த ஒரு நபரின் இறுதிச் சடங்கு தொழுகை நடத்த அழைக்கப்பட்டார்கள். அப்பொழுது தனது தோழர்களிடம் அவர் கேட்டார்: “இந்த மனிதர் யாரிடமேனும் கடன் பெற்றிருந்தாரா? அல்லது மற்றவர்களின் பொருட்கள் இவரின் வசம் உள்ளதா?” அவர்கள் “ஆம்” என்று கூறினார்கள். அதற்கு முஹம்மது ﷺ அவர்கள் முதலில் அவர் மீது உரிமையைச் செலுத்துங்கள், அதன் பின்னர் அவருக்கான தொழுகையை தான் நடத்துவதாகவும் கூறினார். திருக்குர்ஆனின் அத்தியாயம் 4,வசனம் 58 பின்வருமாறு கூறுகிறது:

“நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான்;. நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.”

## வாரிசுகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்

இஸ்லாமிய சட்டப்படி, யாரேனும் மரணமடைந்தால், அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் அவரது பரம்பரை சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகிறார்கள். ஒருவரின் சொத்தில் மூன்றில் ஒரு பங்கிற்கு அதிகமாக தானதர்மங்களுக்காக ஒதுக்குவதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. வாரிசுகளின் உரிமையைப் பாதுகாக்கவும் அவர்கள் இடையே நீதமாகப் பிரிப்பதற்கும் இது வழிவகைச் செய்கின்றது.



ஒரு முறை முஹம்மது ﷺ அவர்கள் நோயிலிருந்து மீண்ட தனது தோழரை காணச்சென்றார்கள். அப்பொழுது அம்மனிதர் தனக்கு மிகப்பெரும் செல்வம் உள்ளதாகவும் தனக்கு ஒரே ஒரு மகள் மட்டுமே வாரிசாக உள்ளதாகவும் கூறி, தனது சொத்தில் மூன்றில் இரண்டு பங்கினைத் தானமாக ஒதுக்கலாமா என்று முஹம்மது ﷺ அவர்களிடம் கேட்டார். அதற்கு முஹம்மது ﷺ அவர்கள் "கூடாது" என்றார். பின்னர், அம்மனிதர் பாதியை ஒதுக்கலாமா என்று கேட்டார். முஹம்மது ﷺ அவர்கள் "கூடாது" என்றார்கள். பின்னர் அம்மனிதர் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கலாமா என்று கேட்டார், அதற்கு முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள் "மூன்றில் ஒரு பங்கு (ஆமோதிக்கும் விதத்தில்) மற்றும் மூன்றில் ஒரு பங்கே போதுமானது. உங்கள் வாரிசுகளை செல்வந்தர்களாக விட்டுச் செல்வது உதவியை நாடும் ஏழைகளாக விட்டுச் செல்வதைவிட சிறந்தது".

## இஸ்லாத்தில் வட்டி இல்லை

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: "இறைவன் உங்களை வட்டி வாங்குவதிலிருந்து தடுத்துள்ளான். எனவே வட்டியினைக் கொண்டுள்ள அனைத்து வர்த்தகங்களும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். உங்கள் மூலதனமே உங்களுக்கானது. நீங்கள் எந்தவொரு சமத்துவமின்மையையும் உண்டாக்கவோ அல்லது அதனால் பாதிக்கப்படவோ மாட்டீர்கள். வட்டி இருக்கக் கூடாது என்று அல்லாஹ் தீர்ப்பளித்துள்ளான்."

"யார் வட்டி (வாங்கித்) உண்கிறார்களோ, அவர்கள் (மறுமையில்) ஷைத்தானால் தீண்டப்பட்ட ஒருவன் பைத்தியம் பிடித்தவனாக எழுவது போலல்லாமல் (வேறுவிதமாய் எழ மாட்டார்கள்; இதற்குக் காரணம் அவர்கள், "நிச்சயமாக வியாபாரம் வட்டியைப் போன்றதே"" என்று கூறியதினாலேயாகும். அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கி, வட்டியை ஹராமாக்கியிருக்கிறான்."

-திருக்குர்ஆன் (2:275)



முஹம்மது" எனும் வார்த்தையே அரபி எழுத்துக்களில் வடிவமைத்து கலை வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. படைப்பு: கலைஞர் ஃபாரித் அல்-அலி



**கௌரவக் கொலையும் இரத்தம் சிந்துதலும் தடைச் செய்யப்பட்டுள்ளது:** முஹம்மது ﷺ அவர்கள் இரத்த பழிவாங்குதல் மற்றும் (பகை மற்றும் சர்ச்சைகளால்)

"இஸ்லாத்திற்கு முன்னதாக கொலைகளினால் உண்டான உரிமைகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகின்றன மற்றும் அவ்வாறான தள்ளுபடி செய்யப்பட்டவைகளில் முதலாவது உரிமை ஆமிர் இப்னு ரபீஆ (முஹம்மது(ஸல்) அவர்களின் உறவினர்) அவர்களின் கொலையால் உண்டானதே" (திர்மிதி, 5/167, 3087. இப்னுமாஜா, 4/243, 3055)

பழிதீர்த்தலை ஒழித்தார்கள். அவரது இறுதி உரையில் அவர்கள் இதனை அறிவித்தார்கள்:




**திட்டமிட்ட கொலை மற்றும் தவறுதலான கொலை:** திட்டமிட்ட கொலையில் கொலைப் புரிந்தவருக்கு தண்டனை அளித்தல் வேண்டும்.

ஆனால், யாரேனும் தவறுதலாக யாரையாவது கொலைச் செய்தால், அவர் கொலையானவரின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும். முஹம்மது ﷺ அவர்களின் காலத்தில் நூறு ஒட்டகங்களே இழப்பீடாக இருந்தது. முஹம்மது ﷺ அவர்கள் மக்களிடம் யார் அதனைவிட அதிகமான இழப்பீட்டைக் கேட்கின்றாரோ அவர் அறியாமைக் காலத்தைச் சேர்ந்தவர் என்று கூறினார்கள்.



**உங்களுடன் சண்டையிடுபவர்களுடன் மட்டுமே சண்டையிடுங்கள்:** முஹம்மது ﷺ அவர்கள் எதிரிகளிடம் அடிப்பணிந்தோ ஆக்கிரமிப்புடனோ இல்லாமல் உறுதியுடன் இருக்க வேண்டும் என்று போதித்துள்ளார்ககள். அவர்கள் தவிர்க்க இயலாத நிலையில் போரில் ஈடுபட்டுள்ளார்கள். முஹம்மது ﷺ அவர்கள் எதிரிகளுடனும் போர் கைதிகளுடனும் நடந்துக்கொள்ளும் விதிகளையும் நடத்தை முறைகளையும் அமைத்தார்கள்.

முஹம்மது ﷺ அவர்கள் பொதுமக்களுடன் போரிடக்கூடாது என்றும் குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களைத் தாக்கவோ, கொல்லவோ கூடாது என்றும் முஸ்லிம்களுக்கு கற்றுக்கொடுத்தார்கள். சுற்றுசூழலை அழிக்கக்கூடாது என்றும் மரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தினார்கள். முஹம்மது ﷺ அவர்கள் போர்களம் உறுதியானதாக இருக்க வேண்டும் என்றும் வரம்பு மீறுபவர்களை விரும்பாத அல்லாவிற்காகவே மாத்திரமே இருக்க வேண்டும் என்றும் எப்பொழுதும் நினைவுப்படுத்தினார்கள். திருக்குர்ஆனின் அத்தியாயம் 2, வசனம் 190, எதிரிகளுடனும் ஆக்கிரமிப்பாளர்களுடனும் போரிடுவதற்கான அடிப்படை விதிகளைத் தெளிவுபடுத்துகின்றது.

**கொல்லாதீர்கள்**

பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களை

**அழிக்காதீர்கள்**

சூழலை மற்றும் மரங்களை வெட்டாதீர்கள்

> "உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; ஆனால் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை."

## முஹம்மது ﷺ அவர்கள் தற்கொலை செய்வதைப் பெருங்குற்றமாக கருதினார்கள்




முஹம்மது ﷺ அவர்கள் அதனைப் பின்வரும் வார்த்தைகளில் விவரிக்கின்றார்கள் : "எவரொருவர் ஒரு உலோகத்தைக் கொண்டு தற்கொலை செய்து கொள்கின்றாரோ, அவர் அதே உலோகத்துடன் நியாயத் தீர்ப்பு நாளில் எழுப்பப்படுவார், மேலும் அவர் என்றென்றும் நரகநெருப்பில் அதே உலோகத்தைக் கொண்டு தற்கொலை செய்துகொண்டே இருப்பார், மற்றும் எவரொருவர் விஷத்தை அருந்தி தற்கொலை செய்துக்கொண்டாரோ, அவர் அந்த விஷத்துடனேயே எழுப்பப்பட்டு நரகநெருப்பில் என்றென்றும் விஷம் அருந்துவார், மற்றும் எவரொருவர் மலை உச்சியிலிருந்து விழுந்து தற்கொலை செய்வாரோ, அவர் நரகநெருப்பில் என்றென்றும் மலை உச்சியிலிருந்து விழுந்து தற்கொலை செய்வார்."

## மனித உயிரின் புனிதத்தன்மை மற்றும் அதனை மீறல்

இறைவனே உயிரை உருவாக்கியவனும் அதனைக் கட்டுப்படுத்துபவனுமாக இருப்பதால், அவனே ஒவ்வொரு படைப்பினத்தின் உரிமையாளனாவான். வரலாற்றில் முதல் கொலையான ஆதம் (அலை அவர்களின் மகன் காபில் (Cain), தனது சகோதரனான ஹாபிலைக் (Abel) கொலைச் செய்ததைக் கொண்டு இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்:

"நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான். மேலும், எவரொருவர் ஓர் ஆத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்" என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். மேலும், நிச்சயமாக நம் தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தார்கள்; இதன் பின்னரும் அவர்களில் பெரும்பாலானோர் பூமியில் வரம்பு கடந்தவர்களாகவே இருக்கின்றனர்." திருக்குர்ஆன் (5:32)



## வன்முறை கிடையாது

**முஹம்மது ﷺ அவர்கள் வன்முறையைக் கண்டித்தார்கள்** இறைவனின் செய்தியைத் தெரிவிக்க முஹம்மது ﷺ அவர்கள் எப்பொழுதும் வன்முறையை ஒரு கருவியாக உபயோகிக்கவோ அல்லது இறைவனின் மார்க்கத்தை திணிக்கவோ செய்ததில்லை. மதீனாவில் அவர் ஓர் இஸ்லாமிய நாடாக உருவாக்கிய பின்னர் கூட, மக்காவில் வசித்த முஸ்லிம் சிறுபான்மையினரைக் கொண்டு அங்கிருந்த எதிரிகளுக்கு தொந்தரவுத்தரவோ, கொலை செய்யவோ இல்லை. மாறாக அவர் மக்களிடம் அவர்கள் வாழும் சமுதாயத்தின் சமூக

முஹம்மது ﷺ அவர்கள் எங்கெல்லாம் மற்றும் எப்பொழுதெல்லாம் மென்மையும் இரக்கமும் பயன்படுத்தப்படுகின்றதோ, அதன் மதிப்பு கூட்டப்பட்டு, அது நல்ல முடிவுகளைத் தரும் என்று நம்பிக்கையாளர்களுக்கு போதித்தார்கள். மேலும், கடினத்தன்மையும் இழிவானதும் ஒவ்வொரு விஷயத்தையும் கெடுக்கவே செய்யும் என்றும் போதித்தார்கள். முஸ்லிமில் குறிப்பிடப்பட்டுள்ளது.







துருக்கிய எழுத்தாளர் ஹஸன் செலெபி (Hassan Chelebi) என்பவரால் திருக்குர்ஆனில் உள்ள ஒரு வசனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட இஸ்லாமிய எழுத்துக்கள். இறைவன் மக்களிடம் கூறுகின்றான்: "நீங்கள் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்கினால், நீதியைக் கொண்டே தீர்ப்பு வழங்க வேண்டும்."திருக்குர்ஆன் (4:58)



எகிப்திய எழுத்தாளர் இஸாம் அப்துல் ஃபத்தாஹ் (Isaam Abdul Fattah) என்பவரால் திருக்குர்ஆனில் உள்ள ஒரு வசனத்தைக் கொண்டு உருவாக்கப்பட்ட இஸ்லாமிய எழுத்துக்கள். இறைவன் மக்களிடம் கூறுகின்றான்:

"(நிச்சயமாக) ஒருவனுடைய பாவச்சுமையை மற்றொருவன் சுமக்கமாட்டான் (நியாயத் தீர்ப்பு நாளில்)" திருக்குர்ஆன் (17:15)

## இறுதிக் குறிப்புகள்



1 நெல்சன் மண்டேலா (Nelson Mandela) (ஜனநாயக தென் ஆஃப்ரிக்காவின் முதல் ஜனாதிபதி). இவரே இனப்படுகொலை மற்றும் பல்வேறு சமயங்களின் இடையேயான பாகுபாடுகளுக்கெதிரான போராட்டத்திற்கு சிறந்த உதாரணம். அனைத்து மக்களும் ஒற்றுமையுடனும் பன்முகத்தன்மையில் ஒற்றுமையுடனும் விளங்கும் நாடாக அது உருவானது.

இறைவன் மனிதயினத்தை, அவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக பல்வேறு நாடுகள் மற்றும் பழங்குடியினரைக் கொண்டு உருவாக்கியுள்ளதாக திருக்குர்ஆனின் போதனைகள் தெளிவுப்படுத்துகின்றது. ஒரு வெள்ளை மனிதன் இறைப்பக்தியைத் தவிர வேறு எதனாலும் ஒரு கறுப்பு மனிதனைவிட சிறந்தவரல்ல (நேர்மாறாகவும் அதே போல்). "(ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்."-திருக்குர்ஆன் (49:13)



2 ரியாழுஸ் ஸாலிஹீன் (1603/4), (1605/6)

3 இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்கள் குறிப்பிட்டார்கள், எவரொருவர் வேலையாட்களைப் பணியில் அமர்த்தி அவர்களுக்கு ஊதியம் தரவில்லையோ நியாயத் தீர்ப்புநாளில் இறைவன் அவர்களின் எதிரியாக இருப்பான். ஊதியங்கள் அவர்களின் வியர்வைக் காய்வதற்கு முன் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஊதியங்கள் தாமதப்படுத்தல் கூடாது, பணி முடிந்த உடனே வழங்கிட வேண்டும்.

4 இஸ்லாமிய சட்டதைப் பற்றி மேலும் அறிய, பார்க்க:

http://www.islamreligion.com/category/110/

http://www.islamhouse.com

5 ஸஹீஹுல் புஹாரி (34/8)

6 ஸஹீஹுல் புஹாரி (5778) மற்றும் ஸஹீஹ் முஸ்லிம் (109)



கலைவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள "முஹம்மது (Muhammad)" எனும் வார்த்தையின் அரபி எழுத்துக்கள். ஃபாரித் அல்-அலி (Farid Al-Ali) என்பவரின் படைப்பு.

அத்தியாயம்
8

# சுற்றுச்சூழல்



# சுற்றுச்சூழல்

## சுற்றுச்சூழலைப் பாதுகாக்க முஹம்மது ﷺ அவர்களின் போதனைகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பை அவர் அனைத்தையும் படைத்த இறைவன் மீது கொண்ட நம்பிக்கையுடன் தொடர்புப்படுத்தினார். எனவே,சுற்றுச்சூழல் இறைவனின் இராஜ்ஜியமாக இருப்பதால், இறைநம்பிக்கையாளர் அதற்கு பாதிப்பு ஏற்படுத்துதல் கூடாது. சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல் மற்றும் வளங்களை வீணடித்தல் அல்லது மாசுப்படுத்துதல் (நீர், மரங்கள், விலங்குகள், மண், காற்று, கடல், சுற்றுச் சூழல் போன்றவற்றை) இஸ்லாமிய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படாதது.





“ஒரு முஸ்லிம் ஒரு விதை விதைத்து, அது வளர்ந்து மனிதர்கள் அல்லது விலங்கினங்கள் அல்லது பறவைகள் அதிலிருந்து பயன்பெற்றாலோ அல்லது உண்டாலோ, அது அவர் தானம் செய்ததற்கு ஒப்பாகும்” (தானத்திற்கு இறைவனிடத்தில் நற்கூலி உண்டு).

இறைத்தூதர் முஹம்மது ﷺ (புஹாரி, 2320 மற்றும் முஸ்லிம், 1188)

## இயற்கை வளங்கள் சரியான சமநிலையில் உள்ளன

முஹம்மது ﷺ அவர்கள் அனைத்து இயற்கை வளங்களும் இறைவனால் படைக்கப்பட்டு சரியான சமநிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

> "நாம் ஒவ்வொரு பொருளையும் நிச்சயமாக (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கின்றோம்."
>
> "...ஒவ்வொரு பொருளுக்கும் அவனிடம் அளவு இருக்கின்றது"
>
> "...ஒவ்வொரு பொருளையும் உறுதியாக்கிய அல்லாஹ்வின் செயல்திறனாலேயே (அவ்வாறு நிகழும்.)"
>
> திருக்குர்ஆன் (54:49, 13:8, 27:88)

## இயற்கை வளங்களில் மக்களுக்கு சமஉரிமை உள்ளது:

இயற்கை வளங்கள் இறைவனின் அனைத்து மக்களுக்குமான அன்பளிப்பாகும். அதனை வீண் செய்யவோ, ஏகபோக உரிமைக் கொண்டாடவோ கூடாது. முஹம்மது ﷺ அவர்கள் நீர், புல் (பசுமை நிலம்) மற்றும் நெருப்பு (ஆற்றல்) ஆகியவற்றில் (சட்டப்படி தனியார்ப்படுத்தப்பட்டதைத் தவிர்த்து) அனைத்து மக்களுக்கும் சமஉரிமை உள்ளது என்று கூறியுள்ளார்கள்.

## மதிப்புக் கூட்டல்

- சுற்றுசூழலை மாசுப்படுத்தாதீர்
- சுற்றுசூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதீர்
- இயற்கை வளங்களை வீண்டிக்கவோ அதிகப்படியாக உபயோகிக்கவோ செய்யாதீர்
- இயற்கை வளங்களைத் திறமையாக உபயோகிப்பீராக, மறுசுழற்சியை ஊக்குவிப்பீராக

**விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் இறைவனின் படைப்புகளே**

**"(இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்"**

**திருக்குர்ஆன் (23:14)**

"எந்த தீங்கும் கூடாது" என்பது பொதுவான விதி முஹம்மது ﷺ அவர்கள் தன் தோழர்களிடம் பின்வருமாறு கூறி இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் மற்றும் மக்களைப் பாதுகாப்பதற்காக பொது விதியை அமைத்தார்கள்.

"நீங்கள் பாதிப்பை ஏற்படுத்தவோ அல்லது பாதிக்கப்படுவதோ கூடாது"

"ஏகத்துவத்தை உச்சமாகக் கொண்டு இறை நம்பிக்கையை 70 கிளைகளாக வகைப்படுத்த முடியும். மக்களின் பாதையில் இருந்து தீங்கு ஏற்படுத்தும் பொருளை அகற்றுவது அதன் இறுதிக்கிளையாக உள்ளது."

இறைத்தூதர் முஹம்மது ﷺ
(புஹாரி, 1/11, 9)



கலைவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள "முஹம்மது (Muhammad)" எனும் வார்த்தையின் அரபு எழுத்துக்கள். இது மரத்தின் இலைகளைப் போன்று தோற்றமளிக்கின்றது.

## முஹம்மது ﷺ அவர்கள் நீரைப் பங்கிட வலியுறுத்தினார் மற்றும் வீண் செய்வதையும் அதிகப்படியாக



முஹம்மது ﷺ அவர்கள் (வுழூச் செய்து கொண்டிருந்த தன் தோழரிடம்) அவர் நதியின் அருகில் இருந்தாலும் கூட தண்ணீரை வீண்விரையம் செய்யக்கூடாது என்றார்கள்.

மற்றொரு சமயம், முஹம்மது ﷺ அவர்கள் தன் சகாக்களிடம் தேங்கி நிற்கும் நீரை மாசுப்படுத்தவோ, அதில் சிறுநீர் கழிக்கவோ கூடாது என்றார்கள். திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

> " .. உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம்"
>
> நிச்சயமாக விரயம் செய்பவர்கள் ஷைத்தான்களின் சகோதரர்களாவார்கள்; ஷைத்தானோ தன்னுடைய இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்.
>
> "உண்ணுங்கள், பருகுங்கள்; எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை."
>
> திருக்குர்ஆன் (21:30, 17:27, 7:31)

**சுற்றுச்சூழலுக்கு மதிப்புக் கூட்டுங்கள்:** முஹம்மது ﷺ அவர்கள் முழு பிரபஞ்சமும் வீழ்ந்து கொண்டிருந்தாலும் இந்த கோளில் உயிர்கள் அழிந்து கொண்டிருந்தாலும் தொடர்ந்து சுற்றுச்சூழலின் மதிப்பை அதிகரித்து கொண்டிருக்கும்படி மக்களை வலியுறுத்தினார். அவர்கள் கூறினார்கள்:







"இறுதி மணித்துளி (அதாவது, பூமியில் உயிர்கள் அழியும் நேரம்) வந்துவிட்டாலும், ஒருவர் தன் கையில் நாற்று வைத்திருந்து அவரால் அதனை நட முடியும் என்றால், அவர் அதை நடட்டும்" (முஸ்னத் அஹ்மத், 5/2727, 13100)

**மதிப்புக் கூட்டுங்கள்**

இறைநம்பிக்கையுடையோர் சுற்றுச்சூழலுக்கு மதிப்பை அதிகரித்து அதனைப் பாதுகாத்தல் வேண்டும். இறைவன் பாதிப்பை

"மேலும், அல்லாஹ் உனக்குக் கொடுத்த (செல்வத்)திலிருந்து மறுமை வீட்டைத்தேடிக் கொள்; எனினும், இவ்வுலகத்தில் உன் நஸீபை (உனக்கு விதித்திருப்பதையும்) மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு நல்லதைச் செய்திருப்பதைப் போல், நீயும் நல்லதை செய்! இன்னும், பூமியில் குழப்பம் செய்ய விரும்பாதே; நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் செய்பவர்களை நேசிப்பதில்லை" (என்றும் கூறினார்கள்). -திருக்குர்ஆன் (28:77)

# விலங்குகளின் நல்வாழ்வு

## முஹம்மது ﷺ அவர்கள் விலங்குகளை நெறிமுறையுடன் நடத்த அழைப்பு விடுத்தார்கள்:

முஹம்மது ﷺ அவர்கள் நீதமான காரணமின்றி விலங்குகளைத் தடுத்தோ அல்லது கட்டுப்படுத்தியோ வைப்பதற்கு எதிராக இருந்தார்கள். மேலும், அவர்கள் விலங்குகளைச் சாட்டையால் அடிப்பது அல்லது தாக்குவது போன்றவற்றையும் விரும்பியதில்லை. அவர் பலதரப்பட்ட போதிக்கும் வகைகளை உபயோகித்து விலங்குகளைக் கவனிக்கவும் கண்ணியப்படுத்தவும் ஆன்மீக வழியில் போதனைச் செய்தார்கள்.

## விலங்குகள் மற்றும் அனைத்து படைப்புகளும் பூமியில் ஒரு பெரிய சமூகத்தின் பகுதியை அமைக்கின்றன:

பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இரு இறக்கைகளால் பறக்கும் பறவைகளும் உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை (இவற்றில்) எதையும் (நம் பதிவுப்) புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டு விடவில்லை இன்னும் அவை யாவும் அவற்றின் இறைவனிடம் ஒன்றுசேர்க்கப்படும்.

-திருக்குர்ஆன் (6:38)



## ஹலால் என்பது ஹலால் உணவு பற்றிய விழிப்புணர்வு

ஹலால் உணவு

இறைவனின் அனுமதி இன்றி விலங்குகளைக் கொல்வதற்கு அனுமதி இல்லை என்று முஹம்மது ﷺ அவர்கள் போதித்தார்கள். இறைவனின் அனுமதியுடன் மட்டுமே சில வகையான விலங்குகள் மனிதர்களின் உணவிற்காக அறுக்கப்படலாம். பன்றியை இன்னும் சில விலங்குகளை விடுத்து மற்ற சைவ மிருகங்கள் மட்டுமே உண்பதற்காக அறுக்கப்படலாம் (உதாரணமாக, மாடுகள், ஆடுகள், கோழிகள் இறைச்சியை உண்ணாத பறவைகள்).

*பன்றிகள் தாவரங்கள் மற்றும் விலங்குகளை உணவாக கொள்ளும் அனைத்துண்ணிகளாகும். பன்றி இறைச்சியை உட்கொள்வது இஸ்லாம் மற்றும் யூத மத நம்பிக்கைகளில் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

முஹம்மது ﷺ அவர்கள் சட்டப்படியான (ஹலால்) மிருகவதைகள் மிகவும் வலி குறைவான விதத்தில் நடத்தப்பட வேண்டும் என்று போதித்தார்கள்:

உதாரணமாக, மழுங்கிய கத்தியைக் கொண்டு விலங்குகளை அறுக்கக் கூடாது (மிகவும் கூர்மையானதாக இருக்க வேண்டும்). விலங்கு கல்லால் அடிக்கப்படக் கூடாது அல்லது மற்ற விலங்குகள் காணும்படியாக ஒரு விலங்கை அறுக்கக்கூடாது. அறுக்கப்படும் விலங்கின் அருகில் மற்றொரு விலங்கினை வைத்து அறுக்கச்சென்றவரிடம் முஹம்மது ﷺ அவர்கள் கேட்டார்கள்: "நீங்கள் அந்த அருகில் உள்ள விலங்கினை இரண்டு முறை கொல்ல விரும்புகின்றீரா?" (ஹாகிம், 4/231, 7658)





# விலங்குகளை நெறிமுறைப்படி நடத்துதல்



ஒரு சமயம், முஹம்மது ﷺ அவர்கள் ஒரு மனிதனுக்கு விலங்குகளை நல்ல முறையில் நடத்துவது சம்பந்தமான ஒரு செய்தியை அனுப்ப விரும்பினார்fள். அம்மனிதரிடம் அவரது ஒட்டகம் அது தாங்கிக் கொள்ளும் அளவைவிட அதிகப்படியான சுமையை அவர் ஏற்றுவதாக தன்னிடம் புகார் அளித்திருப்பதாகக் கூறினார்கள். (அபூதாவூத், 2/328, 2549)

மற்றொரு சமயம், முஹம்மது ﷺ அவர்கள் தனது சகாக்களிடம் கூறினார்கள்: "யார் அந்த பறவையின் குட்டிகளைப் பிடித்து வைத்துள்ளீர்களோ அவர்கள் அந்த குட்டிகளை அவற்றின் தாயிடம் ஒப்படையுங்கள் (அது தலையில்லா குஞ்சு போல் ஓடிக்கொண்டிருந்தது). (அபூதாவூத், 3/8, 2675, 4/539, 5268)





## விலங்குகளிடம் இரக்கத்தோடு இருப்பதற்காக நீங்கள் பரிசளிக்கப்படுவீர்கள் :

ஓர் அன்பான செயல், அது விலங்குகளிடமாக இருந்தாலும் கூட, இறைவனால் பரிசளிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றது. முஹம்மது ﷺ அவர்கள் ஒரு முறை தனது தோழர்களிடம் கிணறு கண்டுபிடித்து அதில் இறங்கி தண்ணீர் குடிக்கச் சென்ற ஒரு தாகமான மனிதர் பற்றிய கதையைக் கூறினார்கள். அவர் மேலேறி வந்தபொழுது ஒரு நாய் தாகத்தால் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே மீண்டும் கீழே இறங்கிச் சென்று தனது காலணிகளில் தண்ணீரை நிரப்பி நாயிடம் கொண்டு சென்றார். இதனால் இறைவன் அம்மனிதரின் இரக்க குணத்தால் அவரது முந்தைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்தான்.

மற்றொரு சமயம் முஹம்மது ﷺ அவர்கள் தனதுதோழர்களிடம் ஒரு பூனையைச் சிறைவைத்து அது சாகும் வரையில் கட்டுப்படுத்தி வைத்திருந்த ஒரு பெண்ணை இறைவன் தண்டித்தான் என்று கூறினார்கள். அப்பெண் அப்பூனைக்கு உணவளிக்கவும் இல்லை அதனை தப்பித்துச்செல்லவும் விடவில்லை. (புஹாரி, 3071)



அத்தியாயம்

9

# அதிசயங்கள்

இந்த குர்ஆன் அல்லாஹ்
அல்லாத வேறு யாராலும்
கற்பனை செய்யப்பட்டதன்று;
(அல்லாஹ்வே அதை
அருளினான்) அன்றியும்,
அது முன்னால் அருளப்பட்ட
வேதங்களை மெய்ப்பித்து
அவற்றிலுள்ளவற்றை
விவரிப்பதாகவும்
இருக்கிறது. (ஆகவே) இது
அகிலங்களுக்கெல்லாம்
(இறைவனாகிய) ரப்பிடமிருந்து
என்பதில் சந்தேகமேயில்லை.

திருக்குரான் (10:37)

# முஹம்மது ﷺ அவர்களுக்கு இறைவனின் அதிசயம்



முஹம்மது ﷺ அவர்களின் இறைவனின் செய்தியை அறிவிப்பது மற்றும் ஏகத்துவத்தின்பால் மக்களைக் கொண்டுவருவது எனும் பணியானது அவர்களுக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களைக் காட்டிலும் மிகவும் கடினமானது என்று பல அறிஞர்கள் நம்புகின்றனர். அவர் கொண்டு வந்ததும் மற்றும் இறைவெளிப்பாடாக முதன் முதலாக அரபு மொழியில் வாசிக்கப்பட்டதுமான திருக்குர்ஆனே முஹம்மது ﷺ அவர்கள் கொண்டுவந்த அதிசயமாகும்.

அரபு மொழி பேசக்கூடிய அவரது சொந்த மக்களே அவருக்கு எதிர்ப்பு தெரிவித்த பொழுதும் இஸ்லாத்தை அவர் பல தேசங்களுக்கும் பல மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் மதங்கள் அடங்கிய சமூகங்களுக்கும் கொண்டு சென்றார்.

> அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.
> திருக்குர்ஆன் (4:82)

## திருக்குர்ஆன் ஏன் நித்திய அற்புதமாக கருதப்படுகின்றது?

திருக்குர்ஆனுக்கு மனித நூலாசிரியர் எவரும் இல்லை. இஸ்லாமியர்கள் அதனை இறைவனின் வார்த்தைகள் என்றும் அனைத்து மனிதர்களுக்குமான இறைச்செய்தி என்றும் கருதுகின்றனர். இறைத்தூதராலோ அல்லது வேறு ஒருவராலோ இறைவனின் வார்த்தைகள் மாற்றி அமைக்கப்படாமல் உள்ள ஒரே வேதம் என்று அவர்கள் நம்புகின்றனர்.

மற்ற இறைத்தூதர்கள் காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் மட்டும் கண்ட, அவர்கள் கொண்டுவந்த வெளிப்படையான அற்புதங்களைப் போல் இல்லாமல் தொட்டு, கண்டு, படித்து மற்றும் ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினருக்கு தெரிவிக்கப்படக் கூடிய நித்திய அற்புதமாக திருக்குர்ஆனை முஸ்லிம்கள் கருதுகின்றனர்.



"இந்த குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று), அவர்களில் ஒரு சிலர் சிலருக்கு உதவிபுரிபவர்களாக இருந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்கள் கொண்டு வரமுடியாது" என்று (நபியே) நீர் கூறும்." -திருக்குர்ஆன் (17:88)

## திருக்குர்ஆனின் உரையில் ஒப்பிடமுடியாத பாதுகாப்பு:

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஹம்மது ﷺ அவர்களுக்கு வெளிப்பட்ட திருக்குர்ஆனும் இக்காலக்கட்டத்தில் உள்ள திருக்குரானும் ஒன்றாகவே உள்ளது. முற்காலத்தில், இறைநம்பிக்கையாளர்களால் (ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு எழுத்தும்) மனனம் செய்யப்பட்டது.

முஹம்மது ﷺ அவர்கள் இயற்கை எய்திய பிறகு முதல் ஆட்சியாளராக அபூபக்ர் அஸ்ஸித்திக் (Abu Bakr As-Siddiq) அவர்கள் வந்த பிறகு புத்தகமாகத் தொகுக்கப்பட்டது. முஹம்மது ﷺ அவர்கள் இயற்கை எய்தி 13 ஆண்டுகள் கழித்து மூன்றாவது ஆட்சியாளராக வந்த உஸ்மான் இப்னு அப்வான் (Othman Bin Affan) அவர்களால் பல அசல் பிரதிகள் எடுக்கப்பட்டு பல இஸ்லாமிய நாடுகள் மற்றும் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.



திருக்குர்ஆனின் ஒரு வாசகத்தின் ஒரு பகுதி. இறைவன் தன் மக்களிடம் கூறுகின்றான் "என்னை அழையுங்கள், நான் உங்களுக்கு பதிலளிப்பேன்". வசனம் 60, அத்தியாயம் - 40

மறுபரிசீலனைக் கருத்துக்கள் திருக்குர்ஆனின் முழுமையான நம்பகத்தன்மையை உறுதி செய்கின்றது. பலதரப்பட்ட மக்கள் மற்றும் பல வம்சாவழியாக முரண்பாடுகள் மற்றும் தொடர்பின்மை ஏதும் இன்றி ஒரே உரையாக வந்துள்ளது.

## திருக்குர்ஆனின் தனித்துவம்

(மனிதர்களின் குறிப்புகளோ விளக்கங்களோ ஏதுமின்றி இறைவனின் வார்த்தைகளைக் கொண்டுள்ள) திருக்குர்ஆனில் முஹம்மது ﷺ அவர்களின் போதனைகள் ஏதும் கலந்திராது இருப்பது கவனிக்கத்தக்கது.

முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகளும் போதனைகளும் புத்தகமாக தொகுக்கப்பட்டு "ஸுன்னாஹ்கள் அல்லது இறைத்தூதரின் ஹதீஸ்கள் (The Sunnah or Hadith of the Prophet)" என்று அழைக்கப்படுகின்றது. அவற்றில் அவரது போதனைகள், அவரது வாழ்க்கை முறை மற்றும் (திருக்குர்ஆன்) புத்தகத்தின் விளக்கங்கள் உள்ளன.



## ஹதீஸ் புத்தகங்கள் மற்றும் மற்ற புனித நூல்களின் ஒப்பீடு

பலதரப்பட்ட மதங்களின் பல புனித நூல்கள் தனிப்பட்ட நபரால் அவரது சுயமான வார்த்தைகள் மற்றும் வாக்கியங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. ஹதீஸ் புத்தகங்கள் பல இஸ்லாமிய அறிஞர்களால் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்ட முஹம்மது ﷺ அவர்களின் போதனைகளைக் கொண்டுள்ளதால், பல ஆராய்ச்சியாளர்கள் அவை மற்ற புனித நூல்களுக்கு ஒப்பாக கருதுகின்றனர்.

உதாரணமாக, பைபிள் (The Bible) 1400 முதல் 1800 வரைப் பல ஆசிரியர்களால் எழுதப்பட்டது. 39 புத்தகங்களைக் கொண்டுள்ள பழைய ஏற்பாடு (Old Testament) மற்றும் 27 புத்தகங்களைக் கொண்டுள்ள புதிய ஏற்பாடு(New Testament) என்ற இரண்டு முதன்மைப் பிரிவுகளான 66 தனித்தனி புத்தகங்களின் தொகுப்பே அது.

அரபு மொழியில் கம்பீரத்தையும் சக்தியையும் குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்படும் "நாங்கள் (We)" எனும் வார்த்தை, திருக்குரானின் பல வசனங்களில் இறைவனைக் குறிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பது கவனிக்கத்தக்கது. ஆங்கிலத்தில் அது ஒரு தனிமனிதனை பன்மையில் குறிக்கும் ராஜரீதியான "நாங்கள்" என்று அறியப்படுகின்றது. மறுபுறம், திருக்குரானில், "முஹம்மது அவர்களே, அவர்களிடம் நீங்கள் கூறுவீராக" என்று பொருட்படும் வகையில் "கூறுங்கள்" எனும் வார்த்தை அதிகப்படியாக உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஒப்பிடயியலாத வகையில் பாதுகாக்கப்படும்திருக்குர்ஆன் ஓதும் முறை:திருக்குர்ஆன் ஓதும் பொழுதோ அல்லது ஓதப்படும் பொழுதோ, அதனை வாசிக்கும் முறையிலுள்ள கட்டுப்பாடு விதிகளைக் குறிக்கும் ஞானத்தைத் "தஜ்வீத் (Tajweed)" எனும் வார்த்தை பொதுவாக உபயோகிக்கப்படுகின்றது.

திருக்குர்ஆனின் உரை மட்டுமல்ல அதனை முஹம்மது ﷺ அவர்கள் மற்றும் அவரது தோழர்கள் வாசித்த முறையும் பாதுக்கப்பட்டுள்ளது என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

முஹம்மது ﷺ அவர்கள் வாசித்ததைச் செவியுற்றோர் தொடங்கி இந்நாள் வரையில் திருக்குர்ஆன் வாசிக்கும் விதத்தினை அதனை வாசித்தோர் மற்றும் அதனைக் குறிப்பிட்டோரின் பெயர்களைக் கொண்டு அது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகிலும் ஆவணப்படுத்தப்பட்டு, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்துள்ளது.

தஜ்வீத் என்பது வேறு எந்த மதநம்பிக்கையிலும் இல்லாத தனிப்பட்ட அறிவியல் என நம்பப்படுகின்றது. முஹம்மது ﷺ அவர்கள் (ஒவ்வொரு வார்த்தையையும்) வாசித்த விதத்தினைப் பாதுகாக்க அவரது தோழர்கள் கொண்ட உச்சகட்ட கவனத்தை இது எதிரொலிப்பதாக உள்ளது.



## வழமையான மொழி:

தொன்மையான அரபு மொழியில்திருக்குர்ஆன் வெளிப்படுத்தப்பட்டது. எண்ணற்ற சொற்கள் மற்றும் வலுவான அரபு மொழியின் இலக்கணத்தின் துணையோடு மற்ற பல மொழிகளைக் காட்டிலும் அரபு மொழி சிறந்து விளங்குவதாக இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகின்றனர்.

மற்ற மொழிகளைவிட அரபு மொழியில் இறைவனின் வார்த்தைகளைத் துல்லியமாக விளக்க முடியுமென்பதையே இது குறிக்கின்றது. உதாரணமாக, அரபு மொழியில் 28 எழுத்துக்கள் உள்ளன. அதில் பலமான “தா(D)” கொண்ட “தாத்(Dhad)” மற்றும் பலமான “த(T)” கொண்ட “தௌ(Tau)” போன்ற சில எழுத்துக்கள் வேறு எந்த மொழியிலும் கிடையாது.



ஒவ்வொரு மூலாதார எழுத்திலிருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட வார்த்தைகளைத் தொகுக்க முடியும், இதன் மூலம் அரபு மொழியில் அறுபது இலட்சத்தை விட அதிகமான வார்த்தைகள் உள்ளன. உலகில் இதுவரை அறியப்பட்ட மொழிகளில் உள்ள வார்த்தைகளை விட இது பல மடங்கு அதிகமாகும்.



# திருக்குர்ஆனில் உள்ள முக்கியமான அறிவியல் உண்மைகள்



## பிக் பேங் (Big Bang) மற்றும் பிரபஞ்சத்தின் உருவாக்கம்

முஹம்மது ﷺ அவர்களின் காலக்கட்டத்தில் பிரபஞ்சம் உருவானது என்பதைப் பற்றியோ கோள்களின் அசைவுகளைப் பற்றியோ பூமி தட்டையாக உள்ளதா, அல்லது வட்டமாக உள்ளதா என்றோ யாரும் அறிந்திருக்கவில்லை. இவை அனைத்தும் எப்படி உருவானது என்று பிரபஞ்சத்தைப் படைத்த இறைவன் ஒருவனுக்கே தெரியும் என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.



பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் பிரபஞ்சம் படைக்கப்பட்டதைப் பற்றியும் சூரிய சந்திரனின் அசைவுகளைப் பற்றியும் பூமியின் சுற்றுப்பாதையைப் பற்றியும் பகல் மற்றும் இரவு உண்டாவது பற்றியும் திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக கண்காணிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட தகவல்களின் துணையோடு பிரபஞ்சத்தின் உருவானது "பிக் பேங் தியரி (Big Bang Theory)" என்று இன்றைய நவீன அறிவியல் விவரிக்கின்றது. "பிக் பேங் தியரி" யின்படி மொத்த பிரபஞ்சமும் ஆரம்பத்தில் ஒரு பெரிய நிறையாக இருந்தது, பின்னர் ஒரு மிகப்பெரிய வெடிப்பின் காரணமாக புகை மற்றும் வாயு வடிவமான





பெருமளவிலான மேகங்களில் இருந்து விண்மீன் திரள்கள்(Galaxies) உருவானது.

## பிரபஞ்சத்தின் விரிவாக்கம்

1925ஆம் ஆண்டு, அமெரிக்காவைச் சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சியாளர் எட்வின் ஹப்பில் (Edwin Hubble) என்பவர், விண்மீன் திரள்களும் மொத்த பிரபஞ்சமும் விரிவடைவதைக் குறிக்கும் வகையில் நட்சத்திரங்கள் ஒன்றிலிருந்து ஒன்று விலகிச் செல்கின்றன என்பதற்கான கண்காணிக்கப்பட்ட ஆதாரங்களைச் சமர்ப்பித்தார். மேலும், கோள்கள் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட பாதையில் சூரியனைச் சுற்றி நீள்வட்ட பாதையில் நகர்கின்றன என்பது அறிவியல் பூர்வமாக நிரூபணமான ஒன்று.

பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் முஹம்மது ﷺ அவர்களால் வாசிக்கப்பட்டு இன்றளவும் பாதுகாக்கப்படும் திருக்குர்ஆனின் பின்வரும் வசனங்களுக்கும் நவீன அறிவியல் ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் உள்ள ஒற்றுமை ஆச்சரியப்படக் கூடியவையே.



நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் காஃபிர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?

-திருக்குர்ஆன் (21:30)

பிறகு அவன் வானம் புகையாக இருந்தபோது (அதைப்) படைக்க நாடினான்; ஆகவே அவன் அதற்கும் பூமிக்கும்; "நீங்கள் விருப்புடனாயினும் அல்லது வெறுப்பிருப்பினும் வாருங்கள்"" என்று கூறினான். (அதற்கு) அவையிரண்டும் "நாங்கள் விருப்புடனேயே வருகின்றோம்"" என்று கூறின.

-திருக்குர்ஆன் (41:11)



இன்னும் அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் படைத்தான்; (வானில் தத்தமக்குரிய) வட்டவரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன.

-திருக்குர்ஆன் (21:33)

மேலும், நாம் வானத்தை (நம்) சக்திகளைக் கொண்டு அமைத்தோம்; நிச்சயமாக நாம் விரிவாற்றலுடையவராவோம்.

-திருக்குர்ஆன் (51:47)

## முளையவியல் மற்றும் மனிதயினத்தின் படைப்பு:

முஹம்மது ﷺ அவர்கள் மனிதயினத்தின் படைப்பினைப் பற்றி பின்வரும் ஆச்சர்யமூட்டும் வகையிலான வசனங்களை வாசித்தார்கள். 1400 வருடங்கள் முன் முளையவியல் (Embryology) பற்றிய அறிவியல் கண்டுபிடிக்கப்படாத அந்த காலக்கட்டத்தில் அதுபோன்ற ஞானம் யாருக்கும் கிடையாது.

"... அவன் உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான்; பிறகு, அவரிலிருந்து அவருடைய மனைவியை ஆக்கினான்; அவன் உங்களுக்காக கால் நடைகளிலிருந்து எட்டு (வகைகளை) ஜோடி ஜோடியாக படைத்தான்! உங்கள் தாய்மார்களின் வயிறுகளில், ஒன்றன் பின் ஒன்றாக மூன்று இருள்களுக்குள் வைத்து உங்களை படைக்கிறான்; அவனே அல்லாஹ்; உங்களுடைய இறைவன்; அவனுக்கே ஆட்சியதிகாரம் (முழுவதும் உரித்தாகும்), அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவ்வாறிருக்க, (அவனை விட்டும்) நீங்கள் எப்படி திருப்பப்படுகிறீர்கள்,-திருக்குர்ஆன் (39:6)

நவீன அறிவியல், கருப்பையில் கருவிற்கு திடமான பாதுகாப்பு வழங்க அதனைச் சுற்றி மூன்று இருள்சூழ்ந்த திரைகள் உள்ளதாக விவரிக்கின்றது.; (1) தாயின் உட்புற வயிற்றுச்சுவர் (Interiror abdominal wall) (2) கருப்பைச் சுவர் (uterine wall) (3) அமினோ கொரிய சவ்வு (amino-chorionic membrane).







மனித இனத்தின் படைப்பைப் பற்றி ஆச்சர்யமூட்டும் வகையில் பின்வரும் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.




நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம்.
பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு சதைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அச்சதைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். -திருக்குர்ஆன் (23:12-14)



ஆச்சர்யமூட்டும் வகையில், கருவின் வளர்ச்சியைப் பற்றி திருக்குர்ஆனில் குறிப்படப்பட்டுள்ளவை மருத்துவ கண்டுபிடிப்புகளை ஒத்து உள்ளது. மேலும், மேலுள்ள வரியில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று சதை உருவாகுவதற்கு முன் எலும்புகள் உருவாகின்றன என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும், கருவிற்கு பார்வைத்திறன் உருவாகுவதற்கு முன்னர், செவித்திறன் உருவாகின்றது என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது திருக்குர்ஆனின் வசனங்கள் 32:09, 76:02, 23:78 ஆகியவற்றில் பார்வைத்திறனுக்கு முன்னர் செவித்திறன் உருவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஒத்து உள்ளது.

"பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு சதைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அச்சதைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்."
-திருக்குர்ஆன் (23:14)

## 309 வியக்கத்தக்க வகையிலான ஆண்டுகளின் எண்ணிக்கை

திருக்குர்ஆனின் அத்தியாயம் 18, வசனம் 25, ஏழு நித்திரைவாசிகளைப் பற்றி (Seven Sleepers) குறிப்பிடுகையில், அவர்கள் அந்த குகையினுள் 300 வருடங்கள் மற்றும் கூடுதலாக 9 வருடங்கள் இருந்தனர் என்று கூறுகின்றது. முஹம்மது ﷺ அவர்களது காலத்தில் 309 என்று மொத்த எண்ணிக்கையாக ஏன் மேலுள்ள வசனத்தில் கூறப்படவில்லை என்பது யாரும் அறிந்திருக்கவில்லை.

மேலும், அரேபியாவில், அக்காலக்கட்டத்தில் சந்திர ஆண்டுக்கும் (lunar year) மற்றும் சூரிய ஆண்டுக்கும் (Solar/ Gregorian year) இடையேயான வேறுபாட்டினை அறிந்திருக்கவில்லை. சந்திர ஆண்டில் 11 நாட்கள் சூரிய ஆண்டைவிட குறைவாகவே இருக்கும். அதிசயக்கும் உண்மை என்னவெனில், 300 ஆண்டுகளில் சந்திர ஆண்டுக்கும் சூரிய ஆண்டுக்கும் இடையே 9 ஆண்டுகள் வேறுபாடு உள்ளது.

பொதுவாகவேதிருக்குர்ஆன் 604 பக்கங்களைக் கொண்டதாக அச்சிடப்படுகின்றது. அதில் 114 பாகங்களில் 6348 வசனங்களாக பிரிக்கப்பட்டு 80000 வார்த்தைகள் உள்ளடங்கியுள்ளன. திருக்குரானில் மிகப்பெரிய அத்தியாயத்தில் 286 வசனங்களும், மிகச்சிறிய அத்தியாயத்தில் 3 வசனங்களும் உள்ளன.

## எதிர்கால நிகழ்வுகளைப் பற்றிய அபூர்வமான தகவல்கள்



திருக்குர்ஆனின் அத்தியாயம்:30, வசனங்கள்2-5, பின்வருமாறு கூறுகின்றன:

> “ரோம் தோல்வியடைந்து விட்டது. அருகிலுள்ள பூமியில்; ஆனால் அவர்கள் (ரோமர்கள்) தங்கள் தோல்விக்குப்பின் விரைவில் வெற்றியடைவார்கள். சில வருடங்களுக்குள்ளேயே! (இதற்கு) முன்னும், (இதற்கு) பின்னும், (வெற்றி தோல்வி குறித்த) அதிகாரம் அல்லாஹ்வுக்குத்தான்; (ரோமர்கள் வெற்றி பெறும்) அந்நாளில் மு:ஃமின்கள் மகிழ்ச்சியடைவார்கள். அல்லாஹ்வின் உதவியினால் (வெற்றி கிடைக்கும்); அவன்தான் நாடியவர்களுக்கு உதவி புரிகிறான் - மேலும், (யாவரையும்) அவன் மிகைத்தவன்; மிக்க கிருபையுடையவன்.”.

முஹம்மது ﷺ அவர்களின் காலக்கட்டத்தில், அக்காலத்தின் இரண்டு வல்லரசுகளின் இடையே அடுத்த பத்தாண்டுகளில் எப்படி முயற்சிகள் இருக்கப்போகின்றன, வீழ்த்தப்பட்ட ஒரு பேரரசால் அடுத்த சில ஆண்டுகளிலேயே வெற்றி மீண்டும் தனதாக்கிக்கொள்ள முடியுமா என்பதை அரேபியரால் ஊகிக்க இயலாத ஒன்றாகவே இருந்தது. பெர்சியாவின் பேரரசு, ரோம சாம்ராஜ்ஜியத்தை பாலஸ்தீனத்தில் 614-619 கி.பி காலக்கட்டத்தில் வீழ்த்தி ஜெரூசெலத்தைக் கைப்பற்றியது என்பது வரலாறு. ஆனால், அடுத்த சில ஆண்டுகளிலேயே ரோம சாம்ராஜ்யம் ஈராக்கின் ஒரு நகரமான நிநெவாஹ் (Nineveh) எனும் இடத்தில் பெர்சிய சாம்ராஜ்ஜியத்தை வீழ்த்தி மீண்டும் வெற்றியைத் தனதாக்கியது.

## ஆச்சரியமூட்டும் புவியியல் அமைப்பு

சமீபகாலத்தின் புவியியல் ஆராய்ச்சியில், ஜோர்டான் நாட்டின் பிளவு பள்ளத்தாக்கில் உள்ள “செத்த கடல் (Dead Sea)” தான் உலகின் மிக ஆழமான அதிக உப்புத்தன்மை வாய்ந்த நதி என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது கடல் மட்டத்திலிருந்து 422 மீட்டர் (1385 அடிகள்) உயரத்தில் உள்ளது. அதன் கடற்கரைகள் உலகின் மிக கீழ்மட்டத்தில் உள்ளன. மேல் கூறப்பட்டுள்ள வசனத்தில் ரோமானியர்கள் அரேபியாவின் அருகில் உள்ள ரோம நிலத்தில் வீழ்த்தப்பட்டார்கள் என்று குறிப்பிடுகின்றது. அதில் உலகின் மிக கீழ்மட்டத்தில் உள்ள நிலம் என்பதும் அடங்கும்.

## இறுதி குறிப்புகள்

1. பழைய ஏற்பாடு ஹெப்ரூ மொழியில் 1500-400 பிசி-ல் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் ஏ.டி. முதலாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் எழுதப்பட்டது. ஏ.டி. 50 முதல் 75 வரையில் எழுதப்பட்ட மேத்யூவின் புத்தகமே (Book of Matthew) முதல் காஸ்பெல் (Gospel) என்று பொதுவாக நம்பப்படுகின்றது. நான்கு காஸ்பெல் (Gospel) புத்தகங்களில் ஏ.டி.85-ல் எழுதப்பட்ட ஜானுடையதே கடைசியாக எழுதப்பட்டது.

2. முளையவியல் (embryology) மற்றும் திருக்குர்ஆனில் உள்ள அறிவியல் ஆதாரங்களைப் பற்றி மேலும் அறிய, பார்க்கவும், www.eajaz.org, www.islamhouse.com



அத்தியாயம்
10

# அவரது கூற்றுகள்



முஹம்மது ﷺ அவர்கள் (தனது இரண்டு கைவிரல்களையும் கோர்த்துக்கொண்டு) கூறினார்கள்:

"நம்பிக்கையாளர்கள் இதுபோன்ற தோற்றத்தை உடையவர்கள், அவர்கள் ஒருவருக்கொருவர் பலப்படுத்திக்கொள்வர்"

புஹாரி (481) மற்றும் முஸ்லிம் (2585)




முஹம்மது ﷺ அவர்கள் மணலில் மூன்று கோடுகள் வரைந்து, பின்னர் கூறினார்: "இது தான் ஒரு மனிதன் உலக வாழ்வில் பல எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் கொண்டவர். அவர் அதனை அடைவதற்காக வாழும் பொழுது, அவருக்கு மரணம் வந்துவிடுகின்றது.

புஹாரி (6417) மற்றும் முஸ்லிம் (1671)

# அவரது கூற்றுகள்

முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகளும் போதனைகளும் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் விபரிப்பதினால், அவை மிகவும் செல்வாக்கு மிகுந்து காணப்படுகின்றது. அவை ஞானம் மற்றும் இறைவெளிப்பாடுகளைக் கொண்டு உருவானது.

“ஸுன்னாஹ்” என்று அறியப்படும் அவரது கூற்றுகள், செயல்கள், ஒப்புதல்கள் மற்றும் பண்புகள் அனைத்தும் திருக்குர்ஆனுக்கு அடுத்தபடியாக இஸ்லாமிய சட்டத்தின் மூலாதாரமாக உள்ளது.

> “உங்கள் தோழர் வழி கெட்டுவிடவுமில்லை, அவர் தவறான வழியில் செல்லவுமில்லை. அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை.” -திருக்குர்ஆன் (53:2-3)

முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகளில் இருந்து, வாழ்க்கையின் பல்வேறு விஷயங்களைப் பொறுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட போதனைகள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

“ஐந்திற்கு முன் ஐந்தைப் உபயோகித்துக் கொள்ளுங்கள்:
முதுமை வரும் முன் இளமையை
நோய் வரும் முன் உடல்நலத்தை
ஏழ்மை வரும் முன் செல்வத்தை
வேலை வரும் முன் ஓய்வு நேரத்தை
மரணம் வரும் முன் வாழ்க்கையை”
(பதிவு: ஹாகிம்)
இமாம் ஹாகிம் அவர்களால் அல்-முஸ்தத்ரக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது-7846 (4/341)

“நன்னடத்தை உடையவர்களே சிறந்த நம்பிக்கையாளர்கள்”
(ஆதாரம் : திர்மிதி)

“இரண்டு அருமைகளைப் பல மனிதர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள்;
ஆரோக்கியம் மற்றும் ஓய்வு நேரம்”
(புஹாரி, 6049)

“பொறாமை தடை செய்யப்பட்டுள்ளது, இரண்டு நிலைகளில் தவிர (நீங்கள் மற்றவர்களைப் போன்று உங்களுக்கு விரும்பலாம், ஆனால் அவர்களுக்கு தீங்கு எண்ணக்கூடாது). முதலாவது, இறைவன் செல்வத்தை அளித்து, அதனை நேரான வழியில் செலவிடும் மனிதர்; இரண்டாவது, இறைவன் நல்ல ஞானத்தை அளித்து, அதன் படி தானும் நடந்து மற்றவர்களுக்கும் போதிக்கும் மனிதர்”
(ஆதாரம் - புஹாரி 73/15)

மக்களுக்கு எளிதாக்குங்கள் (மதநம்பிக்கையிலான விஷயங்களில்), மேலும் அவர்களுக்கு அதனை கடுமையாக்காதீர்கள்; அவர்களுக்கு நல்ல செய்திகளைக் கூறுங்கள் மற்றும் அவர்களை விட்டு விலகிச்செல்ல வைக்காதீர்கள்” (ஆதாரம் - புஹாரி, 69/11)

“யார் நீதமான முறையில் வணிகம் மற்றும் வர்த்தகம் செய்கின்றாரோ, அவரையும் அவரது வியாபாரத்தையும் அல்லாஹ் ஆசிர்வதிப்பான். மாறாக, யார் பொய் கூறி உண்மைகளை மறைக்கின்றாரோ, அவரை அல்லாஹ் ஆசிர்வதிப்பதில்லை.” (ஆதாரம் - புஹாரி, 2082/22)

“உங்களுக்கு விரும்பியதை உங்கள் சகோதரருக்கும் விரும்பாத வரையில் நீங்கள் நம்பிக்கையாளராக மாட்டீர்கள்.”
(பதிவு: புகாரி, 13/7)

“ஒவ்வொரு முஸ்லிமும் ஸதகா வழங்க வேண்டும் (தானத்தில் செலவழித்தல்), ஒருவருக்கு எதை செலவிடுவது என்று தெரியவில்லை எனில், அவர் தனக்கு பலனளிக்கும்படியான பணி செய்து, தன்னை (தானம் செய்வதற்கு) தகுதியாக்கிக் கொள்ளட்டும், அவருக்கு வேலை கிடைக்காவிடின், மற்றவர்களுக்கு உதவி செய்யட்டும் (இதுவும் ஒரு தானச்செயலே), அவர் உதவி செய்ய யாரும் கிடைக்காவிட்டால், நல்ல செயல்கள் செய்து தீய செயல்களில் இருந்து விலகிக் கொள்ளட்டும். இதுவும் அவருக்கு தான செயலாகும்.”
(ஆதாரம் - புஹாரி, 1445/30)

“ஒரு மனிதன் இறந்த பின்னர் மூன்று செயல்களைத் தவிர வேறு எதனாலும் அவர் நன்மைகளைப் பெற போவதில்லை; மற்றவர்களுக்கு தொடர்ந்து பலனளிக்கும் அவர் செய்த தானங்கள்; மற்றவர்கள் (மனிதயினம்) பலன் பெறும் வகையில் அவர் விட்டுச் சென்ற ஞானம்; அவருக்கு நல்ல (விசுவாசமுள்ள) மகன் இருந்தால், அந்த மகன் தொழுது தன் பெற்றோருக்காக கேட்கும் பாவமன்னிப்பு(இது ஆண் மற்றும் பெண் இருவருக்கும் பொருந்தும்)
(ஆதாரம் - முஸ்லிம், திர்மிதி, நஸாஈ)

"நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள், ஒரு கெட்ட செயலைத் தொடர்ந்து ஒரு நல்ல செயலைச் செய்யுங்கள், அது அதனை அழித்துவிடும், மற்றும் மனிதர்களுடன் நல்ல நெறிமுறைகளோடு நடந்து கொள்ளுங்கள்"

(ஆதாரம் - திர்மிதி, 1897 & அஹ்மத், 5/153)

"நற்குணமே நல்ல அறநெறி; மற்றும் பாவம் (தவறு) என்பது உங்களைச் சங்கடப்படுத்துவது (அதாவது, உங்களுக்கு குற்ற உணர்ச்சியைத் தருவது) மற்றும் அதை மற்றவர்கள் அறிந்து கொள்வதை வெறுப்பீர்கள்"

(ஆதாரம் - முஸ்லிம், 15/2553)

"வலுவான நபர் என்பவர் தன் எதிரிகளை வீழ்த்துபவரல்ல. யார் கோபத்தினைக் கட்டுப்படுத்துகின்றாரோ, அவர் தான் வலுவான நபர்."

(ஆதாரம் - புஹாரி, 5785 மற்றும் முஸ்லிம், 4853)

"யார் அல்லாஹ் மற்றும் தீர்ப்புநாள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளாரோ அவர் நல்லதைப் (வார்த்தைகளை) பேசட்டும் அல்லது அமைதியாக இருக்கட்டும், யார் அல்லாஹ் மற்றும் தீர்ப்புநாள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளாரோ அவர் தனது அண்டைவீட்டாருடன் நீதமாக நடந்து கொள்ளட்டும், யார் அல்லாஹ் மற்றும் தீர்ப்புநாள் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளாரோ அவர் தனது விருந்தினரைக் கௌரவிக்கட்டும்."

(ஆதாரம் - புஹாரி 6018 & முஸ்லிம் 74-47)

(அனைத்து கூற்றுகளும் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பாலருக்கும் பொருந்தும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

# உணவு மற்றும் மருத்துவத்தைக் கொண்டு இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் கூற்றுகள்

## வருமுன் காப்பதே சிறந்தது

முஹம்மது ﷺ அவர்கள் ஒரு மருத்துவரல்ல என்றாலும் உணவு, ஆரோக்கியமான உணவுமுறை, மூலிகைகளைக் கொண்டு சிகிச்சைகள் மற்றும் மாற்று மருத்துவம் ஆகியவற்றைப் பற்றிய அவரது கூற்றுகள் அனைத்தும் புத்தகங்களில் தொகுக்கப்பட்டது, பின்னர் அது "தீர்க்கதரிசன மருத்துவம் (The Prophetic Medicine)" என்று அறியப்படுகின்றது.

முஹம்மது ﷺ அவர்கள் வயிறு தான் நிரப்புவதற்கு மிகவும் மோசமான பாத்திரம் என்று பல தருணங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். பசியினைப் போக்கக்கூடிய சிற்றுண்டிகள் உண்பது வயிற்றை நிரப்புவதைவிட சிறந்தது. அது ஆரோக்கிய கேடுகளில் இருந்து காப்பாற்ற உதவும்.

வயிறு - நிரப்புவதற்கு மிக மோசமான பாத்திரம்

அவர் தனது தோழர்களை மிதமாக உண்ணவும், பருகவும், உடல் பருமனைத் தவிர்க்கவும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்வு முறையைப் பேணவும் ஊக்கமளித்தார். அதன் தொடர்புடைய இறைவசனத்தை அவர் வாசித்தார். திருக்குர்ஆனின் அத்தியாயம் 7, வசனம் 31 கூறுகின்றது:

> "ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள்; உண்ணுங்கள், பருகுங்கள்; எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை."



## முஹம்மது ﷺ அவர்கள் பார்லியைப் பரிந்துரைத்தார்



இன்று, பல ஆராய்ச்சிகள் ஆரோக்கியத்திற்கு பார்லியின் (barley) அற்புதமான பல நன்மைகளை நிரூபித்துள்ளது. பார்லி புல் ஓர் உணவு நிரப்பியாகும்.

பலதரப்பட்ட நொதிகள் (enzymes), விட்டமின்கள் (vitamins), கனிம சத்துக்கள் (minerals), தாவர இரசாயனங்கள் (phytochemicals), மனஅழுத்தத்தைப் போக்கும் திரிப்தோபன் (Tryptophan) உட்பட அத்தியாவசியமான எட்டு அமிலோ அமிலங்கள் (Amino Acids) இதில் அடங்கியுள்ளன.

**பார்லி - மன அழுத்த நிவாரணி**

முஹம்மது ﷺ அவர்கள் வயிற்று கோளாறுகளுக்கு பார்லி சூப் (தல்பினாஹ் (Talbinah)) பரிந்துரைத்து அது மன அழுத்தம் மற்றும் துக்கத்திலிருந்து விடுவிக்கும் என்று கூறியுள்ளார்கள். அவரது துணைவியார் ஆயிஷா (ரலி) அவர்கள், மரணமடைந்த ஒருவரின் நெருங்கிய உறவினரிடம் துக்கத்தைப் போக்க தல்பினாஹ் சூப்பை பரிந்துரைத்தார்கள். (ஆதாரம் - புஹாரி, 5365 மற்றும் முஸ்லிம், 2316)



மருத்துவ ஆராய்ச்சியின்படி, மனச்சோர்வு நோய் என்பது ஒருசில இரசாயன குறைபாடுகளிலினாலோ அல்லது மனநிலைக்கு காரணமான மூளையில் உள்ள நரம்பியத்தாண்டுவிப்பியாலோதான் (neurotransmitters) ஏற்படுகின்றது. மன அழுத்த எதிர்ப்பு மருந்துகள் (Antidepressants) இரசாயன மாற்றத்தைத் தூண்டி நரம்பியத்தாண்டுவிப்பிகளின் அளவுகளை அதிகரிக்கின்றது.

மனநிலைக்கு காரணமாக இருப்பது மூன்று முக்கிய நரம்பியத்தாண்டுவிப்பிகள் தான்: செரோடினின் (Serotonin), நோரிபைபிரின் (norepinephrine) மற்றும் டோபமைன் (dopamine). பார்லி செரோடினின் அளவை ஆக்கப்பூர்வ வழியில் அதிகரித்து மன அழுத்ததில் இருந்து விடுவிக்கின்றது. 1400 ஆண்டுகள் முன்பு முஹம்மது ﷺ அவர்கள் பார்லியைப் பரிந்துரைத்தது நிச்சயமாக ஓர் அற்புதம் தான்.



## கோதுமையா அல்லது பார்லியா?



முஹம்மது ﷺ அவர்கள் வழக்கமாக கோதுமை மட்டும் உட்கொள்ளவில்லை என்றும் மாறாக பார்லியின் மாவினால் ஆன ரொட்டிகளையும் சில சமயங்களில் உண்டார்rள் என அறியப்படுகின்றது.

பார்லி தானியத்தில் ஆரோக்கியத்திற்கான பல நன்மைகள் உள்ளதாக கண்டுபிடிக்கப்பபட்டுள்ளது. இரத்தத்தில் சக்கரை அளவைக் கட்டுப்படுத்தி, சிறிய இரத்தக்கட்டிகளைத் தடுத்து, உடலில் கொழுப்பு உற்பத்தியைக் குறைக்கின்றது.

பகலில் சிறிய அளவிலான உணவையே உண்ண வேண்டும் என்பதும் முஹம்மது ﷺ அவர்களின் போதனைகளில் ஒன்றாகும். யாரேனும் அதிகமாக உண்ண விரும்பினால், மூன்றில் இரண்டு பங்கை விட அதிகமாக உண்ணக்கூடாது. அவர் தன் தோழர்களிடம் வயிற்றின் மூன்றில் ஒரு பங்கு சாப்பிட்டு ஒரு பங்கு தண்ணீர் பருகி கடைசி ஒரு பங்கை மூச்சுக்காற்றுக்காக காலியாக விட வேண்டும் என்று கூறியுள்ளார்.
(ஆதாரம்: மிக்தம் இப்னு மா'தி யக்ரிப் (Miqdam Bin Ma'di Yakrib), ரியாழுஸ் ஸாலிஹீன், (516))

1/3 சாப்பாடு
+
1/3 தண்ணீர்
+
1/3 காலி

ஸம்ஸம் நீர்: மக்கா நகரில் உள்ள புனித பள்ளிவாசலான கஃபாவின் கிழக்கே உள்ள 20 மீட்டர் ஆழமுள்ள கிணற்றில் இருந்து வரும் நீரின் பெயர் ஸம்ஸம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இப்றாஹீம் (அலை) அவர்களின் புதல்வன் இஸ்மாஈல் (அலை) அவர்களுக்கு தண்ணீர் தாகம் ஏற்பட்டு (அவரது தாயார் ஹாஜர் அம்மையார் நீண்ட நேரம் தண்ணீர் தேடியும் கிடைக்காமல் போனதால்) அழுது கொண்டே நிலத்தை உதைத்த பொழுது அதிசயமாக தோன்றியதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

ஸம்ஸம் தண்ணீரின் காரத்தன்மை (Alkaline) pH=7.5 மற்றும் அதற்கு வேறுபட்ட சுவையும் உண்டு. (கனிமத்தன்மை நீக்கப்பட்டு காய்ச்சி வடிகட்டிய தண்ணீர் அமிலக் காரத்தன்மையை வயிறு மற்றும் குடல்களால் உருவாக்கும். மேலும் அது அமில எதுக்குதலை (Acid Reflux) உண்டாக்கும்).

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள் ஸம்ஸம் தண்ணீர் இறைவனிடமிருந்து வரும் புனித நீராகும். அது ஓர் ஆடம்பரமான உணவாகவும் பல நோய்களில் இருந்து நிவாரணியாகவும் உள்ளது. (ஆதாரம் - தபரானி (Tabarani)

யு.எஸ் உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு வாரியம் (U.S. Food and Drug Authority) சுத்திகரிக்கப்பட்ட நீரில் (Mineral water) மொத்தமாக கரைக்கப்பட்ட திடப்பொருட்கள் (Total Dissolved Solids) (TDS) குறைந்தது 250 பார்ட்ஸ் பெர் மில்லியன் (parts per million) (ppm) இருக்க வேண்டும் என்று வரையறுத்துள்ளது.

இரசாயன ஆய்வின்படி ஸம்ஸம் தண்ணீரில் 1000ppm மிகி/லி TDS இருப்பதாக வெளியானது. இருப்பினும் உலக சுகாதார நிறுவனத்தின் தர அளவுகோளின் படி புழங்குவதற்கு ஏற்ற நீராகவே உள்ளது.

(உறுதியான எலும்புகளுக்கு மற்றும் இதயம், சதை, நரம்பு உள்ளிட்டவை சிறப்பாக செயல்பட தேவையான) கல்ஷியம் (Calcium), (பற்களுக்குத் தேவைப்படும்) ஃப்ளோரைடு (fluoride) மற்றும் (உணவு செரிமானத்திற்கு தேவைப்படும்) பைகார்பனேட் (bicarbonates) போன்ற கனிமங்கள் நிறைந்துள்ள முழு உணவாக செயல்படுகிறது.



மிகவும் வளமையான புழக்கத்திற்கு உகந்த தண்ணீர்களில் ஸம்ஸமும் ஒன்று. அதில் 195-200 மிகி/லி கால்ஷியம் உள்ளது (வயதுமுதிர்ந்த மனிதர்களுக்கு ஒரு நாளில் தேவைப்படும் சராசரி அளவு).

உலகில் புகழ்வாய்ந்த “எவியன் (Evian)” (78-80 மிகி/லி) மற்றும் “பெர்ரியர் (Perrier)” (147-150 மிகி/லி) போன்ற சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்களை விட இது அதிகமாகும்.

சுத்திகரிக்கப்பட்ட நீருக்கு சதை மற்றும் எலும்பு வீக்கம், மூட்டுவாதம் போன்றவற்றைக் குணப்படுத்தும் பலவகையான சிகிச்சை செயல்பாடுகள் உள்ளன.



இது நீர் துளியைப் போல் காட்சியளிக்குமாறு கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட “ரஸூலுல்லாஹ் (இறைவனின் தூதர்)” என்ற அரபு வார்த்தையாகும். படைப்பு: ஃபாரித் அல்-அலி

## ட்ர..புல் (Truffle) - ஓர் அருமருந்து

முஹம்மது ﷺ அவர்கள் கூறினார்கள்: “ட்ர..புல்” ஒரு வித ‘மன்னா’வைப் போன்றது (இஸ்ரேலிய மக்களுக்கு அனுப்பப்பட்டது) மற்றும் அதன் சாறு கண்களுக்கு மருந்தாகும்.” (புஹாரி, 5708) மற்றும் ((முஸ்லிம், 5244)



ட்ர..புல் என்பது அகேரிகேசியே (Agaricaceae) குடும்பத்தைச் சேர்ந்த காளான் போன்று தோற்றமளிக்கும் சதையுடன் கூடிய பூஞ்செடியாகும். இது ஈரப்பதம் வாய்ந்த பாலைவனப் பகுதியில் இலைகளோ, வேரோ இன்றி கூட்டமாக மண்ணிற்கு கீழே வளர்வது. இதற்கு மாறுபட்ட வாசனை இருக்கும் மற்றும் இது வெள்ளை, சாம்பல் மற்றும் பழுப்பு நிறத்தில் காணப்படும்.

ஒரு பகுப்பாய்வு ஆராய்ச்சியின்படி, ட்ர..புலில் 77% தண்ணீர் மற்றும் மீதப்பகுதிகள் புரதம் (Protein), பொழுப்பு (Fat), கார்போஹைட்ரேடுகள் (Carbohydrates) ஆகியவையின் கலவையால் அமைந்துள்ளது.

எனினும், நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள் ட்ர..புல் நீரில் கண் கருவிழிக்கு பாதிப்பை உண்டாக்கும் ட்ரகோமா (Trachoma) உள்ளிட்ட கண்நோய்களைக் குணப்படுத்தும் திறன் உள்ளதாக அறியப்பட்டுள்ளது.



## முஹம்மது ﷺ மற்றும் ஆலிவ் எண்ணெய்

முஹம்மது ﷺ அவர்கள் ஆலிவ் எண்ணெய் ஒரு புனிதமான மரத்தில் இருந்து வருவதாக விவரித்துள்ளார்கள். அவர்கள் தனது தோழர்களிடம் ஆலிவ் எண்ணெய்யை உண்ணவும் உடல் சருமத்தில் உபயோகிக்கவும் வலியுறுத்தினார்.
(திர்மிதி-1851)



அனைத்து நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளும் ஆலிவ் எண்ணெயில் ஆரோக்கிய குணநலன்கள் நிறைந்துள்ளதை உறுதி செய்கின்றன. மோனோ-அன்ஸேட்சுரேடட் (mono-unsaturated) எனப்படும் நல்ல கொழுப்பினால் உருவாகியுள்ளது. இது எல்டிஎல்(LDL) எனப்படும் கெட்ட கொழுப்பைக் கட்டுப்படுத்தி ஹச்டிஎல்(HDL) எனும் நல்ல கொழுப்பை அதிகரிக்கின்றது.

ஆலிவ் எண்ணெய் வயிற்றில் எளிதாக செரிமானம் ஆகக்கூடியது. அதன் பாதுகாப்புத் தன்மை புண்கள் மற்றும் இரைப்பைக்கு மிகுந்த பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றது.



எக்ஸ்ட்ரா விர்ஜின் ஆலிவ் (Extra Virgin Olive) எண்ணெயில் அலிவ்களின் முதல் அழுத்தத்தில் இருந்து வருவது. இது குறைவாகவே பதப்படுத்தப்படுவதால் அதில் வைட்டமின் ஈ மற்றும் ஃப்னோல் (Phenols) போன்ற அன்ரி ஆக்ஸடண்ட்கள் (Antioxidants) நிறைந்து உள்ளன.

இன்று, ஆலிவ் எண்ணெய் சரும பிரச்சனைகளுக்கு சிறந்த நிவாரணியாகவும் சருமத்திற்கு ஈரப்பதம் வழங்கும் ஆகாரமாகவும் கருதப்படுகின்றது.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு ஆலிவ் எண்ணெய்யுடன் குறைந்த கொழுப்பு மற்றும் அதிக கார்போஹைட்ரேடுகள் கொண்ட உணவு வழக்கம் அறிவுறுத்தப்ப டுகின்றது. ஆராய்ச்சியின்படி இந்த சேர்க்கை இரத்ததில் உள்ள சக்கரை அளவைக் கட்டுப்படுத்துவதில் கொழுப்பற்ற உணவு முறைகளைவிட சிறந்து செயல்படுவதாக அறியப்பட்டுள்ளது.

அல்லாஹ்
வானங்கள் பூமிக்கு
ஒளி (ஏற்படுத்துபவன்)
அவன் (ஏற்படுத்தும்) ஒளிக்கு
உவமை விளக்கு வைக்கப்பட்டுள்ள மாடம்
போன்றதாகும். அவ்விளக்கு ஒரு கண்ணாடி
(குவி)யில் இருக்கிறது; அக்கண்ணாடி ஒளிவீசும்
நட்சத்திரத்தைப் போன்றதாகும். அது பாக்கியம்
பெற்ற ஜைத்தூன் மரத்தி(ன் எண்ணெயி)னால்
எரிக்கப்படுகிறது. அது கீழ்த்திசையை சேர்ந்ததுமன்று;
மேல்திசையை சேர்ந்ததுமன்று. அதனை நெருப்புத்
தீண்டாவிடினும், அதன் எண்ணெய் ஒளி வீச முற்படும்,
(இவை எல்லாம் சேர்ந்து) ஒளி மேல் ஒளியாகும்.
அல்லாஹ் தான் நாடியவரை தன்னுடைய ஒளி
(என்னும் சத்தியப்பாதை)யின் பால் நடத்திச்
செல்கிறான். மனிதர்களுக்கு இத்தகைய
உவமைகளை அல்லாஹ்
தெளிவுபடுத்துகிறான். அல்லாஹ்
யாவற்றையும் நன்கு அறிபவன்.
-திருக்குர்ஆன் (24:35)



அத்தியாயம்
11

# மதீனா

சவூதி அரேபியா-வின் மதினா நகரில் உள்ள இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசல் (அல்-மஸ்ஜித் அந் நபவி).



இது கலைநயத்துடன் அரபு மொழியில் வடிவமைக்கப்பட்ட "முஹம்மது" எனும் வார்த்தையாகும்.

# முடிவுரை

## முஹம்மது, ஒரு மனிதர்

முஹம்மது ﷺ அவர்கள் மக்களை மிகச்சிறப்பாகவும் மனிதநேயத்துடனும் கையாண்ட விதத்தினை வரலாறு பதிவு செய்துள்ளது. அவரது அழைப்பு மற்றும் போதனைகள் அனைத்தும் அன்பு மற்றும் சகோதரத்தன்மையின் அடிப்படையில் மட்டுமே இருந்ததே தவிர பாதகமான எந்த செயலும் இருந்ததில்லை.

மைக்கேல் ஹார்ட் (Michael Hart) தனது "100 வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த மனிதர்களின் தரவரிசைப் பட்டியல் (The 100 A Ranking of the Most Influential Persons in History)" எனும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்:

"எளிமையான தோற்றத்துடன், முஹம்மது உலகின் மிகச் சிறந்த மதங்களில் ஒன்றை நிறுவி, வெளியிட்டார் மற்றும் மிகவும் திறமையான அரசியல் தலைவராக ஆனார். இன்று, அவர் மறைந்து பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு பிறகும் கூட அவரது செல்வாக்கு மிக சக்திவாய்ந்ததாகவும் பரவலாகவும் காணப்படுகின்றது. இப்புத்தகத்தில் உள்ள பெரும்பான்மையான மனிதர்களிடம் நாகரீகமான, பண்பட்ட, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தேசங்களில் பிறந்து வளர்வதற்கான சாதகம் அமைந்திருந்தது".

"எனினும், முஹம்மது ﷺ அவர்கள் அக்காலத்தில் வணிகம், கலை மற்றும் கல்வி ஆகியவற்றில் உலகில் மிகவும் பின்தங்கி இருந்த இடமான தெற்கு அரேபியாவின் மக்கா நகரில் 570 கி.பி ஆண்டில் பிறந்தார்." "ஏசு கிறிஸ்து மற்றும் புனித பால் ஆகியோருக்கு கிறித்துவத்தில் இருந்த கூட்டுச்

> "மனித வரலாற்றில் முஹம்மது மிகவும் செல்வாக்கு மிக்க ஒரு தனி நபராக கருதப்படுவதை நான் உணருகிறேன், மதசார்பற்ற மற்றும் மத செல்வாக்கின் இது இணையற்ற இணைப்பாகும்."
>
> மைகேல் ஹார்ட் (Michael Hart)

குறிப்பு: முஹம்மது ﷺ அவர்களை "இஸ்லாமிய நம்பிக்கையை தோற்றுவித்தவர்" என்று குறிப்பிடுவதை இஸ்லாமியர்கள் விரும்புவதில்லை. இஸ்லாமியர்கள் அவரை ஓர் இறைதூதராகவே கருதுகின்றனர்.

செல்வாக்கைவிட இஸ்லாத்தில் முஹம்மது ﷺ அவர்களின் செல்வாக்கு அதிகமாக இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. மத அடிப்படையில் மட்டும் மனித வரலாற்றில் ஏசு அவர்களின் செல்வாக்கைப் போன்று முஹம்மது ﷺ அவர்களுக்கும் செல்வாக்கு உள்ளது".

## முஹம்மது ஒரு தலைவர்

ஃப்ரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் அரசியல் தலைவருமான அல்ஃபோஸ் டி லமார்டின் (Alphonse de Lamartine) தனது "ஹிஸ்டரி டி லா துர்க்கீ (Histoire de la Turquie)" எனும் புத்தகத்தில் குறிப்பாக முஹம்மது ﷺ அவர்களைப் பற்றி பேசுகையில் பின்வருமாறு கூறுகிறார்:



*"தானாகவோ தற்செயலாகவோ எந்த ஒரு மனிதரும் தன்னை, அளவிடயியலாத எல்லையுள்ள, ஒரு கம்பீரமான எல்லைக்கு முன்மொழிந்ததில்லை: படைத்தவனுக்கும் படைப்பினங்களுக்கும் இடையேயான மூடநம்பிக்கைகளைக் கீழறுத்து, மனிதனுக்கு இறைவனையும் இறைவனுக்கு மனிதனையும் திருப்பித் தந்து, குழப்பமான பொருள் வாழ்விற்கும் உருவ வழிபாட்டின் கடவுளர்களுக்கும் இடையே பகுத்தறிவு மற்றும் தெய்வீகத்தினை மீண்டும் அமர்த்துவது. குறுகிய காலக்கட்டத்தில் இவ்வளவு மகத்தான மற்றும் உலகின் நீடித்து நிலைக்கும் புரட்சியாக எந்தவொரு மனிதரும் சாதித்ததில்லை."*



*"நோக்கத்தின் பெருமை, எளிமையான வழிமுறைகள் மற்றும் மகத்துவமான விளைவுகள் ஆகியவையே ஒரு மனிதனின் ஞானத்தின் அளவுகோள்களாக இருந்தால், நவீன வரலாற்றின் சிறந்த மனிதர்களை முஹம்மது ﷺ அவர்களுடன் ஒப்பிட யாருக்கு தைரியம் உள்ளது?".*

முஹம்மது ﷺ அவர்கள் ஆயுதங்களையும் சாம்ராஜ்ஜியங்களையும் பொருளை ஈட்டுவதற்காக உபயோகித்ததில்லை, மாறாக கருத்துக்கள், நம்பிக்கைகள் மற்றும் மனசாட்சிகளையே உபயோகித்தார் என்று லமார்ட்டின் மேலும் குறிப்பிட்டுள்ளார். அவர் ஒரு புத்தகத்தை நிறுவினார்; அதன் ஒவ்வொரு எழுத்தும் ஒரு சட்டமானது. உலகின் அனைத்து மொழிகள் மற்றும் சமயங்களின் மக்களையும் அரவணைக்கும் ஓர் ஆன்மீக தேசியவாதமானது.

# முஹம்மது ஓர் இறைத்தூதர்

## சுராகாஹ் (Suraqah) வின் கதை 20 ஆண்டுகளுக்கு பின்னர் நிறைவேற்றப்பட்ட உறுதிமொழி

முஹம்மது ﷺ அவர்கள் தனது நெருங்கிய தோழரான அபூபக்ர் (ரலி) அவர்களுடன் மதினாவிற்கு குடிபெயர்ந்த பொழுது (622 கி.பி மக்கா நகரின் தலைவர்கள் முஹம்மது ﷺ அவர்களை உயிருடனோ உயிரில்லாமலோ கொண்டுவருபவர்களுக்கு 100 ஒட்டகங்கள் வழங்கப்படும் என மாபெரும் பரிசுத்தொகையை அறிவித்தனர்.



துரதிஷ்டவசமாக, முஹம்மது ﷺ மற்றும் அவரது தோழர், பரிசுத்தொகையால் ஈர்க்கப்பட்ட சுராகாஹ் எனும் ஓர் அரபிய குதிரையாளனால் கண்டுபிடிக்கப்பட்டனர். செல்லும் வழியில் சில முறை குதிரை தடுமாறியதால் அவர் கீழே விழுந்தார். வழக்கத்திற்கு மாறான இந்த செயல்கள், முஹம்மது ﷺ அவர்களுக்கு இறைத்துணை இருப்பதையே மறைமுகமாக உணர்த்துவதாக கருதினார்.

சுராகாஹ் முஹம்மது(ஸல்) அவர்களை அணுகிய பொழுது, முஹம்மது(ஸல்) அவரிடம் கூறினார்: "உங்கள் மக்களிடம் திரும்பிச்செல்லுங்கள் மற்றும் ஒரு நாள் (இஸ்லாமிய நகரின் ஆட்சிக்கு கீழ்) நீங்கள் பெர்சியாவின் ஆட்சியாளரான சோஸ்ரோஸ்(Chosroes)-இன் வளையல்களை அணிவீர்கள் என நான் உங்களுக்கு உறுதிமொழி அளிக்கின்றேன்" எனக் கூறினார். பைஹகி அவர்களால் அல்-ஸூனன் அல்குப்ரா வில் குறிப்பிடப்பட்டுள்ளது (6/357), 13156

சுராகாஹ் ஆச்சர்யத்தில் முஹம்மது ﷺ அவர்களின் குறிப்பிட்டது ஈரானின் பேரரசர் குஸ்ரொவ் இப்னு ஹொர்முஸ் அவர்களின் வளையல்களா எனக் கேட்டார். அதற்கு முஹம்மது ﷺ முழு நம்பிக்கையுடன் "ஆம்" என பதிலளித்தார்கள். அவர்கள் இஸ்லாமிய மார்க்கம் பெர்சியாவை அடையும், மேலும் அது உலகம் முழுதும் அறியப்படும் என்பதில் முழு நம்பிக்கையுடன் இருந்தார்கள்.



சுராகாஹ் மக்காவிற்கு திரும்பிய பின்னரும், எட்டு வருடங்கள் கழித்து முஹம்மது ﷺ அவர்கள் மக்காவை அமைதியான் முறையில் கைப்பற்றும் வரையில் (630 கி.பி) சுராகாஹ் இஸ்லாத்தை ஏற்கவில்லை.

முஹம்மது ﷺ அவர்கள் 632 கி.பி இல் இயற்கை எய்தினார் ஆனால் அவர் சுராகாஹ்விற்கு கொடுத்த உறுதிமொழி உண்மை எனவும் ஒரு நாள் அது நிறைவேறும் எனவும் அவரது தோழர்கள் நம்பினர்.

காலம் கடந்தது, உமர் இப்னு அல்கத்தாப் (ரலி) அவர்கள் இரண்டாவது கலி:பாவானார்கள். (இஸ்லாமிய நகரின் ஆட்சியாளர்). அப்பொழுது, இஸ்லாம் பெர்சியாவை அடைந்தது 642 கி.பி ஆண்டில் மற்றும் பெர்சிய பேரரசர் குஸ்ரொவ்வின் அனைத்து செல்வங்களும் உமர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது.

உமர் (ரலி) அவர்கள் சுராகாஹ்வின் கதையை நினைவு கூர்ந்து தனது தோழர்களிடம் அவரை அழைத்து வரச்சொன்னார். (இந்த சம்பவம் நடந்து 20 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், சுராகாஹ்விற்கு வயதாகிவிட்டது).

தொழுகைக்குப் பிறகு, உமர் (ரலி) அவர்கள் சுராகாஹ்விடம் கூறினார்: “இதுவே பெர்சிய பேரரசர் குஸ்ரொவ்வின் வளையல்கள், இதைத்தான் முஹம்மது ﷺ அவர்கள் உங்களுக்கு உறுதியளித்திருந்தார்கள். அணிந்து கொள்ளுங்கள், அனைத்து முஸ்லிம்களும் இதனைக் கண்டு முஹம்மது ﷺ அவர்களின் உறுதிமொழி நிறைவேறியது என்று அறிந்துக் கொள்ளட்டும்.”

முஹம்மது ﷺ அவர்களின் உறுதிமொழி அவர் இயற்கை எய்தி பத்து ஆண்டுகள் கழித்து நிஜமானதைக் கண்டு சுராகாஹ் மற்றும் அனைவரின் கண்களிலும் ஆனந்த கண்ணீர் வழிந்தது.



## கஃபாவின் திறவுகோளின் கதை; ஒரு நிலைத்திருக்கும் சத்தியம்



கி.பி 630 ஆம் ஆண்டில் முஹம்மது ﷺ அவர்கள் மக்காவின் தலைவர்களை வெற்றி கொண்டு அமைதியான முறையில் மக்காவினுள் நுழைந்தார்கள். அவர்கள் தனது இல்லம் திரும்பினார்கள். ஆனால் அங்கு இனிவரும் காலத்தை அமைதியாக கழிக்க அல்ல, மாறாக கஃபாவின் (இறைவனை வணங்குவதற்காக இறைத்தூதர் இப்றாஹீம் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட சதுர வடிவ கட்டிடம்) உண்மையான நோக்கத்தை மீட்கவே அவர் கஃபாவைச் சுற்றியிருந்த அனைத்து சிலைகளையும் அகற்றிவிட்டு தனது தோழரான பிலாலை அழைத்து கஃபாவின் உச்சிக்கு சென்று பின்வருமாறு அழைக்கச் சொன்னார்:



இறைவன் மிகப் பெரியவன், இறைவன் மிகப் பெரியவன், அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்கு உரியவன் யாரும்








இல்லை என நான் சாட்சியளிக்கின்றேன் மற்றும் முஹம்மது அவனது தூதர் என நான் சாட்சியளிக்கிறேன்.

முஹம்மது ﷺ அவர்களுக்கு க:பாவின் கதவின் திறவுகோல் தேவைப்பட்டது, எனவே அவர்கள் (பனி ஸைபா குடும்பத்தைச் சேர்ந்த) உஸ்மான் இப்னு தல்ஹா (Othman Bin Talha) அவர்களை அழைத்தார்கள். இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் க:பாவின் திறவுகோலின் பாதுகாப்பாளர்களாக இருக்கும் கௌரவம் பனி ஸைபா குடும்பத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது என்பது கவனிக்கத்தக்கது. இந்த கௌரவமும் பொறுப்பும் தாத்தாக்களிடமிருந்து பிள்ளைகளுக்கு என வம்சாவளியாக உஸ்மான் இப்னு தல்ஹா வரை வந்துள்ளது.

அப்பொழுது உஸ்மான் இப்னு தல்ஹா புதிதாக முஸ்லிமாக மாறியிருந்தார். பல ஆண்டுகளின் முன்னர் அவர் முஹம்மது ﷺ அவர்களை நம்பாத காரணத்தினால் அவரையும் மற்றவர்களைப் போல் க:பாவின் உள்ளே நுழையவும் தொழ அனுமதிக்கவில்லை. முஹம்மது ﷺ அவர்கள் மக்காவிற்கு திரும்பிய பின்னர் உஸ்மான் அவர்களிடம் திறவுகோலை

கொடுத்து அதனைப் பாதுகாக்கும் தனது கௌரவத்தை விட்டுக் கொடுப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அச்சமயத்தில் பலர் முஹம்மது ﷺ அவர்களிடம் அந்த திறவுகோளைப் பாதுகாக்கும் கௌரவத்தை அளிக்குமாறு கேட்டார்கள்.

மேலும், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் அந்த திறவுகோளின் புதிய பாதுகாப்பாளர் யாரென்று அறிய ஆவலுடன் இருந்தனர்.

சில நாழிகைகள் மௌனத்திற்கு பிறகு, முஹம்மது ﷺ அவர்கள் கஃபாவின் கதவுகளை திறந்து அதனுள் இருந்த சிலைகளை அப்புறப்படுத்தினார்கள். பின்னர், உஸ்மான் இப்னு தல்ஹாவை பார்த்து (முந்தைய வாக்குறுதிகளை மதித்து) பின்வருமாறு கூறினார்கள்.

“இன்று விசுவாசம் மற்றும் பக்தியின் நாளாகும்! திறவுகோளைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து நியாயத் தீர்ப்பு நாள் வரை யாரும் இந்த உரிமையை உங்களிடமிருந்து (பனி ஷைபா குடும்பம்) எடுக்கமுடியாது, அவர் எல்லை மீறாதவராக இருக்கும் வரை” தபராணி அவர்களால் முஃஜமுல் கபீரில் குறிப்பிடப்பட்டுள்ளது (11/120) - 11234



இந்நாள் வரையில் நீடித்துள்ள நம்பகத்தன்மை: அந்த திறவுகோளின் பாதுகாவலர்களாக இந்நாள் வரையில் பனி ஸைபா வம்சாவழியினரே உள்ளனர் என்பதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படலாம்.

1400 ஆண்டுகளுக்கு மேல் கழிந்தும் பனி ஸைபாவின் குடும்பத்தினரிடம் தலைமுறை தலைமுறையாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நாள் வரையில் அவர்களிடம் இருந்து அதனை எடுப்பதற்கு யாரும் முயலவில்லை, இல்லையேல் முஹம்மது ﷺ அவர்களின் குறிப்பின்படி அவர் எல்லை மீறியவராகிவிடுவார்.

இன்றைய காலகட்டத்தில், சவுதியின் அதிகாரிகள் வருடாந்த புனிதயாத்திரைக்காக சுத்தம் செய்து தயார்படுத்தும் பொழுது, பனி ஸைபாவின் குடும்பத்திலிருந்து (தற்பொழுது சவுதியில் உள்ளனர்) ஒரு நபரைத் தொடர்புகொண்டு கஃபாவின் கதவுகளைத் தங்களுக்காக திறக்கச் சொல்வார்கள்.



# நமது காலத்தின் இறைத்தூதர், முஹம்மது

முஹம்மது ﷺ அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் போற்ற அவரது வாழ்வை நாம் நடுநிலையான முறையில் அணுக வேண்டும் என்று “நமது காலத்தின் இறைத்தூதர் முஹம்மது (Muhammad a prophet for our time)” எனும் நூலாசிரியர் கரென் ஆர்மரஸ்ட்ராங் (Karen Armstrong) குறிப்பிட்டுள்ளார். அவரிடம் முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, மேற்கத்திய மக்களுக்கும் முக்கிய போதனைகள் இருந்தன.

முஹம்மது ﷺ அவர்கள், போர் சூழ்ந்த அரேபியாவில் அமைதியை நிலைநாட்ட அரும்பாடுபட்டார்கள். பொறாமை, அநீதி, மற்றும் அகந்தைக்கு எதிரான அயராத பிரச்சாரமாக இருந்தது அவரது வாழ்க்கை.

நாம் பேராபத்தைத் தடுக்க முற்படுவோமேயானால், இஸ்லாமிய மற்றும் மேற்கத்திய உலகங்கள் சகிப்புத்தன்மை மட்டுமல்ல பரஸ்பரம் பாராட்டவும் கற்றுக்கொள்ள வேண்டும் என கரென் நம்பினார். அதனைத் துவங்குவதற்கு முஹம்மது ﷺ அவர்களின் விம்பம் தான் சரியான இடமாக இருக்கும்.





இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசலிலுள்ள தங்க முலாம் பூசப்பட்ட கதவு. (அல்-மஸ்ஜித் அந்நபவி), மதீனா, சவுதி அரேபியா

அத்தியாயம்
12

# இஸ்லாமிய கலை, சித்திரமொழி மற்றும் கட்டிடக்கலை



பீட்டர் கௌல்ட் (Peter Gould) அவர்களால் எடுக்கப்பட்ட ஓமனில் உள்ள சுல்தான் காபூஸ் பெரிய பள்ளியின் (Sultan Qaboos Grand Mosque) புகைப்படம்



இஸ்லாமிய கலை மற்றும் சித்திரமொழி, பஹ்ரைன்

**பீட்டர் கௌல்ட்** (Peter Gould), ஆஸ்திரேலியா

இஸ்லாத்தின் சமகால வரையியல், கலை, புகைப்படம், வழமையான காட்சிகள் மற்றும் ஆன்மீக கலாச்சாரத்தில் தான் கொண்ட பேரார்வத்தால் சிட்னி நகரின் வடிவமைப்பாளர் மற்றும் தொழில்நுட்ப கலைஞரான பீட்டர் கௌல்ட் அஜான் (Azaan) (www.azaan.com.au) நிறுவினார். இஸ்லாமிய நாடுகளில் அவரது பயணங்கள் மற்றும் ஆராய்ச்சிகள், தவறான புரிந்துணர்வுகள் கொண்ட உலகிற்கு எதிர்வினையாற்றக்கூடிய வகையில் கலாச்சார இணைப்புகளை ஈர்ப்பதாய் உள்ளன. கண்காட்சிகள் மற்றும் மற்ற கலைஞர்களுடனான தொடர்பினாலும் பீட்டர் அவர்களின் வேலைகள் உள் மற்றும் வெளிநாடுகளில் பல பார்வையாளர்களை அடைந்துள்ளது.

**பீட்டர் ஸான்டர்ஸ்** (Peter Sanders), **யு.கே** (U.K)

பீட்டர் சான்டர்ஸ், ப்ரிடிஷைச்(British) சேர்ந்த ஒரு தொழில்முறையிலான புகைப்பட கலைஞர். அவர் தனது 1960 களின் இடையே தனது தொழில்வாழ்வைத் தொடங்கினார். உலகம் முழுவதிலும் இருந்து இரண்டரை இலட்சத்திற்கும் மேலான புகைப்படங்களின் களஞ்சியத்தை அவர் உருவாக்கினார். அவரது முதல் புத்தகமான “இன் தி ஷேட் ஆஃப் தி ட்ரீ (In the Shade of the Tree)” எனும் புத்தகத்தில் உலகம் முழுவதிலும் உள்ள இஸ்லாமிய கலாச்சாரத்தின் பன்முகத்தன்மையை மிக அழகாக விவரித்துள்ளார். மொராக்கோ (Morocco) அரசாங்கத்தால் அதன் நாட்டிலுள்ள முக்கிய பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய கட்டிடக்கலையைப் புகைப்படம் எடுத்து ஆவணமாக்குவதற்காக ஸான்டர்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.






## ஹஸ்ஸன் செலபி (Hassan Celebi), துருக்கி

அவர் உலகிலேயே மிகவும் பிரபலமான இஸ்லாமிய சித்திரமொழி வடிவமைப்பாளர்களில் ஒருவராவார். 1976 ஆம் ஆண்டு “இஜாஸா (ijazah)” எனும் இஸ்லாமிய பட்டப்படிப்பை அவர் கற்றுக் கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அவர் பட்டமளித்துள்ளார். உலகிலுள்ள புகழ்பெற்ற இஸ்லாமிய வரலாற்று இடங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் தனித்துவமான சித்திரமொழியினை அவர் உருவாக்கியுள்ளார். உதாராணங்கள்: சவுதி அரேபியாவின் அல்மதீனாவில் உள்ள இறைத்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் பள்ளிவாசல் மற்றும் கூபா (Quba) பள்ளிவாசல், இஸ்தான்புல்லில் உள்ள நீல பள்ளிவாசல் (Blue Mosque), ஜெர்மனியின் ஃபோட்ர்ஜியமில் (Pfortzheim) உள்ள ஃபாதிஹ் (Fatih) பள்ளிவாசல், தென் ஆஃப்ரிக்காவின் ஜோகன்ஸ்பர்க்கில் உள்ள ஜூம்ஆ பள்ளிவாசல், கஸகஸ்தானில் உள்ள அல்மாடி ஜூம்ஆ பள்ளிவாசல் மற்றும் குவைத்தில் உள்ள இஸ்லாமிய மருத்துவக் கழகம்.









முஹம்மது ஸகரியா (Mohamed Zakariya), யு.எஸ்.ஏ



அமெரிக்காவைச் சேர்ந்த திரு. ஸகரியா, அமெரிக்காவில் புகழ்வாய்ந்த இஸ்லாமிய சித்திரமொழியாளராக கருதப்படுபவர். அவரது 19 வயதில் மொரோக்கோ, ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து நாட்டில் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய சித்தரமொழியினைக் கற்றார். அவர் துருக்கியிலிருந்து இஸ்லாமிய சித்திரமொழியில் இரண்டு உரிமங்களைப் பெற்ற முதல் அமெரிக்கராவார். அவர் தனது யூ.எஸ் தபால் தலையின் “ஈகைப் பெருநாள் வாழ்த்துக்கள் (Eid Greetings)” வடிவமைப்புகளுக்காகவும் அறியப்படுபவர். பாரம்பரிய அரேபிய மற்றும் ஒட்டம் துருக்கியின் சித்திரமொழியில் அவர் கவனம் செலுத்தினார்.














இது பின்வரும் வாசகத்தின் சித்திரமொழி வடிவமைப்பு: *நன்மைக்கு நன்மையைத் தவிர (வேறு) கூலி உண்டா?*திருக்குர்ஆன் (55:60)

## நுரியா கார்சியா மாஸிப் (Nuria Garcia Masip), ஸ்பெயின்







அவர் ஸ்பெயின் நாட்டின் இபிஸா (Ibiza) நகரைச் சேர்ந்த தொழில்முறையிலான சித்திரமொழி வடிவமைப்பாளராவார். தி ஜார்ஜ் வாஷிங்டன் (The George Washington) பல்கலைக்கழகத்தில் இலக்கியத்திற்கான பட்டத்தைப் பெற்ற பின்னர் மொரோக்கோவில் இஸ்லாமிய கலைகளைக் கற்று, பின்னர் இஸ்தான்புல் சென்று அங்கு 2007ஆம் ஆண்டு இஸ்லாமிய சித்திரமொழியில் பட்டம் பெற்றார். அவர் யுனைடெட் ஸ்டேட்ஸ், மொரோக்கோ, துருக்கி, ஐரோப்பா, தென் ஆஃப்ரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கண்காட்சிகள், போட்டிகள் மற்றும் பணிமனைகள் மூலம் தனது சித்திரமொழி வாழ்வைத் தொடர்கின்றார். அவர் தனது அழகியலான வழங்கல் மூலம் பாரம்பரிய உரைகளுக்கு புத்துணர்வை அளிக்கின்றார்.



**ஹாஜி நூர்தீன்** (Haji Noor Deen), **சீனா**

சீனாவின் ஷங்டாங் மாகாணத்தில் (Shangdong Province) 1963 ஆம் அண்டு பிறந்தவர். மிகவும் புகழ்பெற்ற சித்திரமொழியாளர்களில் ஒருவரான அவர், சீன மற்றும் அரபிய சித்தரமொழிகளின் தனித்துவமான இணைப்பை உருவாக்கினார்.





இந்த கலைவடிவிலான படைப்புகள் “அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மது அவர்கள் அல்லாஹ்வின் தூதுவராவார்” என்பதைக் குறிக்கின்றது. கீழே உள்ள குவிமாடம், “முஹம்மது அவர்கள் அல்லாஹ்வின் தூதுவர்” எனும் வார்த்தைகளால் அமைந்துள்ளது.



**நோபுகோ சகாவா** (Nobuko Sagawa), **ஜப்பான்**



இவர் ஜப்பானில் மிகவும் பிரபலமான அங்கீகரிக்கப்பட்ட அரபிய சித்திரமொழி வல்லுனர் ஆவார். ஜப்பானில் கலையில் பட்டம் பெற்ற அவருக்கு அரபிய சித்திரமொழியில் ஆர்வம் ஏற்பட்டது. ஜப்பானிய எழுத்துக்கள் (கானா (kana)). சீன எழுத்துக்கள் (கான்ஜி (kanji)) மற்றும் அரபு எழுத்துக்கள் ஆகியவற்றை இணைத்து திருமதி. சகாவா புதிய பாணியை உருவாக்கினார். அரபு எழுத்துருக்கள் “துலுத் (Thuluth)” மற்றும் “கு:பி (Kufi)” ஆகியவற்றில் அவருக்கு இருந்த வல்லமையால் அவர் புதுமையான சித்தரமொழி வடிவமைப்புகளை உருவாக்கினார்.



இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மராயங் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி (வேறெவ்வாரும்) அனுப்பவில்லை; ஆனால் மனிதர்களில் பெரும்பாலானோர் (இதை) அறியமாட்டார்கள். --திருக்குர்ஆன் (34:28)



## குறிப்புரைகள் (References)


- அப்துல் கனி, எம், இல்யாஸ், (2003). அல்-மதீனா அல்-முனவ்வராஹ்-வின் வரலாறு, ரஷீத் அச்சகம், கே.எஸ்.ஏ (Abdul Ghani, M. Ilyas, (2003). The History of Al-Madinah Al-Munawwarah, Rasheed Publishing, KSA.)
- அடைர், ஜான், (2010). முஹம்மது அவர்களின் தலைமைத்துவம். கோகன் பேஜ், யு.கே (Adair, John, (2010). The Leadership of Muhammad. Kogan Page, UK.)
- அஹ்மத்,மும்தாஜ், (1996) இஸ்லாம் மற்றும் ஜனநாயகம்: வளரும் ஒருமித்த அபிப்பிராயங்கள்; மத்திய கிழக்கு நாளேடு. (Ahmad,Mumtaz, (1996). Islam and Democracy: The Emerging Consensus; Middle East Affairs Journal.)
- அல்-மஃஹ்லுத், சமி, (2008). இறைத்தூதர் முஹம்மது அவர்களின் வாழ்க்கை வரலாற்று ஏடு. ஒபைகன், கே.எஸ்.ஏ Al-Maghluth, Sami, (2008). The Historical Atlas for Prophet Muhammad Life. Obaikan, KSA.
- அல்-முதவா, ஜாஸேம், (2001). சம காலத்தில் வாழ்ந்த இறைத்தூதரின் துணைவியர்கள். குவைத். (Al-Mutawa, Jassem, (2001). The Wives of the Prophet in Contemporary Time. Kuwait.)
- அல்-முபாரக்புரி, சஃபிஉர்ரஹ்மான், (1996), அடைக்கப்பட்ட அமிழ்தம் - உன்னத இறைத்தூதரின் வாழ்க்கை வரலாறு, தாருஸ்ஸலாம், கே.எஸ்.ஏ. (Al-Mubarakpuri, Safi-ur-Rahman, (1996). The Sealed Nectar: Biography of the Noble Prophet Muhammad, Darussalam, KSA.)
- அல்-சயீத், சமீராஹ், (1995). நபிகள் நாயகம் ﷺ அவர்களின் வாழ்க்கை வரலாறு, தி சயின்டிஸ்ட் பிரஸ், முதல் பதிப்பு, சிரியா (Al-Zayed, Samirah, (1995). The Inclusive Book About Prophet Muhammad's Life, The Scientific Press, First Edition, Syria.)
- ஆர்ம்ஸ்ட்ரோங், கரேன், (2002). இஸ்லாம்: ஒரு சிறிய வரலாறு. ஹார்ப்பர் கொலின்ஸ், நியூ யார்க், யூ.எஸ்.ஏ (Armstrong, Karen, (2002). Islam: A Short History. Harper Collins, New York, USA.)
- ஆர்ம்ஸ்ட்ரோங், கரேன், (1992). முஹம்மது: இறைத்தூதரின் வாழ்க்கை வரலாறு. ஹார்ப்பர் கொலின்ஸ், நியூ யார்க், யூ.எஸ்.ஏ (Armstrong, Karen, (1992). Muhammad: A Biography of the Prophet. Harper Collins, New York, USA.)
- ஆர்ம்ஸ்ட்ரோங், கரேன், (2007). முஹம்மது: நமது சமகாலத்தின் இறைத்தூதர், ஹார்ப்பர் கொலின்ஸ், நியூ யார்க், யூ.எஸ்.ஏ (Armstrong, Karen, (2007). Muhammad: A Prophet for Our Time. Harper Collins, New York, USA.)
- அல்-நவவி, ஒய்.எஸ் (2003). ரியாழுஸ் ஸாலிஹீன். இறைத்தூதர் முஹம்மது அவர்களின் அதிகாரப்பூர்வ கூற்றுகள், அரேபிய உரை - கெய்ரோ, எகிப்து (Al-Nawawi, Y.S., (2003). Riyadh Al-Saliheen. Authentic Sayings of Prophet Muhammad, Arabic Cover -Cairo, Egypt.)

இஸ்லாத்தின் இறைத்தூதர்

# முஹம்மத்

வாழ்க்கை வரலாறு மற்றும் படங்களுடனான கையேடு

"உலகில் மிகவும் செல்வாக்குள்ள நபர்களின் பட்டியலில் முஹம்மத் அவர்களை முன்னெடுப்பதற்கான எனது கருத்து சில வாசகர்களை ஆச்சரியப்படுத்தி இருக்கலாம் மேலும் சிலர் கேள்விக்குறியதாக்கலாம். ஆனால் வரலாற்றில் இந்த ஒரு மனிதர் மட்டுமே மதம் மற்றும் மதச்சார்பற்ற இரு மட்டங்களிலும் வெற்றி பெற்றவர்."

மைக்கேல் ஹ. ஹார்ட் (Michael H. Hart)

" தி 100: ராங்கிங் ஆ:ப் தி மோஸ்ட் இன்:ப்ளுஏன்ஷியல் பெர்சன்ஸ் இன் ஹிஸ்டரி"
*(The 100: A Ranking of the Most Influential Persons in History)* எனும் நூலின் ஆசிரியர்



| | |
|---|---|
| நற்சான்று பதிவுகள் | அவரது பண்புகள் |
| வாழ்க்கை வரலாறு | நபித்துவம் |
| மதிப்பு மற்றும் ஒழுக்கம் | பெண்கள் |
| மனித உரிமைகள் | சுற்றுச்சூழல் |
| அற்புதங்கள் | அவரது கூற்றுகள் |
| கலை கட்டிடக்கலை | சித்திர மொழி |

உலகின் பல்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட இஸ்லாமிய கலை மற்றும் கட்டிடக்கலை புகைப்படங்கள்



ISBN 978-0-9807277-6-0

இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத்
வாழ்க்கை வரலாறு மற்றும் படங்களுடனான கையேடு